
# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

நவம்பர் 2015
பருவம் 2 புனல் 14

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20



# கட்டுடைத்த காட்டாறு



காட்டாறு- கடந்த 2014 ம் ஆண்டு அக்டோபரில் மாத இதழாகத் தொடங்கப்பட்டது. முதல் இதழிலிருந்தே கடும் எதிர்ப்புகளையும், தடைகளையும் சந்தித்தது. முகநூல், வாட்ஸ்- அப் யுகத்தில் அச்சு ஊடகத்தில் ஒரு இதழ் நடத்துவது எந்த அளவுக்கு சமுதாயத்திற்குப் பயன்படுமோ, என்று தயங்கிய படித்தான் தொடங்கப் பட்டது. ஆனால் காட்டாறில் வெளியான பெரியாரின் கருத்துக்களின் தாக்கம் தொடர்ந்து இதழை நடத்த வேண்டிய நிலைக்கு நம்மைக் கொண்டு சென்றன. முதல் ஆண்டை நிறைவு செய்து விட்டோம். ஓராண்டாக வெளியான காட்டாறு அதைப் படிப்பவர்களிடையே என்ன மாதிரியான எதிர்வினைகளை உருவாக்கியுள்ளது என்பதை அறியவும், பெரியாரின் விமர்சனப் பண்பாட்டை நடைமுறைப் படுத்தவும் விரும்பினோம். எனவே, இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவை காட்டாறு திறனாய்வு விழாவாக நடத்த முடிவு செய்தோம். திறனாய்வு மலர் ஒன்றையும் வெளியிட முடிவு செய்தோம். கடந்த ஜூன் மாத காட்டாறு இதழில் காட்டாற்றின் அடுத்த





இலக்கு என அறிவிக்கப் பட்ட 'அடுத்த தலைமுறைக்கு அறிவாயுதம்' என்ற திட்டத்தை அதாவது பெரியாரின் எழுத்துக்கள் பேச்சுக்களை யூனிகோடாக, இலவசமாக இணையதளங்களில் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற திட்டத்தை நிறைவேற்றி www.periyarwritings.org என்ற இணையதள வெளியீட்டையும் ஒரே விழாவாக நடத்த முடிவுசெய்து பணிகளைத் தொடங்கின. குறகிய காலத்தில் திட்டமிடப் பட்ட இந்த மலர் வெளியீடு, திறனாய்வு விழா, இணையதள வெளியீடு என ஒவ்வொன்றுக்கும் தனித்தனிக் குழுக்கள் பொறுப்பேற்று சரியாகப் பணிகளைச் செய்து முடித்தன. வழக்கமான பொதுக் கூட்டங்களைப் போல அல்லாமல், மேடைப் பேச்சுக்களின் நேரம் மிகவும் குறைவாக இருக்க வேண்டும். பார்வையாளர்களின் பங்கேற்பு அதிகமாக இருக்க வேண்டும். அதிகப்பட்சம் இரண்டு மணி நேரத்தில் நிகழ்வுகள் முடிய வேண்டும். முக்கியமாக எந்தத் தனிநபரையும் முன்னிலைப் படுத்தாமல், பணிகளை மட்டுமே முன்னிலைப் படுத்த வேண்டும் என்று திட்டமிடப்பட்டது.





24 அக்டோபர் கோவையில் நடைபெற்ற

**திறனாய்வு விழா**
**திறனாய்வு மலர் வெளியீடு**
**இணையதள வெளியீட்டு நிகழ்வுகள்**

......தொடர்ச்சி 32 ஆம் பக்கம்

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**
யாழ் மொழி
பெரியார் செல்வி
பிரபாகரன் அழகர்சாமி
கணியூர் தமிழ்ச்செல்வன்
அ.ப. சிவா
செல்லையா முத்துச்சாமி
மே.கா. கிட்டு
பூ. மணிமாறன்

**ஆசிரியர்**
சி. இராவணன் 97868 89325

**உரிமை & வெளியீடு**
சி.விஜயராகவன்

**சட்ட ஆலோசனைக்குழு**
வழக்கறிஞர் க.ஜெயராஜ்
வழக்கறிஞர் வெ.பழனிச்சாமி
வழக்கறிஞர் பிரபாத்

**விளம்பரத் தொடர்பு**
சி. விஜயன் 94881 79109,
ஜீவாநகர் குமார் 99944 77013

**விற்பனைத் தொடர்பு**
ஆ. பாண்டியன் 96591 12891,
கடத்தூர் காந்தி 99428 76665
வெங்கட் 95788 44141

**சந்தா தொடர்பு**
அ. கிருட்டிணகுமார்
97882 97428

**வடிவமைப்பு**
Mukizh Media

**அச்சு**
செல்வக்குமார்
BS Graphics, Chennai

**ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு**
103/104, Nethaji Road,
M.C.Complex,Pollachi. 642 001
kaattaaru2014@gmail.com

# இந்தியத் துணைக் கண்டத்தை உலுக்கிய இந்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம்!

கலகக்காரத் தோழர் பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியின் ஒரு பகுதியாக அவர் நடத்திய ஜாதி ஒழிப்புக்கான இந்திய அரசமைப்புச் சட்ட எரிப்பு போராட்டத்தின் ( 1957 – 2015 ) 58 ஆம் ஆண்டின் நிறைவு நாளில் அந்த மகத்தான போராட்டம் குறித்தான தகவல்களை காட்டாறு தொகுப்புக்குழு பகிர்ந்து கொள்கிறது.

> “ஒரு சுதந்திர நாட்டில் ஜாதியைப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டம் இருக்கலாமா? ஜாதி பாதுகாக்கப்படும் நாட்டில் சுதந்திரம் இருக்குமா?” – கலகக்காரத் தோழர் பெரியார், விடுதலை 08.11.1957

> “இந்த நாட்டில் ஜாதிமுறைப் பிரிவு கீழ்ச்சாதி, மேல் சாதி இருந்து வருகிறது. ஆட்சியும் ஆதிக்கமும் மேல் சாதிக்குச் சொந்தம் அவர்களிடம் அல்லலும் அவதியும் படுவது கீழ்ச்சாதிக்காரர்களுக்குச் சொந்தம். இது சாத்திரப்படி, சட்டப்படிப் பாதுகாக்கப்படுகிறது. எந்த விலை கொடுத்தாயினும் இதை மாற்றுவதுதான் எங்கள் முயற்சி.” – கலகக்காரத் தோழர் பெரியார், விடுதலை 18.11.1957

தமிழனை அடிமைகளாக கீழ்ச்சாதி மக்களாக்கி வைத்துள்ள இந்திய அரசியல் சாசனத்தை தீயிட்டுக் கொழுத்தி சிறையேகி வெங்கொடுமைகளால் விதைகளாய் வீழ்ந்த ‘1957 ஆம் ஆண்டு நவம்பர் 26 போர்க்களத்து’ திராவிடர் பேரியக்க மாவீரர்களுக்கு வீரவணக்கம்..!!

பெரியார் என்ற அந்த மாமனிதர் தமிழர்களின், உழைக்கும் மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக, மேம்பாட்டிற்காக எடுத்த போராட்டங்கள் ஏராளம்.

போராட்டத்தையே வாழ்க்கையாக கொண்டிருந்த கலகக்காரத் தோழர் பெரியார் எடுத்த போராட்டம் பெயர்களால் வேறுபட்டிருந்தாலும் அவற்றின் உள்ளடக்கம் ஜாதியத்தை ஒழிப்பதாகவே இருக்கும், பொதுவாக எல்லா ஆதிக்க சக்திகளும் மக்களை ஒன்றிணைய விடாமல் பிரித்துவைக்கவே விரும்பும். கையில் கிடைக்கும் துரும்பைக் கூட மக்களைப் பிரிக்க பிளக்க பயன்படுத்தும்!

26.12.1926 ல் சுயமரியாதை இயக்கம் நிறுவப்பட்ட நாள் முதற்கொண்டு பெரியார் மறையும் (24.12.1973) நாள் வரையில் ‘பிறவி வருண சாதி’ ஒழிப்பில் நாட்டம் கொண்டிருந்தார்.

1929 செங்கற்பட்டு, 1930 ஈரோடு, 1931 விருதுநகர் மாநாடுகளிலும், 1932 சுயமரியாதை இயக்க சமதர்ம கட்சியாரின் வேலைத்திட்டக் கூட்டத்திலும், 1940 திருவாரூர், 1944 சேலம், 1945 திருச்சி, 1948 தூத்துக்குடி நகரங்களில் நடைபெற்ற மாநாடுகளிலும் ‘பிறவி வருண சாதி’ ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு மற்றும் தீண்டபடாதாருக்கு சமூக சமத்துவ உரிமை, எல்லாதுறைகளிலும் முன்னுரிமை பற்றி தவறாமல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

03.11.1957 ல் தஞ்சாவூரில் நடைபெற்ற சிறப்பு நிதியளிப்பு விழாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், ‘பிறவி வருண சாதி ஒழிப்புக்கான நேரடிப் போராட்டத்திற்கு ஆணையிட்டது. எப்படி அது நேரடிப் போராட்டம் ?

"சதுர்வர்ணயம் மயா ஸ்ருஷ்டம் குண-கரும விபாகச:
தஸ்ய கர்த்தாராமயி மாம் வித்த்யகர்த்தார-மவ்யயம்" - அத்.4, சுலோகம் 13 - பகவத் கீதை.

"நான்கு வர்ணங்கள் என்னால் உண்டாக்கப்பட்டது; அவரவர்களுக்குரிய கருமங்களை அவரவர் மீறாமல் செய்ய வேண்டும். அதனை மாற்றிச் செயல்பட வைக்க அந்த வருண தர்ம உற்பத்தியாளனாகிய என்னால் கூட முடியாது." (Though I am its Creator, know Me to be incapable of Action or change)

குறைந்தது ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாக எல்லா இந்துக்களின் பேரில் சுமத்தப்பட்ட நால் வருண பிறவி சாதி இழிவுக்கு - வழக்கம் (Custom) , பழக்கம் (Traditiom) சாதி வழக்கம் (Caste Custom),பிராந்திய வழக்கம் (Territorial Custom), நம்பிக்கை (Faith) என்ற பெயர்களால் - 'நால்வருண பிறவிசாதி உண்டு' என்பதை 26.01.1950 ல் நடப்புக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டம் காப்பாற்றுகிறது......?

இந்த ஜாதியைப் பாதுகாக்கும் சட்ட ஏற்பாட்டை ஆதிசங்கரனால் தோற்றுவிக்கப்படாத போலியான காஞ்சி சங்கர மடத்தின் முன்னாள் மடாதிபதியான சந்திரசேகரனின் ஆலோசனையின் பேரில், அக்னி கோத்திர இராமானுஜ தாதாச்சாரி என்கிற அய்யங்கார் பார்ப்பானின் இடைவிடாத முயற்சியால் பார்ப்பனர்களே நிறைந்திருந்த அரசமைப்புச் சட்ட உறுப்பினர்களின் துணையோடு அரசமைப்புச் சட்டத்தில் நுழைக்கப்பட்டது.

- ஆதாரம்.(சங்கராச்சாரி யார்? சங்கர மட ரகசியங்கள்! - நூல்)

அப்படிக் காப்பாற்றுவதற்கென்றே எழுதப்பட்டுள்ள இந்திய அரசமைப்புச்சட்ட விதிகள் 13, 25, 26, 72 ஆகியவற்றை இந்தியரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்று இந்திய அரசைக் கோரி நடத்தப்பட்ட அரசமைப்புச் சட்டஎரிப்புப் போராட்டம், நேரடியான - அமைதியான - தத்தம்மை வருத்திக் கொள்ளும் போராட்டமே ஆகும்.

அது கருதி, அந்தச் சட்ட விதிகளைத் தமிழாக்கம் செய்து, அச்சுப்போட்டு, அதனை ஊர்தோறும் பரப்பிட பொதுக்கூட்டங்களை நடத்தியதின் விளைவாக, 26.11.1957 ல் 10,000 பெரியாரின் கருப்புச்சட்டைத் தோழர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தை எரித்தனர்.

இந்தப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தோழர்கள் கலந்துகொண்ட போதும் - 3000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றங்களில் நேர் நிறுத்தப்பட்டார்கள். அனைவரும் கலகக்காரத் தோழர் பெரியாரின் ஆணைப்படி கீழ்கண்ட வாக்குமூலத்தை நீதிபதிகள் முன்னாள் எழுத்துப் பூர்வமாக அளித்தார்கள்.

மேன்மை தங்கிய.............................. கோர்ட்டார் அவர்கள் சமூகத்திற்கு

வாதி: (போலீசார்)

எதிரி:

வழக்கு எண் : 57

சமூகம் கோர்ட்டில் எதிரி வாசித்துக் கொடுக்கும் ஸ்டேட்மெண்ட்

"நான் ஜாதிஒழிப்புக் கிளர்ச்சிக்காரன். இந்திய அரசியல் சட்டத்தில் ஜாதிக்கும் அதை உண்டாக்கிய மதத்துக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டம் தமிழர் நலனுக்காக வகுக்கப்படவில்லை, அச்சட்டத்தை, திருத்தக் கூடிய வசதி தமிழர்களுக்கு இல்லை.

ஆதலால், என் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளும் அறிகுறியாக இச்சட்டத்தைக் கொளுத்தினேன். இப்படி கொளுத்துவதற்கு எனக்கு உரிமை உண்டு. இதனால் எந்த உயிருக்கும் பொருளுக்கும் சேதமில்லை. ஆதலால் நான் குற்றவாளி அல்ல. இந்த நீதிமன்ற நடவடிக்கையில் நாம் கலந்து கொள்ள விரும்பவில்லை. நான் வழக்காட விரும்பவில்லை. நான் குற்றவாளி என்று கருதப்பட்டால் அதற்குரிய தண்டனையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறேன்."

இடம்:

தேதி: எதிரியின் கையெழுத்து - விடுதலை 26.11.1957

இப்படி ஒரு தலைவர், இயக்கம் தன்னலமறுத்த தோழர்களை கண்டதுண்டா..? இப்படிப்பட்ட ஒரு போராட்டம் அதுவரையில் உலகில் எந்த நாட்டிலும் நடக்கவே இல்லை..!

இந்திய அரசமைப்புச் சட்டத்தை எரிப்பது என்ற போராட்டத்தை இந்தியாவில் - தமிழ்நாட்டில் தோழர் பெரியாரால், பெரியாரின் தோழர்களால் தான் முதன்முதலில் நடத்தப்பட்டது. அதுபோலவே ஜாதியை ஒழிப்பதற்காக இந்தியாவிலேயே பல்லாயிரக்கணக்கான மக்களால் முதன்முதலில் நடத்தப்பட்ட போராட்டம் - தோழர் பெரியாரின் இயக்கம் நடத்திய இந்திய அரசமைப்புச் சட்டஎரிப்புப் போராட்டம் மட்டும்தான்.

இப்போராட்டத்தில் முதியோர், நிறைமாத கர்ப்பிணிகள், கைக்குழந்தைகளுடன் பெண்கள், சிறுவர், சிறுமியர் என அனைவரும் களம்கண்டனர். இவர்கள் மூன்று மாதம் முதல் மூன்று ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு தமிழ்நாட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

சிறைக்கொடுமை காரணமாகச் சிறைக்குள் அய்ந்து தோழர்களும், விடுதலையான சில நாட்களுக்குள் பதின்மூன்று தோழர்களும் மாண்டு போயினர் - என்கிற இந்த தியாக வரலாறு இந்திய நாட்டில் நடைபெற்ற எந்தப் போராட்டத் தியாகங்களுக்கும் சற்றும் குறைவானது அல்ல! இவ்வளவு பெரிய போராட்டத்திற்கும் மற்றும் இழப்புகளுக்கு பிறகும் சாதி ஏன் ஒழியவில்லை ?, இதோ தோழர் பெரியார் கூறுகிறார்..!

நாடார் நாடரையும், வன்னியர் வன்னியரையும், நாயுடு நாயுடுவையும், அய்யர் அய்யரையும், முதலியார் முதலியாரையும், ஆதிதிராவிடர் ஆதிதிராவிடரையுமே திருமணம் செய்து கொண்டிருந்தால்! இன்னும் பத்து நூறு ஆண்டுகள் ஆனாலும் 'சாதி ஒழியப் போவது இல்லை' (தோழர் பெரியார், விடுதலை 01.01.1950

எனவே ஒரு சாதிக்குள் நடக்கும் திருமணங்களை மறுப்போம்.! சாதி மறுப்புத் திருமணங்களை வரவேற்போம்..!! கலகக்காரத் தோழர் பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியை வென்றெடுக்க உறுதியேற்போம்...!!!

- பொள்ளாச்சி சி.விஜயராகவன்
வெளியீட்டாளர்.

# அருந்ததியர் மக்கள் மீது தொடரும் பள்ளர்சாதி வெறியாட்டத்தை

# ஆதித்தமிழர் பேரவை வன்மையாக கண்டிக்கின்றது

**தோழர் அதியமான் அறிக்கை**

மதுரை மாவட்டம் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அலங்காநல்லூர் அதலை அருகில் உள்ள பட்டக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த புதியதமிழகம் கட்சியின் ஆதரவாளர் இராஜா என்பவர், பள்ளர்சாதி வெறியோடு பக்கத்து ஊர் புதூரை சேர்ந்த பள்ளர்களையும் ஒன்று திரட்டிக்கொண்டு அருந்ததிய மக்கள் மீது வன்முறை கொலை வெறியாட்டம் நடத்தியுள்ளார். இந்த வன்செயலை ஆதித்தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது.

25 குடும்பங்களே உள்ள அருந்ததிய மக்களை பட்டக்குறிச்சி மற்றும் புதூரை சேர்ந்த பள்ளர்கள் கும்பலாக ஒன்று கூடி கொடிய ஆயுதங்களுடன் கொடூரத்தாக்குதல் நடத்தியதில் 3 பெண்கள் உட்பட 9 பேர் மண்டை, கை கால்கள் உடைபட்டு தற்போது மதுரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடெங்கும் நடந்தேறும் ஆதிக்க சாதிவெறியர்களின் சாதிஆதிக்க வெறியாட்டங்களை கண்டித்து, தலித்மக்கள் ஒன்றுசேர்ந்து தொடர் போராட்டங்களை நடத்தி கொண்டிருக்கும் சூழலில், அருந்ததியர் மக்கள் மீது பள்ளர்களும் பறையர்களும் நடத்திடும் வன்முறை வெறியாட்டங்கள் மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தி தலித் ஒற்றுமையை கேள்விக்குறியாக்கி கொண்டிருக்கின்றது.

பரமக்குடி துப்பாக்கிச்சூடு, தாமிரபரணிப் படுகொலை, கொடியங்குளம் சொத்துக்கள்சூறை, புளியங்குடிக் கழுத்தறுப்பு என பள்ளர்கள் மீது நடந்தேறிய வன்செயல்களுக்கு எதிரான போராட்டக் களத்தில் பள்ளர்களுக்குத் துணையாக நின்ற அருந்ததியர் மக்கள் மீது பள்ளர்கள் காட்டும் சாதிவெறிப் போக்கு மிகவும் வேதனையளிப்பதாக உள்ளது.

மத்தியில் ஆளும் மதவாத பாரதிய ஜனதா கட்சியின் மதவெறி, சாதிவெறி சதிக்கு வலு சேர்க்கின்ற விதமாக, தலித்துகளில் இருந்து விடுபட்டு பிற்பட்டோர் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும் என்ற, ஒரு சில பள்ளர்சாதித் தலைவர்களின் முயற்சியின் காரணமாக பாஜக தலைவர் அமித்ஷா பங்கேற்ற மதுரை மாநாட்டின் எதிரொலியாக இது போன்ற சம்பவங்கள் நடந்தேறுகிறதோ! என்ற சந்தேகம் நமக்குள் எழத்தான் செய்கின்றது.

மதவெறியும் சாதிவெறியும் மட்டுப்பட்டுக் கிடந்த பெரியார் பிறந்த தமிழக மண்ணில் ஆங்காங்கே தலைதூக்கும் ஆதிக்க சாதிவெறியர்களின் வன்கொடுமைக் கொலை வெறியாட்டங்களைப் போல் பள்ளர், பறையர் சாதியினரும் காட்டும் சாதி வெறியாட்டம் சங்பரிவார அமைப்புகளின் சதிக்குத் துணை போவதாக அமைந்துவிடும்.

அருந்ததியர் மக்கள் மீது பள்ளர் சாதிவெறியர்கள் நடத்திய சாதிவெறியாட்டத்தைச் சமூகநீதிப் பார்வையுள்ள தலித் தலைவர்கள் கண்டிக்காமல், கண்டும் காணாமல் விடுவது மதவாத சாதியச் சக்திகளுக்குச் சாதகமாக அமைந்து தலித் ஒற்றுமை சிதைத்து விடும் என்பதே நமது கவலை.

எனவே அருந்ததியர் மக்கள் மீது கொலைவெறி தாக்குதல் நடத்திய பள்ளர் சாதிவெறியர்களை தனிமைபடுத்தி அவர்களை தண்டனைக்கு உட்படுத்துவதற்குத் தலித் இயக்க தலைவர்கள் முன்வரவேண்டும். அப்போதுதான் தலித் ஒற்றுமை வலுப்பட்டு சமூகநீதிக் கோரிக்கையை வென்றெடுக்கும் போராட்டக் களத்தில் வெற்றி காணமுடியும் என தோழமையுடன் தலித் இயக்கத் தலைவர்களைக் கேட்டு கொள்கிறேன்.

அருந்ததியர் மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்திய இராஜா தலைமையிலான பள்ளர்சாதி வெறியர்கள் அனவரையும் உடனே கைது செய்ய வேண்டும் எனவும், அருந்ததியர் மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கிட வேண்டுமெனவும் தமிழக அரசைக் கேட்டுக்கொள்வதோடு, காவல்துறை உயர் அதிகாரிகளின் நேரடி விசாரணைக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என ஆதித்தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது.

இவண்.
இரா.அதியமான்
நிறுவனர், ஆதித்தமிழர் பேரவை
11.11.2015

# பாலியல்

**முகப்பரு உண்டாகக் காரணம் என்ன?**

பரு என்பது பருவத்தில் வருவது. உடலில் உள்ள நாளமில்லா சுரப்பிகள் இரத்ததின் மூலம் தோல் பகுதிக்கு வருவதால் அந்தத் தோலின் பிறசுரப்பிகள் சற்று அதிகமாகச் சுரக்க ஆரம்பிக்கும். பரு முகத்தில் மட்டும் வருவதில்லை. முதுகு புறத்திலும் வரலாம். சாதாரணமாக சிகிச்சை எதுவும் இல்லாமலேயே இவைகள் சிறிது காலத்தில் மறைந்து விடும். சிலருக்கு அதிகமாக, நீண்டகாலமாக இருந்தால் தோல் நோய் நிபுணரிடம் காட்டி சிகிச்சை பெற வேண்டும்.

**ஆணின் விந்து என்பது உடலின் முக்கியமான திரவம் என்றும், இது 40 துளி இரத்தத்தின் மூலம் 1 துளி விந்தாக மாறுகிறது என்றும் கூறப்படுகிறது.இது உண்மையா?**

இது தவறான தகவல் ஆகும்.வாயில் சுரக்கின்ற உமிழ்நீர் மற்றும் வயிற்றில் சுரக்கின்ற சில திரவங்கள் உணவைச் செரிப்பதற்கு உதவுகின்றது. கண்களில் உள்ள கண்ணீர், கண்ணின் நெகிழ்வுத்தன்மைக்கு உறுதுணையாக உள்ளது. இதுபோல் விந்துவும், உடலில் சுரக்கின்ற ஒரு திரவமே. இதில் உயிர் அணுக்கள் அடங்கியுள்ளன என்பதுதான் அதில் வேறுபாடு ஆகும். மற்றபடி விந்துவுக்கு வேறு எந்த முக்கியத்துவமும் கிடையாது.

விந்தைச் சேமித்து தலை உச்சிக்கு எடுத்துச் சென்று யோகியாகலாம் என்றும், விந்தைச் சேமிப்பதால் உடல், வலிவு, மனவலிவு பெறலாம் என்பது போன்ற தவறான, மூடநம்பிக்கையான கருத்துக்களை சொல்லி வருகின்றனர், இவை தவறானவை.

**பெண்களின் கால்களில் அல்லது கைகளில் அல்லது முகத்தில் நிறைய முடி வளர்ந்திருந்தால் (ஆண்களுக்கு மார்பு, மீசை, தாடி ஆகியவற்றிலும் முடி அதிகம் வளர்ந்து இருந்தாலும்) அத்தகைய வர்கள் பாலுணர்வு அதிகம் உள்ளவர்கள் என்பது உண்மையா?**

பொதுவாகப் பெண்களுக்கு கால்கள், கைகள், முகம் போன்ற இடங்களில் அதிகமாக முடி வளர வாய்ப்பு இல்லை.HIRUTISM என்கிற நாளமில்லாச் சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகளால் MALE HORMONES அதிகமாக சுரப்பதால் அதிக முடி உடலில் வளர்கிறது. பெண்களாக இருந்தாலும் முடி வளர்வதற்கும் பாலுணர்வுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அவசியமென்றால், அவ்வகையில் பெண்கள் மீசை, தாடி, கை, கால்களில் அதிகமாக முடி வளர்வதைத் தடுக்க தகுந்த மருத்துவரை அணுகி குணப்படுத்திக் கொள்ளலாம்.

**ஆய்வுக்குழாய் குழந்தை (Test tube Baby) என்றால் என்ன?**

பெண்ணிடமிருந்து அண்ட அணுவும், ஆணிடமிருந்து விந்தும் சேகரிக்கப்படுகிறது. சேகரிக்கப்பட்ட இவை குறிப்பிட்ட வெப்ப நிலையில் ஆய்வுக்குழாயில் கருபிடிக்கச் (fertilc) செய்கிறார்கள். அவ்வாறு கருப்பிடித்த கருமுட்டையை ஊசிமூலமாக எடுத்து பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தி விடுகிறார்கள்.அதன்பின் அக்கரு முறையாக வளர்ச்சியடைந்து குழந்தையாகப் பிறக்கிறது.இவ்வாறு ஆய்வுக்குழாய் சோதனை மூலம் குழந்தைகள் பிறக்கச் செய்கின்றனர்.

**கருப்பையில் உள்ள குழந்தையை ஸ்கேன் செய்வது என்றால் என்ன?**

செவி உணரா ஒலி அலைகளைப் பெண்ணின் கருப்பைக்குள் செலுத்தி, வளரும் குழந்தையின் நிலையைத் திரையில் காண முடியும். இதனால் குழந்தை ஆணா? பெண்ணா? என்பதையையும் அறிய முடியும். செலுத்தப்படும் ஒலி அலைகள் குறிப்பிட்டநெறிமுறைக்கு மீறி இருப்பின் குழந்தையின் உடல் நலத்தைப் பாதிக்கும்.

குாந்தையின் உடல் ஊனம் ஏற்பட்டு இருந்தால் ஸ்கேன் மூலம் அறிந்து கொள்ள முடியும். ஊனமுற்ற குழந்தையாக இருந்தால் கருக்கலைப்பு செய்து விட முடியும். தாய் கருவுற்று இருக்கும்போது நோய்வாய்ப்பட்டால் சில சமயங்களில் அந்நோய் கருவில் உள்ள குழந்தையையும் பாதிக்கும். இம்முறை மூலம் அதனை அறிந்து கொள்ள முடியும். அதே சமயம் இந்த scan என்ற முறை தவறாகவும் பயன்படுத்தப்படுகிறது. குழந்தை ஆணா? பெண்ணா? என்பதைப் பார்த்து பெண்ணாக இருந்தால் கருக்கலைப்பு செய்யவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**எத்தனை வயது வரை பாலுறவில் ஈடுபடலாம்?**

பாலுறவில் ஈடுபட வயது வரம்பு இல்லை. பாலியல் பருவம் தொடங்கி மனிதன் மரணம் அடையும் வரையிலும் உடலுறவில் ஈடுபடலாம். அதற்கான மனநிலை அமைதல் வேண்டும். நல்ல உணவும், தேவையான பாலுறவும் தொடர்ந்து கிடைத்தால் அவர்கள் நீண்ட நாட்கள் வாழ்வார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறகின்றார்கள்.

**கருப்பையை நீக்கிய பிறகு பெண்களுக்கு உடலுறவில் நாட்டம் இருக்குமா?**

கருப்பையை நீக்கிய பிறகும் உடலுறவில் பெண்களுக்கு நாட்டம் இருக்கும். கர்ப்பப்பை என்பது குழந்தை (கரு) தோன்றி வளர்ச்சியடையக் கூடிய உறுப்பு ஆகும். எனவே குழந்தை (கரு) உண்டாவது மட்டுமே இதனால் தடை செய்யப்படுகிறது. இதனால் உடலுறவில் நாட்டம் பாதிக்கப்படாது. ஏனென்றால் பாலுணர்வைத் தூண்டும் உணர்வு நரம்புகள் பெண்குறியில் இருக்கின்றன. அவை பாலுணர்வை எப்போதும்போல் தூண்டச் செய்கின்றன. கருப்பைக்கும் பாலுணர்விற்கும் தொடர்பு இல்லை.

**மாத விலக்கு நின்ற பிறகு பெண்களுக்கு உடலுறவில் நாட்டம் இருக்குமா?**

மாதவிலக்கு நின்றபிறகும் பெண்களுக்கு உடலுறவில் நாட்டம் இருக்கும். பெண்களுக்குப் பொதுவாக 45 வயதை ஒட்டி மாதவிலக்கு நின்று விடும். பல பெண்கள் இதற்குப் பின் உடலுறவு கொள்வது தவறு, பாவம் என்று நினைக்கிறார்கள். இத்துடன் தங்கள் குழந்தைகள் வயதுக்கு வந்தவுடன், தாம் உடலுறவு கொள்வது தவறு என்று நினைத்து உடலுறவை நிறுத்திக்கொள்கிறார்கள்.

இதன் காரணமாகப் பெரும்பாலோர் தங்களை ஆழ்ந்த கடவுள் பக்தைகளாகக் காட்டி கோயில் குளங்களுக்குச் செல்வது, உணர்ச்சி வசப்படுவது, கோபப்படுவது போன்ற காரியங்களில் ஈடுபடுகிறார்கள். எனவே மாதவிலக்கு நின்ற பிறகும் பெண்கள் உடலுறவு கொள்வது இயற்கையானது.

**பாலியல் ஒழுக்கக் கேடு என்றால் என்ன?**

முறையான பாலுறவில் ஈடுபடுவது என்பது ஒழுக்கம் கெட்ட செயல் ஆகாது, ஆனால், ஆண்கள் பெண்ணின் விருப்பமின்றி பாலியல் வன்முறை செய்வது, (பெண்ணின் விருப்பமின்றி அவளைக் கட்டாயமாக வற்புறுத்தித் தனது பாலியல் தேவைக்கு ஓர் ஆண் பெண்ணை பலியாக்குவதை 'கற்பழித்தல்' என்கிறார்கள். அப்படி சொல்லப்படுவது தவறு. அச்செயலை 'பாலியல் வன்முறை' என்றே கூறவேண்டும்.) மிரட்டிப் பணியவைத்து, உடல் உறவில் ஈடுபடுத்துவது, தன் மேலாதிக்கத்தைப் பயன்படுத்தி வற்புறுத்துவது, கேலி கிண்டல் செய்வது, முறைத்து பார்ப்பது போன்றவையும், மேலும் விருப்பமில்லாத நிலையில் பெண்ணைப் பலவந்தப்படுத்தித் திருமணம் செய்து கொடுப்பது, தேவதாசி முறையை அனுசரிப்பது, பெண்களைப் போகப் பொருளாக பார்ப்பதும் (ஆண்கள் செய்யும்) பாலியல் ஒழுக்க கேடுகளாகும்.

**சமூகத்தில் ஒரு பெண் கெட்டு விட்டதாக சொல்லப் படுவது சரியா?**

இந்தச் சமூகஅமைப்பில் (பார்ப்பனீய சமூக அமைப்பில்)ஒரு பெண் மணமாகாத வராயிருந்தால் நண்பரிடமும், மணமானவரா யிருந்தால் கணவரைத் தவிர்த்த மற்றொருவருடன் தனது பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டால் அல்லது முயற்சித்தால் அவள் கெட்டுப்போனவள் எண்ற பட்டம் சுமத்தப்படுகிறது.

ஆனால், இதே செயலை ஒரு ஆண் செய்யும் பொழுது, அவனைக் கெட்டுபோனவன் என்று கூறுவதில்லை. இதற்குக் காரணம் பெண்கள் ஆண்களின் போகப்பொருள் என்ற மத ரீதியலான ஆண் ஆதிக்கக் கருத்தியல் வெளிப்பாடே ஆகும். பெண்ணடிமைத்தனத்தை வளர்க்கும் இவ்வாறான கூற்று கண்டிக்கத்தக்கது. மாறி வரும் காலச்சூழலில் பெண்களுக்குச் சொத்துரிமை, பாலின சமத்துவம் போன்ற இன்ன பிற ஆண்களுக்குரிய அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் இருக்கும் பொழுதுதான், மேற்சொன்ன நிலை மாறி முற்போக்கான சமூக அமைப்பு உருவாகும்.

**திருமணம் செய்து கொள்ளாத ஆணோ அல்லது பெண்ணோ உடல் உறவு கொண்டால் - உடல் உறவு கொண்டவரையே கண்டிப்பாக திருமணம் செய்து கொள்ள வேண்டும்?**

ஆண் - பெண் இருவர் ஆசையினாலோ,சந்தர்ப்ப வசத்தினாலோ உடலுறவு கொண்டுவிட்டதாகக் கொள்வோம். இதன் காரணமாக அவர்களையே திருமணம் செய்துகொள்வதா? இல்லையா, என்பதை இருவரும் வாழ்க்கை துணைவர்களாக இருப்பதற்கு பொருத்தமான குண நலன்களைக் கொண்டவர்களா என்பதைக்கொண்டே முடிவு செய்ய வேண்டும். ஏனெனில் திருமணம் என்பது வாழ்க்கையில் இறுதி வரை மன நலத்துடன் சேர்ந்து ஒன்றி வாழ்வதற்கான ஏற்பாடாகும். எனவே உடல் ரீதியில் இருவர் ஆசைக்காக தற்காலிகமாக சேர்ந்து உடலுறவு கொண்டதன் காரணமாக மட்டுமே திருமணம் செய்து கொள்வது தவறாகும். இது மோசமான பின் விளைவுகளுக்கு வழி வகுக்கும்.

**முன்,பின்அறிமுகமாகாத இருவரும்(ஆண்,பெண்) முதலிரவிலேயே உடல் உறவு வைத்துக் கொள்ளலாமா?**

1. இன்றைய சமூக அமைப்பில் பெற்றோர்களால் தெரிவுசெய்யப்பட்ட திருமணங்களே பெரும்பாலும் நடைபெறுகின்றன. இதில் திருமணம் நடந்த அன்று இரவே முதல் இரவுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு விடுவதால் முன்பின் அறிமுகமில்லாதவர்களிடையே நடைபெறும் பாலுறவில் சிக்கல்கள் உருவாகி அதுவே முற்றி விவாகரத்து வரை சென்று விட்டதும் உண்டு. எனவே இம்மாதிரியான சூழ்நிலையில் பேசிப்பழகி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட பிறகு உடல் உறவு கொள்வது நல்லது.

2. இருவரும் பேசிப்பழகுவது மூலம் அவர்களுக்குள் ஒரு புரிதல் (understanding) ஏற்படுவது அவசியம். அதன்பின் உடல் உறவு கொள்ளலாம். அன்றேதான் உடல் உறவுகொள்ள வேண்டும் என்றோ 1 மாதமோ, 1 வருடமோ கழித்துதான் உடல் உறவு கொள்ள வேண்டும் என்றோ நிபந்தனை எதுவும் கிடையாது.

3. முதல் உடலுறவின் போது ஆண் குறியிலும், பெண் குறியிலும் ஏற்படும் சிக்கல்களைக் கவனத்தில் கொண்டு உடலுறவில் ஈடுபடலாம்.

4. மேலும் தனக்கு தகுந்த வாழ்க்கைத்துணையை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவரவர்களே - தானே நன்கு அறிந்து, தேர்வு செய்வது நல்லது. பெற்றோர்கள் இதற்கு உதவினால் மட்டுமே போதுமானது.

**வயதான காலத்தில் பெற்றோரை பராமரிக்க குழந்தைகள் தேவையா?**

வயதான காலத்தில் குழந்தைகள் பராமரிப்பில் தாம் வாழக்கூடும் என்கிற காரணத்திற்காகத் தான் குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறோம் என்று பல பெற்றோர்கள் சொல்கிறார்கள்.பழங்காலத்தில் இக்கூற்று ஓரளவு சரியானதாக இருந்திருக்கக்கூடும்.

ஆனால் தற்காலத்தில் சில வயதான பெற்றோர்கள் தங்கள் தேவைகள் நிறைவாவதுடன் திருப்தி கொள்வதில்லை. தமது பிள்ளைகளின் குடும்பம் சம்மந்தப்பட்ட காரியங்களில் மூக்கை நுழைத்து குடும்பச் சூழலைக் கெடுக்கும் நிலை உள்ளது. பெற்றோர்கள் தம்முடன் இருப்பதைச் சுமையாக நினைக்கிற பிள்ளைகளும் உள்ளனர்.

இந்நிலையில் முதியோர் இல்லம் தாமாகவே தேடிச் செல்லும் வயதான பெற்றோர்களும் – வீட்டை விட்டுத் துரத்தப் பட்டு முதியோர் இல்லம் தேடிச் செல்லும் பெற்றோர்களும் உள்ளனர். வாழ்க்கையில் ஒத்துப்போக இயலாத யாரும் நாகரீகமான முறையில் பிரிந்து கொள்வதே இருவருக்கும் நல்லது. எனவே முதியோர் இல்லங்கள் சமூகத் தேவையாக மாறி வருகின்றன. அதேபோல் வயதான காலத்தில் குழந்தைகள் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்று கருதி குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதாவது இன்றைய சூழ்நிலையில் நடைமுறையில் தோல்வியான செயல் ஆகும்.

**முனிவர்கள்,ஆச்சாரிகள்,பாபாக்கள்,பாதிரியார்கள் போன்ற இவர்களுக்கு பாலுணர்வுப் பிரச்சனைகள் கிடையாதா?**

முனிவர்கள், ஆச்சாரிகள், பாபாக்கள், பாதிரியார்கள் போன்றவர்கள் போலியானவர்களே. ஆனால் இவர்கள் இல்லாத ஒழுக்கத்தைப் போதித்து பிழைப்பு நடத்தி வருகின்றனர். இவர்கள் மோட்சத்துக்கு வழிகாட்டுகிறேன், பிள்ளை வரம் தருகின்றேன் என்றெல்லாம் சொல்லி, தன்னிடம் வரும் அப்பாவிப் பெண்களை ஏமாற்றி உடலுறவு கொள்கின்றனர்.

பல நேரங்களில் பணம் பறிக்கவும் இவர்கள் தயங்குவதில்லை. பல சாமியார்களின் மடங்கள்( ஆசிரமங்கள்) விபச்சார விடுதிகளாக செயல்பட்டுள்ளது தற்பொழுது வெளிபட்டுள்ளது. ஆச்சாரியார்கள் பாபாக்கள், பாதிரிமார்கள் ஆகியோர் அனைவரும் மனிதர்களே. பொதுவாக சாதாரண மனிதர்களுக்கு இருக்கும் பாலுணர்வு இவர்களுக்கும் இருக்கவே செய்யும்.

மேலும் இவர்கள் அதிகமாக பால், பழம் போன்ற சத்துள்ள உணவை எடுத்துக் கொள்கின்றனர். எனவே சாதாரண மனிதர்களைக்காட்டிலும் இவர்களுக்கு பாலுணர்வு கூடுதலாகவே அமையும் என்பது ஆச்சரியம் இல்லாத உண்மையாகும். மேற்சொன்ன நபர்கள் உடலில் சுரக்கும் விந்து இருபால் உடலுறவு மூலமோ, கனவு மூலமோ வெளியேறிவிடும். இவர்களில் சிலர் விந்தை சேமித்து, ‘குண்டலினி சத்தி’பெறுவேன் என்று கூறுவதெல்லாம் மோசடி ஆகும்.

**மதக்கோட்பாடுகள்,இலக்கியங்கள் போன்றவை பாலியல் வக்கிற உணர்வை தூண்டுகின்றதா?**

இலிங்கம், சிலுவை, மசூதிமேல் தூண், கோயில் சிற்பங்கள் போன்றவை தொல்பழங்கால பாலியல் குறியீடுகள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அதேபோல் ‘ஓம்’ என்ற எழுத்தும் பெண்குறி வடிவம் என்று ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன.

ஆண்டாளின் பாசுரங்களில் பாலியல் உணர்வுகளின் வெளிப்பாடுகள் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றில் நாணயமற்ற, நேர்மையற்ற பாலியல் பித்தலாட்டமான பாலியல் உடலுறவுச் செய்திகள் மலிந்து கிடக்கின்றன.

நேர்மையாகவும் நாணயமாகவும் ஒரு ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் பிறந்த கடவுள் எந்த மதங்களிலும் இல்லை. பொதுவாழ்வில் ஆன்மீகம் பேசும் சில பெரியவர்கள் கூட சொந்த வாழ்வில் மேற்சொன்ன கடவுள்கள் போலவே பாலியல் உறவுகள் வைத்துக்கொண்டுள்ளார்கள்.

எனவே பாலியல் ரீதியான வக்கிர உணர்வுக்கும், காமவெறிக்கும் இத்தகைய மத ஆபாச இலக்கியங்களும் ஒரு காரணம் ஆகும்.

**விளம்பரங்களில் தாது விருத்தி லேகியம் மதன குளிகை வீரிய சொர்ணம் என்று குறிப்பிடப் படுகிறது. இவை போன்றவைகள் வீரியத்தைக் கொடுக்குமா?**

உடலுறவில் வீரியமூட்டும் மருந்துகள் எனச் சொல்லப்பட்டு இன்று வரை விற்கப்படும் மருந்துகள் யாவுமே வீரியம் அளிப்பதில்லை. உண்மையில் அவை யாவும் மோசடியானவையே ஆகும். இவ்வாறு விற்கப்படும் மருந்துகளை வாங்கிச்சென்றவர்களின் எண்ணிக்கையும் இதில் குணம் பெற்றோர் – பெறாதோர் பற்றிய கணக்கு யாரிடமும் இல்லையாதலால் அது வீரியத்தைக் கொடுக்குமா? கொடுக்காதா? என்று யாருக்கும் தெரிவதில்லை. வாங்கிச் சென்றவர்களும் சரி, விற்பவர்களும் சரி மீண்டும் தொடர்பு கொண்டு அது பற்றி பேசிக் கொள்கிறார்களா? என்றும் தெரியாது. இவைகள் சோதனை செய்யப்பட்டவைகள் அல்ல. ஆண் குறி நீண்ட நேரம் விரைப்புடன் இருக்க பயன்படுத்தப்படட்டு வரும் நவீன க்ரிம் மற்றும் ஸ்பிரேயர்கள் நாளடைவில் ஆண் குறியின் விரைப்புத் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

**மனித உரிமைக்கும் பாலியல் கல்விக்கும் சம்மந்தம் உண்டா?**

உண்டு பாலியல் உடலுறவில் பேரின்ப (orgasm) அநுபவத்திற்கு அடிப்படைத் தேவைகளாக இருப்பவை கீழ்வருபவைகளாகும்.

1. சம்மந்தப்பட்ட ஆணும் பெண்ணும் சமவுரிமை அடிப்படையில் ஒருவரை ஒருவர் மனிதர்களாக மதிக்க வேண்டும்.

2.ஒருவர் மற்றொருவரின் உணர்வுகளையும், தேவைகளையும் புரிந்து மதித்து தம்மால் இயன்ற அளவிற்கு அவற்றை நிறைவு செய்ய முயற்சித்தல் வேண்டும். இத்தகையோருக்கே மனிதவுரிமையின் முக்கியத்துவம் தெளிவாகும்.

3. உலகிலேயே பாலியல் மதிக்கப்பட்டு, சுதந்திரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நாடு சுவீடன் ஆகும். அங்கு ‘தந்தை பெயர்’ தெரியாத குழந்தைகள் கேவலமாக மதிக்கப்படுவது இல்லை. திருமணம் என்ற சடங்கு இல்லாமலேயே நீண்ட காலமாக வாழும் கணவன் மனைவிகளும் உண்டு. உலகிலேயே மனித உரிமைகளை வளர்த்துக் காப்பாற்றும் நாடு சுவீடன் ஆகும். எனவே பாலியல் பற்றியும், மனித உரிமை பற்றியும் உள்ள தெளிவு மிகவும் பின்னிப் பிணைந்தவை.

1990 ல் பெரியார் மய்யம், திராவிடர் மனித உரிமை அமைப்பு ஆகியவை வெளியிட்ட ‘பாலியல்’ என்ற நூலில் இருந்து சில கேள்வி பதில்களை மட்டும் கடந்த 4 மாதங்களாக வெளியிட்டு வந்தோம்.

இத்துடன் இத்தொடர் முற்றுப்பெருகிறது.

# தோழர் கோவன் கைதையும் - ம.க.இ.க வின் பார்ப்பன பண்பாட்டுப் போக்கையும் கண்டிக்கிறோம்!

மக்கள் கலை இலக்கியக் கழகம் டாஸ்மாக்கை மூடக்கோரி 'மக்கள் அதிகாரம்' என்ற பெயரில் தனி இயக்கத்தையே நடத்துகிறது. பல மாதங்களாகத் தொடர்ச்சியாக சுவரெழுத்துக்களும், பரப்புரைகளும், போராட்டங்களும் நடந்து வருகின்றன. அதன் ஒரு பகுதியாக ம.க.இ.க மையக்குழு சார்பில் எழுதி, தயாரித்து வீடியோவாகவும் வெளியிடப்பட்ட பாடல் "ஊருக்கூரு சாராயம், தள்ளாடுது தமிழகம் - ஊத்திக்கொடுத்த உத்தமிக்கு போயசுல உல்லாசம்" என்ற பாடலாகும். இதைப் பாடியது குற்றமென்று தோழர் கோவன் மீது இராஜதுரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

தோழர் கோவனைக் கைது செய்தது மிகப்பெரும் கண்டனத்துக்குரியதாகும். அவர் மீது கடும்பிரிவுகளில் வழக்குப் பதிவுசெய்து சிறையில் அடைத்தது, அரசின் சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்துகிறது. தோழர் கோவனை விடுதலை செய்ய வேண்டும். அவர்மீதான வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும்.

டாஸ்மாக்கில் விற்கப்படும் மதுவகைகள் கடும் பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. அவற்றை உடனடியாகத் தடைசெய்யவேண்டும் என்பதில் நமக்கும் மாற்றுக்கருத்துக்கிடையாது. அதேசமயம் குடி உரிமையைப் பாதுகாக்கும் நோக்கிலும், மதுமாஃபியாவுக்கு எதிராகவும் சுகாதாரமான மதுவை - குடிகாரர்கள் அவரவர்களே அவரவரது இல்லங்களிலேயே தயாரித்து அருந்தலாம் என்பதே நமது நிலை.

ம.க.இ.க வின் பல பாடல்கள் பார்ப்பன பயங்கர வாதத்தை அம்பலப்படுத்தி இருப்பதை நாம் கேட்டிருக்கிறோம். பெரியார் இயக்கங்களின் தோழர்கள் பலரது இல்லங்களிலும் அவை இருக்கின்றன. ஆனால் தற்போது அ.தி.மு.க அரசால் மிகவும் பிரபலமாக்கப்பட்ட இந்தப் பாடல்மீது நமக்கு மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

"ஊருக்கூரு சாராயம், தள்ளாடுது தமிழகம் - ஊத்திக்கொடுத்த உத்தமிக்கு போயசுல உல்லாசம்" என்ற பாடல் தனிப்பட்ட முறையில் தமிழ்நாட்டு முதல் அமைச்சரைத் தரக்குறைவாகப் பாடுகிறது என்று அரசுத்தரப்பில் சொல்லப்படுகிறது. அரசியலில் தனிப்பட்ட முறையில் ஒருவரை ஒருவர் தரந்தாழ்ந்து விமர்சிப்பது என்பது பொதுப்போக்காக மாறிவிட்டது. இப்போக்கு மாற்றப்பட வேண்டிய ஒன்று. இதற்காக வழக்குப் போடுவதென்றால் தமிழ்நாட்டின் பெரும்பாலான அரசியல் தலைவர்கள் மீதும் வழக்குபோட வேண்டிவரும்.

முதல் அமைச்சரைத் தனிப்பட்ட முறையில் இப்பாடல் தாக்குகிறது என்று எழுந்த விமர்சனங்களுக்கு ம.க.இ.க வின் முக்கியப் பொறுப்பாளர் தோழர் மருதையன் பதில் அளித்து ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளார். அதில், "மக்களிடம் இருந்து வரும் சொற்களைத்தான் பயன்படுத்தியுள்ளோம், "மக்களின் மொழியில் எழுதப்பட்ட பாடல் இது" என்று விளக்கமளிக்கிறார்.

"நீ எனக்கு பிட்டுப் படம்டீ..., பிட்டுப்படம்டீ..., பிட்டுப்படம்டீ" எனப் பாடல் எழுதியவனும் தோழர் மருதையனைப் போலத்தான் பதில்சொல்கிறான். ஒரு சமுதாயப் பொறுப்புணர்வுள்ள தலைவர் என்று நாங்கள் நம்பியவர் கூறும் பதிலா இது? இன்னும் ஒருபடி மேலே போய், "எங்களுக்கு நாகரீகம் பற்றி வகுப்பு எடுக்க வேண்டிய அவசியமில்லை" என்றும் கூறுகிறார். இவர்கள் என்ன எழுதினாலும் வாய்மூடிக் கேட்கவேண்டும். யாராவது விமர்சித்தால் "வகுப்பு எடுக்க வேண்டிய அவசியமில்லை" என்பார்கள்! அப்படியானால், ம.க.இ.க மருதையனுக்கும் முதல் அமைச்சர் ஜெயலலிதா வுக்கும் என்ன வேறுபாடு? எப்படியோ இருக்கட்டும். நாம் முரண்படும் இடத்துக்கு வருவோம்.

பாடலில் 'உத்தமி' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அதன் பொருள் என்ன? 'உத்தமி' என்ற சொல் சமுதாயத்தில் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் சொல் என்பது ம.க.இ.க.வுக்குத் தெரியாதா? பெண்களை 'ஒழுக்கக் கேடானவர்கள்' அல்லது 'கற்பிழந்தவர்கள்' என்று வசைபாடு வதற்குப் பயன்படுத்தப்படும் சொல்தானே 'உத்தமி' என்ற சொல்? 'உத்தமி' என்ற சொல்லால் எந்தப் பெண்ணையும் வசைபாடுவது தவறு. அந்தச் சொல்லால் எந்தப் பெண்ணையும் பாராட்டுவது அதைவிடத்தவறு. இரண்டுமே ஆணாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடுதான்.

ஒரு புரட்சிகரஅமைப்பே இப்படி எழுதியிருப்பதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறோம். உத்தமி, பத்தினி, பதிவிரதை போன்ற சொற்பிரயோகங்கள் இந்துப் பண்பாட்டு - பார்ப்பனப் பண்பாட்டு அடையாளங்களை நிலைநிறுத்தும் நோக்கில் பயன்படுத்தப்படும் சொற்களாகும். அப்படிப்பட்ட ஆணாதிக்க, இந்து அடிப்படை வாதச்சொற்களைப் பயன்படுத்தி எழுதப்பட்ட பாடல் வரிகளை ம.க.இ.க உடனடியாக மாற்றி வெளியிட வேண்டும். தோழர் கோவன் கைதை வன்மையாகக் கண்டிக்கிறோம். ம.க.இ.க வின் பார்ப்பனப் பண்பாட்டுப் போக்கையும் கண்டிக்கிறோம்.



முனைவர் பூ.மணிமாறன்

1

# வாசிப்பை வசப்படுத்துவோம்

இன்றைய காலகட்டத்தில் அலைபேசிகள் நம்மை ஆக்கிரமித்து விட்டன. அதனால் நாம் பயன்பெற்றது பல இருந்தாலும் ஏராளமானவற்றை இழந்து விட்டோம். அப்படி இழந்தவற்றை நாம் மீட்டெடுக்க இயலுமா ? என்பது ஆய்வுக்குரிய வினா. நான் சில கவியரங்குகளில் கவிதை வாசிப்புகளில் பங்கேற்றபொழுது சில விசித்திரமான நிகழ்வுகளைக் காணமுடிந்தது. கவிதைசொல்லிகள் தங்களது கவிதைகளை வாசிக்கும் போது எழுதப்பட்ட தாள்கள், பேனாக்கள், பென்சில்கள், தாள் தாங்கு அட்டைகள் என எவற்றையும் பயன் படுத்தவில்லை.



அவர்கள் தங்களது அலைபேசிகளைக் கையில் பிடித்துக் கொண்டு அதனைப் பார்த்துப் பார்த்து தமது கவிதைகளை வாசித்து விட்டுச் சென்றனர். எனக்கு வியப்பாக இருந்தது. கவிதை எழுதுபவர்கள் அதிகமாக தாள்களைப் பயன்படுத்துவதையும் சரியாகக் கவிதை அமையாவிட்டால் அதனைக் கிழித்துப் போடுவதையும் வீடுகளில் கவிதை நோட்டுகள் இருப்பதையும் கண்டிருக்கிறேன். ஆனால் தற்போது காணும் முறைமை எனக்கு விசித்திரமாக இருந்தது. இது குறித்து எனது நலவிரும்பிகளிடம் நான் பகிர்ந்து கொண்டபோது அவர்கள் “நீ இன்னும் மாறவில்லை. இந்தக் கால நடைமுறைக்கு ஏற்றபடி மாறிக்கொள்” என்றவாறாக செலவின்றி அறிவுரைகளை நல்கினர். அந்தக் காலம் இன்றி இந்தக்காலம் வந்துவிட்டதா ? பெற்றோரின்றி பிள்ளைகளா? என எனக்குள்ளும் எதிர்வினாக்கள் எழுந்தன. ஆனாலும் அடக்கிக்கொண்டு மாற்றத்திற்கு ஏற்றவாறு மாற முயற்சித்துக் கொண்டுள்ளேன்.

நவீன உலகில் நாம் இழந்ததில் முக்கியமானது வாசிப்பு என்ற பழக்கத்தைத் தான். வாசிப்பு என்பதை முதலில் நமக்கு அதனைப் பழக்கமாக்க வேண்டும். எனது தந்தை நிறைய வாசிப்பார் அவரது ஒய்வு நேரத்தில் அவர் தூங்கியதை விட வாசித்த நேரங்கள் தான் அதிகம். எந்த நேரமும் தலைகவிழ்ந்து புத்தகங்களுக்குள் மூழ்கி விடுவார். என்னைப் புத்தகங்கள் வாங்க பழக்கப்படுத்தியதும் அவரே. எனது கல்லூரி நாள்களில் எனது கல்லூரி, விடுதிக் கட்டணங் களுடன் புத்தகம் வாங்கும் பணப்பட்டுவாடாவும் நடக்கும். மேலும் கூட்டங்கள் கேட்கச் செல்ல வழிச்செலவுக்குப் பணமும் அப்போது தின்பதற்கான நொறுக்குத் தீனிக்கும் உணவுக்குரிய பணமும் உடன் பணவிடை செய்வார். இப்படியாக வாசிப்புக்கான துணைபுரியும் சகல நடவடிக்கை களுக்கும் எனது அப்பா ஆவண செய்வார். வீட்டில் நான் விரும்பும் நூல்களை வாசிக்கும் சூழலையும் ஏற்படுத்தித் தருவார். இப்படிப்பட்ட வாசிப்பு வெறிகொண்ட என் அப்பாவை என் அம்மா பின்னாட்களில் எங்கள் வீட்டு தொலைக்காட்சி தொடர் நாடகங்களைப் பார்க்க பழக்கப்படுத்தப் பட்டார். தம்பதி சமோதராய் இரவு 10 மணிவரை உள்ள தொடர் நாடகங்களைப் பார்த்து விட்டுத் தான் படுக்கும் பழக்கத்திற்க்கு என் அப்பா ஆளானார்.

இவற்றை எதற்கு நான் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் ஒரு பழக்கத்தை நாம் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்தால் அதனை வாழ்வியலாக மாற்றமுடியும் என்பதற்கான எடுத்துக்காட்டை என்னுள் இருந்தே எடுத்து வைத்தேன். நமக்குப் பிடித்தமான தலைவர்கள் , புத்தாண்டின் முதல்நாள், நமது பிறந்தநாள் இப்படியான முக்கிய நாட்களில் நாம் நமது பல தீர்மானங்களை முடிவு செய்வோம்.

அவற்றில் கண்டிப்பாக வாசிக்கும் முடிவும் இருக்கும். குறிப்பாக வாங்கி அடுக்கி வைத்துள்ள அனைத்து நூல்களையும் படித்து முடித்து விடுவது என்பதாக இருக்கும். ஆனால் அது இயலாமலே போய்விடும். நமது உடல் நலம் பேணுவதாகக் கூறப்படும் யோகாவுக்கு நேரம் ஒதுக்க முடியும். நமது சர்க்கரையின் அளவு குறைய நடைபயிற்சிக்கு நேரம் ஒதுக்கமுடியும். நமக்குப் பிடித்த திரைப்படங்களுக்கு நேரம் ஒதுக்கம் முடியும். நமது நட்புகளுடன் அளவளாவ நேரம் ஒதுக்கம் முடியும். நாள் முழுவதும் கடுமையாக உழைத்து சோர்வுற்று இருந்தாலும் இரவில் கண்டிப்பாக தொலைக்காட்சிக் காண்பதற்கு நேரம் ஒதுக்க முடியும். ஆனால் நம்மால் புத்தகங்கள் வாசிக்க மட்டும் நேரம் ஒதுக்க இயலவில்லை. என்ன காரணம் ?

மேலைநாடுகளில் வாசிக்க நேரம் ஒதுக்குவது மிகவும் இயல்பான விசயமாகும். அவர்களது பேருந்து, இரயில், விமானக் காத்திருப்புகளில் அந்த நாட்டு மக்கள் எப்போதும் ஏதாவது ஒரு நூலை வாசித்துக் கொண்டே இருப்பர். இந்தகைய காட்சிகளை நாம் ஊடகங்கள் வாயிலாகக் காண்கிறோம். ஆனால் நம் மக்களிடையே அந்தப் பழக்கம் இல்லாமல் போனது ஏன்?

நாம் மட்டும் வெறுமனே வேடிக்கை பார்ப்பதும் அல்லது அரட்டை அடிப்பதுமாகவே பொழுதைக் கழிப்பது ஏன்? இதற்கான விடையை நாம் வெறுமனே தனிமனிதப் பழக்கமாக மட்டுமே பார்க்க முடியாது. இதனை ஒரு ஒழுக்கக் கோட்பாடாகவும் கொண்டு பிற நாட்டுமக்களுடன் ஒப்பிடவும் நாம் குறிப்பிடும் வாசிப்புப் பழக்கமானது அறிவியல் வளர்ச்சி கண்ட நாடுகளில் ஏற்பட்டு 500 வருடங்களுக்கு மேல் ஆகிறது. எனவே வாசிப்பு என்பது அவர்களின் வாழ்வியலின் தவிர்க்க முடியாத அங்கமாகி விட்டது. அன்றாட வாழ் நடவடிக்கையாக ஆகிவிட்டது.

மேலைநாடுகளில் வாசிப்புப் பழக்கத்திற்கும் நமது தமிழகமக்களின் வாசிப்புப் பழக்கத்திற்கும் வரலாற்று ரீதியாகவே வேறுபாடுகள் உள்ளன. அது வரலாற்று ரீதியிலான வளர்ச்சிப்போக்கின் ஒரு பகுதியாகும். அதாவது முற்காலத்தில் பலகையிலும் கல்லிலும் தமக்கு வேண்டிய எழுத்துக்களையோ, முத்திரைகளையோ, குறிகளையோ செதுக்கினர். அவற்றின் மீது மையைத் தடவி நகல் எடுக்கும் பழக்கம் ஏற்பட்டது. மேடு பள்ளங்களைக் கொண்ட பரப்பு ஒன்றின் மேல் மையைத் தடவிக் காகிதத்திலோ அல்லது வேறு ஒரு பொருளின் மீதோ அழுத்திப் பதிவெடுக்கும் முறை அடுத்துக் கையாளப்பட்டது. களிமண் அல்லது மெழுகில் இவ்வகையான அச்சுப் பதிவுகள் செய்யப்பட்டன.

சங்க இலக்கியங்களில் கண்ணெழுத்து, வட்டெழுத்து போன்ற வடிவங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இவற்றை எழுதுவோர் 'கண்ணெழுத்தாளர்' என்று அழைக்கப்பட்டனர். முத்திரையிடுதலும் இலச்சினையிடுதலும் பாபிலோனியா விலும், சீனாவிலும் தொடக்க காலத்தில் ஏற்பட்ட வரலாறாகும். செதுக்குத் தகடுகளில் எழுத்துக்கள் பதிக்கப்பட்டன. அடுத்து, கல்வெட்டுக்களில் மையைத் தடவிப் பதிப்பு எடுக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதுவே மரத்தில் எழுத்துக்களை வடிவமைத்துப் புத்தகங்கள் பதிப்பிக்க முதன்முதலில் அடிப்படையாக அமைந்தது.

கல்வெட்டிலிருந்து உண்மை நகல் எடுப்பதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். கல்வெட்டுத் துறைகளி லிருந்து மர அச்சுப்படி முறையும் அதிலிருந்து நகல் எடுப்பு முறையும் வளர்ச்சியடைந்தன. உலக நாடுகள் மதக் கருத்துக்களைப் பரப்பவே இக்கலையை உருவாக்கின. அடுத்த நிலையில் நெசவுத் துணியில் அச்சிடும் முறை பரவியது. மரத்துண்டுகளில் செதுக்கப்பட்ட விதவிதமான உருவங்களைக் கொண்டு துணியில் அச்சிடுவது இம்முறையாகும். இம்முறை இந்தியாவிலிருந்து தான் மற்ற நாடுகளுக்கும் பரவியது. இவ்வாறு அச்சடிக்கப்பட்டவை சப்பானில் 'நாரா' என்றழைக்கப்பட்டன. இவ்வச்சு முறை பின்னர் காகிதத்தில் அச்சடிக்கும் முறைக்கு வழிவகுத்தது.

உலோக எழுத்துருக்கள் கொண்ட அச்சு இயந்திரம் ஜெர்மனியில் 1437 ஆம் ஆண்டு கூட்டன்பர்க்கில் கண்டுபிடிக்கப்பட்டது. உலோகத்தால் அச்சு எழுத்துக்கள் உருவாக்கப்பட்டன. கொரியா, சீனா ஆகிய நாடுகளில் 18ஆம் நூற்றாண்டு வரை மேற்கண்ட முறை வழக்கில் இருந்தது. அரசர்கள் இந்நாடுகளில் இலக்கியம், கல்வி, மதம் ஆகியவற்றை வளர்க்கப் பயன்படுத்தினர். ஐரோப்பாவில் கையெழுத்துப் படிகள் அதிக வழக்கில் இருந்தன. இக்காலத்தில் அப்படிகளில் உள்ள எழுத்துக்களைப் போலவே உலோக அச்சில் வடிவமைத்தனர். அந்த எழுத்துக்களை வார்த்து அச்சடிக்கும் முறை வழக்கிற்குக் கொண்டுவரப்பட்டது.

15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கையால் எழுதப் பட்ட எழுத்துகளையே மாதிரியாகக் கொண்டு அச்சு உருவாக்கி நூல்களை வெளியிட்டனர். இம்முறையால் கையெழுத்திற்கும் அச்சிற்கும் வேறுபாடு காணப்படவில்லை. ஜான் கூட்டன்பர்க் எனும் ஜெர்மானியர் முதன் முதலில் ஐரோப்பாவில் தனித்தனி உலோக எழுத்துகளை 1437 ல் உருவாக்கி, அச்சுப்பொறியையும் கண்டுபிடித்தார். இதனால் இவர் 'அச்சுக் கலையின் தந்தை' என்று போற்றப்படுகின்றார்.

தனித்தனி எழுத்துக்களைக் கொண்டு 'விவிலிய நூல்' முதன்முதலில் தோலாலான தாளில் அச்சிடப்பட்டது. இந்நூலில் ஒரு பக்கத்திற்கு 35 வரிகள் இருந்தன. இவரது அச்சு இயந்திரம், வேலையை எளிதாக்கி அதிகப் படிகள் எடுக்க உதவியது. கூட்டன்பர்க்கின் மாணவரான நியூ மெரிஸ்டர் என்பவர் பல நாடுகளில் அச்சுத் தொழில் முன்னேறக் காரணமாக இருந்தார். அச்சுப் பெருக்கத்தால் பல்துறை நூல்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. நூல்நிலையங்கள் தோன்றின. இது உலகளாவிய தொழிலாக மாறியது.

ஆனால் தமிழில் ஆண்டிரிக் அடிகளாரின் முயற்சியால் 'தம்பிரான் வணக்கம்' என்ற முதல் நூல் 1553 ஆம் ஆண்டு வந்தது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை அச்சுக்கூடங்களை மிசினரிகளும் பிரிட்டிஸ் அரசும் மட்டுமே நடத்தமுடியும். எனவே அதுவரை வாசிப்புப் பழக்கம் தமிழர்களிடம் குறைவாகவே காணப்பட்டது. சுவடிகளை வாசித்தனர். அவற்றை வைத்துப் படிக்க பெரிய இராமயணப் பலகை என்று அழைக்கப்படும் சிக்குப்பலகை தேவைப்பட்டது. எழுத்துக்கள் தெளிவாகத் தெரிய அவற்றின் மேல் மஞ்சள் அல்லது கரி பூச வேண்டும்,மேலும் சுவடிகளில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறைறையைப் வாசிப்பது மிகக் கடினம். அச்சுப்பிரதிகள் வந்தபின்னர் வாசிக்கும் பழக்கம் படிப்படியாக ஏற்படலாயிற்று.

அச்சுப்பிரதியை மௌனமாக வாசிக்கும் பழக்கம் கடந்த ஒரு நூற்றாண்டாகவே தமிழ்ச்சமூகம் பின்பற்றி வருகிறது. எனவே நாம் வாசிப்பில் பின் தங்கியுள்ளதாக கவலைகொள்ளத் தேவையிலலை. மேலும் வாசிப்பை நாம் மேம்படுத்திக் கொள்ளவும் கைக்கொள்ளவும் வழிமுறைகளைக் காண்போம். வாசிப்பு பற்றி சில புள்ளிவிபரங்களைக் காண்போம்.

அமெரிக்காவில் National Entonment For Arts என்ற அமைப்பு ஒரு ஆய்வை மேற்கொண்டது. அந்த ஆய்வில் ஒரு அமெரிக்கர் ஒரு நாளில் 2 மணி நேரம் டிவி பார்க்கிறார். அமெரிக்க சனத்தொகையில் 25 வயதுக்கு மேற்பட்டோரில் 50 வீதமானோர் குறைந்தது நாளாந்தம் ஓரிரு இதழ்கள் மட்டுமே படிக்கின்றனர். வாரமொரு தடவை செய்தித்தாள் வாசிக்கின்றனர். ஆனால் கடந்த ஆறு மாதங்களில் ஒரு புத்தகத்தை மட்டும் வாசித்திருக்கின்றனர்' என 1999 ஆம் ஆண்டில் தேசிய வீட்டுக் கல்வி ஆய்வின் புள்ளிவிபரம் ஒன்று கூறுகின்றது.

இதன் கருத்து அமெரிக்க சனத்தொகையில் மீதி 50 வீதம் ஒரு நூலைக்கூடப் படிக்கவில்லை என்பதே. இதன் மறுபுறத்தில் ஒருவருடத்தில் 10 நூல்கள் படித்தால் வாசகர் உலகின் உயர்மட்டத்தில் இருப்பீர்கள் என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆசியான் (ASIAN) நூலகங்களில் வாசிப்புப் பழக்கத்தைத் தடுக்கும் காரணிகளில் மிக

முக்கியமானது அவர்கள் வாசிக்கும் சமூகமாக இல்லாது அரட்டையடிக்கும் சமூகமாக இருப்பதே என அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. பழம்பெருமை பேசுவதிலேயே காலத்தின் பெரும்பகுதியைக் கழிக்கின்ற தமிழ் சமூகத்துக்கும் இது பொருந்தக்கூடியதொன்று.

**வாசிப்பின் அடிப்படையில் சமூத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்**

வாசிக்கத் தெரிந்தவர்கள் ஆனால் வாசிக்காதவர்கள்: வாசிப்பு முக்கியம் என்ற உணர்வு இருந்தும் சோம்பல் காரணமாகவோ அல்லது நேரமின்மை காரணமாகவோ வாசிக்காதவர்கள்.

வாசிக்கத் தெரிந்தவர்கள் ஆனால் வாசிப்பின் முக்கியத்துவம் தெரியாதவர்கள் சமூகத்தின் கணிசமான பகுதி இப்பிரிவைச் சார்ந்தவர்களே. வாசிப்பின் முக்கியத்துவம் உணராமலேயே பட்டப்படிப்பையும் முடித்துவிட்டு பலதரப் பட்டத் தொழில் களிலும் அமர்ந்து விடுபவர்கள்.

வாசிக்கத் தெரிந்தவர்கள் வாசிப்பின் முக்கியத்துவமும் அறிந்தவர்கள். மிகக் குறைந்தளவு தொகையைப் பிரதி நிதித்துவப் படுத்துபவர்களும் இவர்களே. விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே இந்த வகையில் உள்ளனர்.

வாசிக்கத் தெரிந்தவர்கள் ஆனால் வாசிப்பதற்கான வளங்களோ வசதிகளோ அற்றவர்கள்: பொருளாதார ரீதியில் பின்தங்கிய ஊர்களில் நூலகங்கள் கூட இவர்களின் அறிவுப்பசிக்குத் தீனி போடும் வல்லமையுள்ளனவாக இல்லை என்பது கசப்பான உண்மை.

வாசிக்கத் தெரியாதவர்கள் ஆனால் வாசிப்பின் முக்கியத்துவம் தெரிந்தவர்கள்: அனேகமான நூலகங்களில் செய்தித்தாள் வாசித்துவிட்டு, தேநீர் கடைகளில் சுற்றியிருந்து கேட்கும் மக்கள்.

வாசிக்கத் தெரியாதவர்கள் அதேசமயம் வாசிப்பின் முக்கியத்துவமும் அறியாதவர்கள்: ஏழ்மை, எழுத்தறிவின்மை, அறியாமை போன்ற பலதரப்பட்ட அமைப்புசார் வன்முறையையும் ஒருங்கே அனுபவிக்கும் இத்தகைய மக்களுக்கு வாசிப்பு என்ற கருத்துநிலை புதிது.

**வாசிப்பைத் தூண்டும் காரணிகள்: வாசிப்புச்சூழல்**

பிறக்கும் எந்தக் குழந்தையும் தாயிடமிருந்தே பெரும்பாலானதைக் கற்கிறது. மனித வாழ்க்கையின் பெரும்பகுதி குடும்பம், சுற்றுப்புறச் சமூகம் என்ற வட்டத்துக்குள்ளேயே கழிகிறது.

“குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளின் வாழ்க்கையை என்னிடம் ஒப்படையுங்கள் அதற்குப்பிறகு அதன் வாழ்க்கை அமைப்பை எப்படிப்பட்டவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதைப்பற்றி எனக்கு கவலையில்லை” எனக் கூறும் பெஸ்டலோசி என்ற தலைசிறந்த கல்வியாளரின் கூற்று மனித வாழ்க்கையில் குடும்பமும் சுற்றுப்புறச் சமூகமும் வகிக்கும் பங்கைத் தெளிவாகக் காட்டப் போதுமானது. பார்த்துச் செய்தல் குழந்தையின் பிரதான பண்பு என்பதனால் தேடல் உணர்வுக்கான களம்இங்கிருந்தே ஆரம்பிக்கிறது.

காலைப் பேப்பர் படிக்காது விட்டால் பொழுதே புலர்வதில்லை என அங்கலாய்க்கும் அப்பாமார்கள், வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தினருக்குத் தேனீர் கொடுக்கவேண்டும் என்ற அந்த அவசரத்திலும் கூட தண்ணீர் கொதிப்பதற் கிடையில் சீனி சுற்றி வந்த பேப்பர் துண்டில் என்ன இருக்கின்றது என்று பரபரப்புடன் கண்களை மேயவிடும் அம்மாக்கள், நாட்டு நடப்புப்பற்றி அலசிக்கொண்டிருக்கும் ‘எல்லாம் தெரிந்தவர்கள்’ குழாம் ஒன்று தமக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தும் வாய்ப்பின்றித் திணறிக் கொண்டிருக்கும்போது, தேனீர் கொடுத்துவிட்டுத் திரும்பும் சாக்கில் இரத்தினச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தீர்வைக் கொடுத்துவிட்டுப்போகும் குறுகிய காலப் பள்ளிவாழ்க்கைக் குரிய ஆசிரியர்கள்.குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வாசிக்கும் உணர்வைச் சிறுவயதிலிருந்தே குழந்தைகளிடம் விதைத்து விடுகின்றனர். எனவே வாசிக்கும் சூழல் என்பது மிக முக்கியமான காரணி.

ஆனால் எதிர்பாரதவிதமாக இன்றைய தகவல் தொழிநுட்பக் காலகட்டம் மேற்குறிப்பிட்ட சூழலை அடியோடு மாற்றியமைத்து விட்டது. ஒரு புறம் நேரம் இல்லை என்ற கோஷமும் மறுபறத்தில் நேரம் போவதே தெரியாமல் தொலைக்காட்சியே கதி என்று கிடப்பதும் தான் குாந்தை களுக்கு நாம் தரும் சூழலாக மாறிவிட்டது. வாசிக்க விருப்பம்! ஆனால் நேரம் தான் கிடைப்பதில்லை என்பதெல்லாம் வெறும் நொண்டிச் சாக்கு. இப்போது இணையத்திலும் அலை பேசியிலும் நமது நேரம் எவ்வளவு வீணாகிறது என்று பார்க்கலாம்.

இணையத்தில் சராசரியாக 8 மணிநேரமும் அலைபேசியில் 3 மணி 22 நிமிடங்கள் செலவிடுகின்றார் ஒரு நபர். மதிய உணவின் பின்னர் குறட்டைவிட்டுத் தூங்கும் நேரம், தொலைக்காட்சித் தொடர்களுக்குள் சிறிதளவுகூட எவ்வித மறுமையின்றி ஆழ்ந்து அமிழ்ந்திருக்கும் நேரம், போன்றவற்றில் சிறிதளவு மிச்சப்படுத்தினாலும் போதும் நேரம் தாராளமாகக் கிடைத்துவிடும். இந்த நேரத்தை வாசிப்பிற்கு ஒதுக்க முடியும். மிக முக்கியமானது வாசிக்க வேண்டும் என்ற உணர்வு மட்டுமே.

நம்மைச் சுற்றி எப்போதும் நூல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல், நூல் எதுவும் வாசிக்காமல் வீட்டை விட்டு எக்காரணம் கொண்டு வெளியே போவதில்லை என்று பிடிவாதமாக இருத்தல். மேலும் நம்து நாட்டில் எதுவும் உடனே கிடைப்பதில்லை. அனைத்துமே காத்திருப்புக்குப் பின்னரே கிடைகிறது. பேருந்து நிறுத்தம், மருத்துவமனை, வங்கி, மின்கட்டண வரிசை, ரேசன் கடை வரிசை, ரயில் முன்பதிவு, சலூன் கடை,என்றவாறாக பல இடங்கள் நம்மை இப்போதும் காத்திருக்க வைகிறது. இத்தகைய இடங்களில் இருந்து இதழ்கள் வாசிப்பு என வாசிப்பு பழக்கத்தை தொடங்கலாம். மேலும் பயணம் செய்யும் போது அல்லது எந்தப் பணி செய்தாலும் காதில் Head phonr மாட்டிக்கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம். அதனைத் தவிர்த்து வாசிப்பில் நேரத்தைச் செலவிடலாம். படுக்கைக்கு அருகில், கைப்பையில் என்று முக்கியமான இடங்களில் படிக்க விரும்பும் நூலை வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் இத்தகைய உணர்வை உருவாக்கிக் கொள்ளலாம்.

- வாசிப்போம்

# தாமிரபரணியைச் சீரழிக்கும் இந்துமதம்



ராயல் சேலஞ்ச்

மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் பொதிகை மலையில் பூங்குளத்தில் உற்பத்தியாகும் தாமிரபரணி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இரண்டு மாவட்ட மக்களின் குடிநீராகவும், விவசாயத்திற்கும் பயன்படும் நதியாகும். பாபநாசத்திற்கு மேலே வனப்பகுதிகளின் வழியாக பாம்பாறு, கௌதலையாறு என்ற ஆறுகளாகவும், பாணத்தீர்த்த அருவியாகவும் 'தாமிரபரணி' பாபநாசம் அணைக்கு வந்து சேருகிறது. அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் சொரிமுத்து அய்யனார் கோயில், முண்டந்துறை வழியாக வந்து பாபநாசம் கீழ் அணையை வந்தடைகிறது. அணைக்கு வந்தடையும் நீர் அகஸ்தியர் அருவி மற்றும் பாபநாசம் மின் நிலையம் வழியாக பாபநாசம் தலையணைக்கு வந்து சேருகிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று மொத்தம் சுமார் 125 கி.மீ தூரம் ஓடி தூத்துக்குடி மாவட்டம் புன்னக்காயல் கடலில் கலக்கிறது.

பன்னாட்டு நிறுவனமான பெப்சி, தாமிரபரணி நீரைப் பயன்படுத்தித் தனது குளிர்பானங்களைத் தயாரிக்க உள்ளது. தமிழ்நாடு அரசும் அதற்கு அனுமதி கொடுத்துவிட்டது. இதை எதிர்த்து பல சுற்றுச்சூழல் அமைப்புகளும், இயற்கை ஆர்வலர்களும் "தாமிரபரணியைக் காப்போம்" என்ற முழக்கத்தோடு களமிறங்கியுள்ளார்கள். இந்நிலையில், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் முகிலன், செய்தியாளர்களிடம் பகிர்ந்துள்ள முக்கியத் தகவல்களைப் பார்ப்போம்.

"கங்கை கொண்டான் சிப்காட் வளாகத்தில் 2005 ம் ஆண்டில் இருந்து 'கோகோ கோலா' குளிர்பான கம்பெனி இயங்கி வருகிறது. ஆரம்பத்தில் ஒரு நாளுக்கு 3 லட்சம் லிட்டர் தண்ணீர் எடுப்பதாக அனுமதி பெற்று, படிப்படியாக தண்ணீரின் அளவையும், அனுமதியையும் நீட்டித்து தற்போது ஒரு நாளுக்கு 10 லட்சம் லிட்டர் வரை தண்ணீர் எடுத்து வருகிறார்கள். இந்த நிலையில், அதே சிப்காட் வளாகத்தில் அமெரிக்க நிறுவனமான பெப்சி கம்பெனிக்கு 36 ஏக்கர் ஒதுக்கப்பட்டு ஆலை கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பதினைந்தே நாட்களில் இதற்கு அரசு அனுமதி வழங்கி கட்டுமான வேலைகளும் நடந்து வருகின்றன.

இந்த 36 ஏக்கருக்கு அரசின் வழிகாட்டி மதிப்பு 5 கோடியே 40 லட்சம் ரூபாய். இதன் சந்தை மதிப்பு 15 கோடி ரூபாய். கேரளா போன்ற மற்ற மாநிலங்களில் இந்த கம்பெனியைத் துவங்க பெரிய அளவில் எதிர்ப்பு கிளம்பியதால், தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். இந்த 36 ஏக்கர் நிலத்துக்கு, பெப்சி நிறுவனம் ஒரு ஏக்கருக்கு ஒரு ரூபாய் வீதம், 98 ஆண்டு ஆண்டுகள் வரை செலுத்த வேண்டுமென்றும், 99 ம் ஆண்டு முதல் ஏக்கர் ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் செலுத்த வேண்டுமென்றும் அரசு, அந்த கம்பெனியுடன் 'மாபெரும் ஒப்பந்தம்' போட்டுள்ளது. 15 கோடி ரூபாய் சந்தை மதிப்புள்ள நிலத்துக்கு 100 ஆண்டுகளுக்கு பெப்சி நிறுவனம் செலுத்தவிருக்கும் தொகை வெறும் 3,672 ரூபாய்தான். அதோடு, இங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தாமிரபரணி நதியிலிருந்து தினமும் 15 லட்சம் லிட்டர் தண்ணீர் எடுக்க அனுமதி கேட்டுள்ளது, பெப்சி நிறுவனம்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளுக்கு வாரம் இரண்டு நாட்கள் மட்டும்தான் குடிநீரே தற்போது கிடைத்து வருகிறது. இந்த நிறுவனம் தண்ணீர் எடுக்க ஆரம்பித்தால், மாவட்டத்தில் குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும். வரையறையே இல்லாத தாமிரபரணி நீர்க்கொள்ளையால் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 86 ஆயிரம் விவசாய நிலங்களும் பாதிக்கப்படும். ஏற்கெனவே கங்கை கொண்டான் சிப்காட் வளாகத்தில் இயங்கி வரும் பல தொழிற்சாலைகளால் இப்பகுதியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளும் கடுமையாக மாசுபட்டுள்ளன" என்றார், முகிலன். மேற்கண்ட தகவல்கள் விகடன் இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**கல்முதலாளிகளின் கழிவு**

தமிழ்நாட்டிலேயே உற்பத்தியாகும் ஒரேமுக்கிய நதியான தாமிரபரணியைச் சீரழிப்பதில் பன்னாட்டு முதலாளிகளின் பங்கு எவ்வளவு உள்ளதோ அதற்குச் சற்றும் குறையாமல் தமிழ்நாட்டுக் கல்முதலாளிகளும் பங்கெடுக்கிறார்கள்.

நதியின் பாதையில் பாணத்தீர்த்தம் என்ற இடத்தில் இராமன் தனது தந்தை தசரதனுக்கு திதி செய்ததாக ஒரு புராணக்கதை உலவுவதால், நாடுமுழுவதுமிருந்து பெரும்பாலான மக்கள் இங்கு வந்து தமது முன்னோர்களுக்குப் பிதுர்க்கடன்களைச் செய்கிறார்கள். இதற்குக் கீழேயுள்ள

சொரிமுத்து அய்யனார் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆடி அம்மாவாசையின் போது ஏறத்தாழ 10 இலட்சம் பேர் கூடுகின்றனர். திதிக்காரியக் கழிவுகள், 10 இலட்சம் மக்களின் கழிவுகளோடு பயணத்தைத் தொடருகிறது தாமிரபரணி.

பாவங்களைப் போக்கும் புண்ணிய இடமாக பக்தர்களால் கருதப்படும் பாபநாசம் சிவன்கோவில் அருகிலும் தாமிரபரணியில் மத-மனிதக்கழிவுகள் கலக்கின்றன. திதி கொடுத்தல், அஸ்தி எனும் சாம்பல்மூட்டைகள், இறந்தவர்களின் எரிக்கப்பட்ட உடலின் எலும்புகள், தோஷ நிவர்த்திப் பூஜையின் கழிவுகள் போன்றவை நதியின் இயல்புத்தன்மையை முற்றிலும் அழிக்கின்றன.

இதுபோன்ற மதச்சடங்குகளைச் செய்பவர்கள் அந்த நேரத்தில் அவர்கள் அணிந்திருந்த ஆடைகளை மீண்டும் பயன்படுத்துவதில்லை. அது ஆச்சாரத்துக்கு விரோதமாம். நீராடிய பின் தாங்கள் அணிந்திருக்கும் பழைய ஆடைகளைக் கழற்றி அப்படியே ஆற்றில் விட்டு விடுகின்றனர். மேலும் தமது முன்னோர்களுக்குத் திதி கொடுப்பதின் ஒரு பகுதியாக புதிய ஆடைகளை வாங்கி ஆற்றில் வீசி எறிகின்றனர். இதனால் ஆற்றில் துணிகள் தேங்கி, அழுகி நாற்றமெடுக்கிறது, நீரும் கலங்கி கழிவு நீர் போல் ஓடுகிறது. தங்களது பாவத்தைப் போக்கிக் கொள்ள வருபவர்கள் இயற்கைக்குப் பெரும் கேட்டை உருவாக்கிச் செல்கிறன்றனர்.

பாபநாசத்தின் மிகப்பெரும் கல்முதலாளியான சிவனின் முன்னிலையில், பலஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நடந்துவரும் இவை போன்ற இந்து மதப்பண்பாட்டு நடவடிக்கைகளால் தாமிரபரணி சீரழிகிறது, தென்னகத்தின் கூவமாகப் போகிறது. இதைத் தடுப்பதற்காகப் பாணத்தீர்த்தம் தொடங்கி கல்முதலாளியின் கோவில் வரை பல இடங்களில் *“ப்ளாஸ்டிக் பொருட்களை வீசி எறியாதீர்கள், ஆடைகளை வீசி எறியாதீர்கள், ஆடைகளை அதற்கென வைக்கப்பட்டுள்ள தொட்டியில் போடுங்கள்”* என்ற அறிவிப்புகள், விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்துபவர்கள் இங்கு வருவதில்லையே. முதலாளி ‘கல்’ என்றால் அவனடி அடிமைகள் - சிவனடியார்கள் ‘மண்’ஆகவே உள்ளனர். எனவே இந்த அறிவிப்புகள் பயனற்றுப் போய்விடுகின்றன.

### 125 டன் கழிவுகள்; 1750 நோய்க்கிருமிகள்

இயற்கைவளம் குறித்த அக்கறை இல்லாத இந்து பக்தர்களின் சீரழிவுப் பண்பாட்டால் தேங்கிக்கிடந்த கழிவுகளின் அளவு என்ன தெரியுமா? 2012 ல் ‘சித்தர் கோட்டம்’ என்ற அமைப்பு தாமிரபரணியைச் சுத்தப்படுத்தும் பணியில் இறங்கியபோது, பாபநாசம் அருவிக்கு அருகில் மட்டும் 125 டன் துணிக் கழிவுகளும், 25 டன் பிளாஸ்டிக் உள்ளிட்ட இதரக் குப்பைக்கழிவுகளும் அகற்றப்பட்டன.

தாமிரபரணிப் பாதுகாப்பு இயக்கம் என்ற அமைப்பு விக்கிரமசிங்கபுரத்தில் ஆற்றைக்காக்க ஒரு கலந்துரையாடலை நடத்தியது. அதில் அதிர்ச்சியான தகவல் ஒன்று வெளியிடப்பட்டது. தாமிரபரணி கடலில் கலக்கும் புன்னைக்காயல் பகுதியில் ஆற்றுநீரைச் சேகரித்து, நீர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதில் 1 லிட்டர் தாமிரபரணி நீரில் 1750 நோய்க்கிருமிகளும், பிற கழிவுகளும் இருந்ததாம். இந்தப்போக்கு நீடித்தால் நொய்யலைப்போல, கூவத்தைப்போல தாமிரபரணியும் அழியும் என்ற ஆபத்தான நிலையை மாற்ற இந்த அமைப்பு பல்வேறு விழிப்புணர்வுப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

ஆலைகளின் கழிவுகள், இரசாயனக் கழிவுகள் போன்றவற்றை எதிர்த்து எவரும் பரப்புரை செய்வார்கள். பெப்சி என்ற பன்னாட்டு முதலாளியின் சுரண்டலை எதிர்த்து அனைத்து அரசியல் கட்சிகளும் களமிறங்குவார்கள். ஆனால் கல்முதலாளியான சிவனையும், அவன் உருவாக்கி வைத்துள்ள மூடநம்பிக்கைகளையும் முற்றிலும் அழிக்காமல் - அந்த மூடநம்பிக்கைகளை முதலாகக்கொண்டு பிழைப்பு நடத்தும் பார்ப்பனர்களை அம்பலப் படுத்தாமல் தாமிரபரணியைக் காக்க இயலாது என்பது உறுதி.

### மரணசாசனப்பதிவு

தாமிரபரணி மட்டுமல்ல, ஈரோடு மாவட்டம் பவானிகூடுதுறை, ஈரோடு கருங்கல்பாளையம், கொடுமுடி மகுடேசுவரர் ஆலயம், திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம், ஸ்ரீரங்கம் வடக்குவாசல், கொள்ளிடம் ஆறு, திருவையாறு, மதுரை திருப்புவனம், இராமேசுவரம் கடற்கரை போன்றபகுதிகளில் உள்ள - ஆறுகளும், நீர்நிலைகளும், கடலும் - திதி, பிதுர்க்கடன், தோஷம் கழித்தல் போன்ற இந்துமதச் சீரழிவுப் பண்பாட்டு நடவடிக்கைகளால் நிலைகுலைந்து வருகின்றன.

இயற்கைக்கு எதிரான இந்த இந்துப் பண்பாட்டு நடவடிக்கைகள் ஒழிய வேண்டுமானால் - அறிவியல் பண்பாட்டை நடைமுறைப்படுத்த விரும்பும் பெரியாரியலாளர்கள் அத்மா - மோட்சம் - நரகம் போன்ற மடத்தனங்களை மக்களிடையே அம்பலப்படுத்தவேண்டும்.

உடல்தானம் செய்வதைப் பரப்பவேண்டும். நாம் இறந்தபின் செய்யப்படும் சடங்கு, சாஸ்திர, சம்பிரதாயங்களை மறுத்து - அவற்றைச் செய்யக்கூடாது என்ற நமது எண்ணத்தை மரணசாசனமாகப் பதிவுசெய்து, அந்தப் பதிவை இல்லத்தில் படமாக அலங்கரித்து வைக்கவேண்டும். அதுவே பெரும் பரப்புரையாக அமையும். 80களில் ஆயிரக்கணக்கான பெரியார் தொண்டர்களின் வீடுகளில் இதுபோன்ற மரணசாசனங்கள் புகைப்படங்களைப் போல ஃப்ரேம் பண்ணப்பட்டுத் தொங்கவிடபட்டிருப்பதைக் கண்டிருப்போம். அண்மைக் காலங்களில் அப்படி ஒருவீட்டைக்கூடக் காணமுடிவதில்லை. பெரியார் பண்பாட்டை நடைமுறைப் படுத்துவோம். இயற்கை வளங்களைக் காப்போம்.


### நன்கொடைகள்

| | |
|---|---|
| மருத்துவர் சவுந்திரபாண்டியன், மதுரை | 2000 |
| கவிஞர் தமிழேந்தி | 750 |
| பழனிவேல், முருக்கன்குடி, பெண்ணாடம் | 500 |
| கணேசன், கணேஷ் வீடியோஸ், ஆனைமலை | 1200 |
| கோபி அர்ஜூனன் | 1000 |
| விஜி, ஆத்தூர், திண்டுக்கல் | 1000 |

# இந்துத்துவத்திற்கு எதிராக 5 நூல்கள்




1500 பக்கங்கள்
மக்கள் பதிப்பு
ரூ.300/-








வங்கி மூலம்
**Vidiyal Pathippagam**
**Karur Vysya Bank**
1660 115000002050
IFSC KVBL0001660

ஜனவரி 2016-ல்
புத்தகங்கள் கிடைக்கும்.
முன்பதிவு
செய்யப்படுகிறது.




கூரியரில் பெற
ரூ.400/-
வங்கியில்
செலுத்தவும்




**விடியல் பதிப்பகம்**
A 51, பாலன் நகர், பீளமேடு, கோவை - 4. 0422 : 2576772, 94434 68758

வாலாசா வல்லவன்

# நீதிக்கட்சியின் சமூகப்புரட்சி

நீதிக்கட்சி ஆட்சியில் அரிசனங்கள் எவரும் அமைச்சராக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை ம.பொ.சி.யின் ‘தமிழ்நாட்டில் பிற மொழியினர்’ என்ற நூலிலிருந்து மேற்கொள் கொடுத்துள்ளார் வழக்குரைஞர் பா. குப்பன் (பக்கம் –81) இது வழக்கமான குற்றச்சாட்டுதான். இதே மேற்கோளைப் பழ. நெடுமாறன் தனது ‘உருவாகாத இந்திய தேசியமும் உருவான இந்துப் பாசிசமும்’ என்ற நூலிலும் கொடுத்துள்ளார்.

இவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். 1919 இல் இயற்றப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டப் படி நடைபெற்றது நீதிகட்சி ஆட்சி இரட்டை ஆட்சி முறையாகும். நீதிக்கட்சி ஆட்சிக் காலம் முழுவதும் ஒரு முதலமைச்சர் 2 அமைச்சர்கள் என மொத்தம் 3 பேர் மட்டுமே அமைச்சர்களாக இருந்தனர். 1935 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டப்படி இரட்டைஆட்சி முறை நீங்கிவிட்டது. முழுப் பொறுப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கே இருந்தது.

1937 இல் அமைந்த இராஜாஜி ஆட்சியில் முதலமைச்சர் உட்பட 10 பேர் அமைச்சர்களாக இருந்தனர். 10 அமைச்சர்களில் தாழ்த்தப்பட்டவர் ஒருவருக்கு அமைச்சர் பதவி கொடுப்பது ஒன்றும் பெரிய செயல் அல்ல. 10 அமைச்சர்களில் முதலமைச்சர் இராஜாஜி, டி. பிரகாசம், டாக்டர் டி. எஸ். எஸ். இராஜன், வி. வி. கிரி ஆகிய 4 பேர் பார்ப்பனர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். சபாநாயகரும் புலுசு சாம்பமூர்த்தி என்ற ஆந்திரப் பார்ப்பனரே. இது நியாயமா என்பதை ம. பொ. சி அன்பர்கள்தான் கூற வேண்டும்.

இராஜாஜி ஆட்சியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வி.ஐ.முனிசாமிப்பிள்ளை என்பவரை பொம்மையாக ஆட்சியில் அமரவைத்துக் கொண்டு ஆதிதிராவிடர்களுக்கு எதிராகப் பல காரியங்களை இராஜாஜி செய்தாரே அது நியாயமா?

15.8.1938 அன்று எம்.சி.ராஜா ஆதிதிராவிடர்கள் கோயில் நுழைவு மசோதா ஒன்றைச் சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார். உடனே பிரதம மந்திரியார் எழுந்து தடுமாற்றத்துடன், தர்க்கதியற்ற விதமாய், ஒருவரும் நம்ப முடியாத வகையில் அம் மசோதாவை எதிர்த்துப் பேசியது மிக்க ஆச்சரியத்தை விளைவித்தது.... பிறகு முதலமைச்சர் உருக்கமாகப் பேசி இந்த மசோதவை நிறுத்தி வைக்கும் படி எம்.சி.ராஜாவிடம் சொன்னார்..... அதற்கு எம்.சி.ராஜா பதில் அளிக்கும் போது

“நான் அவரை (முதலமைச்சரை) நம்பினேன். ஆனால் இப்பொழுது அவர் கூறுவதைச் செவியுற்றுக் கேளுங்கள்! இம் மசோதாவை வாபாஸ் பெற்றுக் கொள்ளவும். சபையிலே இவ்விஷயம் விவாதிக்கப்படாம லிருக்கவும் வேண்டிய முயற்சிகளை இப்பொழுது செய்கிறார் இப்பிரதம மந்திரியார். இது அவருக்கே நியாயமாகத் தோன்றுகிறதா? நான் இவ்விஷயத்தில் பெரிதும் ஏமாற்றமடைந்தேன்” என்று சட்டசபையிலேயே பேசினார்.

முதலமைச்சர் இராஜாஜி 45 நிமிடங்கள் இம் மசோதாவை எதிர்த்துப் பேசிக் காங்கிரஸ் கட்சியினர் யாரும் இதற்கு வாக்களிக்கக் கூடாது என்று கூறினார். வாக்கெடுப்பில் எம்.சி.ராஜாவின் ஆதி திராவிடர் கோயில் நுழைவு மசோதாவுக்கு ஆதரவாக 24 வாக்குகளும் எதிராக 130 வாக்குகளும் கிடைத்தன. (ஆதாரம்: ஆரிய ஆட்சி பதிப்பாசிரியர் வாலாசாவல்லவன் பக் – 50 முதல் 56 வரை.)

நீதிக் கட்சி ஆட்சியில் ஆதிதிராவிடருக்கு அமைச்சர் பதவி கொடுக்கவில்லை என்றாலும் அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை மறுக்கவில்லை. ஆனால் இராஜாஜி ஆட்சியில் பொம்மையாக ஒரு அமைச்சரை உட்காரவைத்துக் கொண்டு அவரை அந்தச் சமூகத்துக்கு எதிராக வாக்களிக்க வைத்தார் இராஜாஜி.

நீதிக்கட்சி ஆட்சியில் மாபெரும் சமூகப் புரட்சிக்கு வித்திடப்பட்டது. இதை வெறும் தெலுங்கர்கள் ஆதிக்கம் செலுத்திய ஆட்சி என்று புறந்தள்ளி விட முடியாது. நீதிக்கட்சி ஆட்சியைத் தெலுங்கர்கள் ஆதிக்கம் மிகுந்த ஆட்சி என்று குறை சொல்லும் தமிழ்த் தேசியர்கள் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இராஜாஜி முதல்வராக இருந்தபோது 1937, 1952 ஆண்டுகளில் என்ன நிலைமை என்பதை மூடி மறைக்கின்றனர்.

1937 இல் இராஜாஜி முதல்வராக இருந்த போது அவர் உள்பட 10 பேர் அமைச்சர்களாக இருந்தார்கள். அதில் டி.பிரகாசம், வி.வி.கிரி, பெசவாட கோபால ரெட்டி, மூவர் ஆந்திராவைச் சேர்ந்த அமைச்சர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்த ப.சுப்பராயன், வி.ஐ.முனிசாமிப் பிள்ளை, எஸ். இராமநாதன், டி.எஸ்.எஸ்.இராஜன் என்கிற பார்ப்பனர் ஆக நால்வர் தமிழ்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்களாக இருந்தார்கள். மற்ற அமைச்சர்கள் கேரளாவையும், கன்னடப் பகுதியையும் சேர்ந்தவர்கள். சபாநாயகர் புலுசு சாம்பமூர்த்தி ஒரு ஆந்திரப் பார்ப்பனரே.

1952இல் இராஜாஜி அமைச்சரவையில் 15 பேர் அமைச்சர்களாக இருந்தார்கள். அதில் என். ரங்கா ரெட்டி, எம். வி.கிருஷ்ணாராவ், என். சங்கர ரெட்டி, பட்டாபி ராமராவ், டி. சஞ்சீவய்யா ஆகியோர் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் ஆர். நங்கன்னகவுடா, ஏ.பி.ஏ.ஷெட்டி கர்நாடகப் பகுதியைச் சேர்ந்தவர்கள். வெங்கடசாமி நாயுடு தமிழ்த் தேசியவாதிகள் பார்வையில் தெலுங்கர் குட்டி கிருஷ்ணன் நாயர், கேரளாவை சேர்ந்தவர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ப. சுப்பராயன், வி.சி.பழனிச்சாமி, எம்.ஏ.மாணிக்கவேலர் (உழைப்பாளர் கட்சியைக் கலைத்துவிட்டு வந்ததால் அமைச்சர் பதவி) சண்முக ராஜேஸ்வர சேதுபதி என 15 பேர் கொண்ட இராஜாஜி அமைச்சரவையில் 4 பேர் மட்டுமே தமிழர்கள். இதையெல்லாம் ம.பொ.சி எழுதமாட்டார். ஏனெனில் ராஜாஜி அவருடைய குருநாதர், நீதிக்கட்சியைப்பற்றி குறைக் கூறும் தமிழ்த் தேசியவாதிகள் இனியேனும் உண்மையை உணர்வார்களா?

**நீதிக்கட்சி ஆட்சியில் ஆதிதிராவிடர்கள் பெற்ற நன்மைகள்:**

- பள்ளர், பறையர் என்று இழிவாக உள்ள பெயரை மாற்றி ஆதி திராவிடர் என்ற பெயரை எங்கள் சமூகத்திற்கு இட்டு அழைக்க வேண்டும் என்று எம்.சி.இராசா 20.02.1922 சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார். அத்தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. அதன் அடிப்படையில் இனி இச்சமூகத்தினரை ஆதித்திராவிடர்கள் என்றே அனைத்து ஆவணங்களிலும் பதியவேண்டும் என்று அரசாணை எண் 217 சட்டம் (பொது) நாள் 25.03.1922 ல் பிறக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது.
- ஆதிதிராவிடர் பிள்ளைகளைப் பொது பள்ளிகளில் கட்டாயமாகச் சேர்க்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. G.O.No.87 கல்வி நாள் 6.1.1923
- அரசு மானியம் பெறும் பள்ளிகளில் ஆதி திராவிடர் பிள்ளைகளைச் சேர்க்க மறுத்தால் அரசு மானியம் இரத்துச் செய்யப்படும் என அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. G.O.No 88. கல்வி நாள் 16.1.1923.
- திருச்சி மாவட்ட நிர்வாகம் (Distric Board) ஆதிதிராவிடர் பிள்ளைகளை தனி இடத்தில் தங்கி படிக்க அனுமதி கோரியதை அரசு ஏற்க மறுத்து, ஆதி திராவிடப் பிள்ளைகளையும், மற்ற சாதிப் பிள்ளைகளையும் ஒன்றாகத்தான் படிக்க வைக்க வேண்டும் என்று ஆணைப்பிறப்பித்தது. G.O.No 2015 கல்வி நாள் 11.2.1924.
- தொடக்கப்பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டத் தொடங்கும் போதே ஆதி திராவிடப் பிள்ளைகள் அணுக முடியுமா? ஏனெனில் கோவில், அக்கிரகாரம், போன்ற இடங்களில் ஆதி திராவிடர் பிள்ளைகளை மற்ற சாதியினர் அனுமதிக்க மறுப்பார்கள் என்பதால் அதை ஆய்ந்து பார்த்து ஆதி திராவிடர் பிள்ளைகள் வருவதற்குத் தடையில்லாத இடத்தில் பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட அரசு ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. G.O.No.2333 eh-27-11-1922
- இந்தியாவிலேயே முதன் முதலாக ஆதி திராவிட மாணவர்கள் இலவசமாகத் தங்கி படிக்க. ஆதி திராவிடர் மாணவர் விடுதி திறக்கப்பட்டது. G.O.No.2563 நாள் 24.10.1923. இதைக் கட்டுவதற்கான பணம் முழுவதையும் ஆதிதிராவிடர் தலைவர் எம்.சி.ராஜா அவர்களிடமே கொடுத்துகட்டுவித்தார்கள். 1931 க்குள் ஆதி திராவிட மாணவர்களுக்கு மூன்று விடுதிகள் ஏற்படுத்தப்பட்டன. (T.G.Boag ICS. Madras prsidency 1881 - 1931 பக்கம் 132)
- ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1243. நாள் 5.7.1922)
- ஆதி திராவிட மானவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதத் தேர்வுக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1241 சட்டம் (கல்வி) நாள் 17.10.1922)
- ஆதி திராவிட மாணவர்களின் கல்வி நிலையைப் பற்றிய விவரத்தை அரசுக்கு அளிக்கவேண்டும் என்று அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 859 நாள் 22.06.1923)
- ஆதி திராவிட வகுப்பு மாணவர்களுக்கு நான்காம் வகுப்பு முதல் கல்வி உதவித்தொகை வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 1568 சட்டம் (கல்வி) நாள் 06.11.1923)
- ஆதி திராவிட மாணவர்களுக்கு சில பள்ளிகளில் தனி வகுப்பறைகள் இருந்ததை அரசு கண்டித்தது. ஆதி திராவிட மாணவர்களை அதிக எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளும் கல்வி நிறுவனங்களுக்கு அதிக அளவில் அரசின் பண உதவி அளிக்கப்படும் என்று அரசாணைப் பிறக்கப்பட்டது. (அரசாணை எண் 205 கல்வி நாள் 11.02.1924)
- மருத்துவக் கல்லூரியில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பின் தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கல்விஉதவித்தொகை வழங்க அரசாணைப் பிறப்பிக்கப்பட்டது. (அரசாணை எண் 866 (பொது) சுகாதாரம் நாள் 17.06.1922)

சிதம்பரத்தில், சாமி சகஜானந்தம் ஆதித் திராவிடப் பிள்ளைகளுக்கென 1916இல் ஒரு பள்ளியைத் தொடங்கினார். ஆங்கில அரசிடம் நிலம் கேட்டார். அவர்கள் கொடுக்கவில்லை. அவர் திண்ணைப் பள்ளி மாதிரி நடத்தினார். பனகல் அரசர் தான் 50 ஏக்கர் நிலம் கொடுத்து அதை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அங்கீகாரம் கொடுத்து, ஆண்டு தோறும் அரசின் நிதியுதவி கிடைக்கவும் வழி செய்தார்.

சென்னையில் எல்.சி. குருசாமி அருந்ததியர்களுக்கு 5 பள்ளிகளைத் தொடங்கினார். அதில் நான்கு இரவுநேரப் பள்ளிகள். ஒன்று பகல்நேரப் பள்ளி. பனகல் எல்.சி. குருசாமியை மேலாளராக இருக்க வைத்து அய்ந்து பள்ளிகளுக்கும் அரசின் நிதி உதவியை எல்.சி. குருசாமியிடமே கொடுத்து வந்தார்.

பனகல் அரசர் காலத்தில்தான் ஆதித்திராவிட மாணவர்கள் 3 பேருக்கு வகுப்புரிமையின் அடிப்படையில் மருத்துவக்கல்வியில் இடம் கிடைத்தது. அதேபோல் பொறியியல் மற்றும் வேளாண் கல்லூரியிலும், கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் இடங்கள் கிடைத்தன. மற்ற பல அரசுப் பணிகளிலும் ஆதித்திராவிடர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். ஆதித்திராவிடர்களின் நலனைக் காப்பதில் அவருக்கு நிகர் அவரே. இதுவும் பெரியாரைப் பனகல் பக்கம் இழுத்துச் சென்றதற்கு மற்றொரு காரணம் ஆகும்.

இந்தியாவில் இருந்த வேறு எந்த மாகாணத்திலும் இல்லாத அளவிற்கு நீதிக்கட்சி ஆட்சியில் ஆதி திராவிடர்களுக்குப் பஞ்சமி நிலத்தை வாரி வழங்கியது. நீதிக்கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரை 1920-21 ஆதி திராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பஞ்சமி நிலம் 19,251 ஏக்கர் மட்டுமே. ஆனால் நீதிக்கட்சி ஆட்சியில் 1931 வரை கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலம் 3, 42, 611 ஏக்கர் ஆகும். (ஆதாரம் T.G.Boag I.c.s என்ற சென்னை மாகாண அரசின் புள்ளிவிவர அதிகாரி எழுதிய Madras prsidency 1881 - 1931 என்ற நூல் பக்கம் 132.) மேலும் 1935 மார்ச் 31 வரை ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சமி நிலத்தின் அளவு 4, 40, 000 ஏக்கராக உயர்ந்துள்ளதை ஜஸ்டிஸ் ஏடு 19.7.1935 இல் சுட்டிக் காட்டியுள்ளது.

1921 இல் இருந்து 1928க்குள் ஆதி திராவிடர்கள் உள்ளாட்சி நிர்வாகங்களில் 100% நியமனம் செய்யப்பட்டனர்.(T.G. Boag ICS Madras prsidency 1881-1931 P No. 134)

இந்தியா முழுவதும் 1928 ல் இருந்த தாழ்த்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாகாணம் வாரியாக: சென்னை 10, பம்பாய் 2, வங்காளம் 1, அயக்கிய மாகாணம் 1, பஞ்சாப் -, பீகார் 2, மத்திய மாகாணம் 4, அஸ்ஸாம் -, பர்மா - சான்று (எம்.சி. ராஜா வாழ்க்கை வரலாறு எழுத்தும் பேச்சும் ஜெ. சிவசண்முகம் பிள்ளை பக். 35, 36)

இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்தான்ஆண்டனர். ஆனால் சென்னை மகாணத்தில் மட்டும் தான் சட்டமன்றத்திற்குத் தாழ்த்தப்பட்டவர்கள் 10 பேர் நியமிக்கப்பட்டனர்.1935 அரசியல் சட்டம் வரும்வரை தாழ்த்தப்பட்டவர் நியமனம் மூலம் மட்டுமே பதவி வகித்தனர். அப்போது டெல்லியில் இருந்த சட்டசபைக்குப் பெயர் (MLA) Member of Legislative Assembly 1928 ல் சென்னை சட்டமன்றம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லி சட்டசபைக்கு அனுப்பப்பட்ட முதல் தாழ்த்தப்பட்ட உறுப்பினர் எம்.சி.ராஜா தான். நீதிக்கட்சி ஆதரவு பெற்ற டாக்டர் சுப்பராயன் ஆட்சியில் தான் அது நிறைவேறியது. அவர் டெல்லி சென்றதால் தான் அகில இந்திய அளவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒருங்கிணைக்க முயற்சி செய்தார்.

ஆதி திராவிடர் பொது இடங்களில் புழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால் அவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்று இரட்டை மலை சீனிவாசன் 22.08.1924 இல் சென்னை சட்ட மன்றத்தில் கொண்டு வந்த தீர்மானத்தையும், வீரய்யன் 24.02.1925 இல் கொண்டு வந்த தீர்மானத்தையும் ஏற்றுக் கொண்டு சத்திரம், சாவடி, அரசு அலுவலங்கள் பொதுச் சாலைகள், பொதுக் கிணறுகள், போன்ற பொதுவான இடங்களில் ஆதி திராவிடர்கள் வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களுக்கு ரூ 100 அபராதம் விதிக்கப்படும் என்று அரசாணையில் (Gasate notification 08.04.1925 part IV) தெரிவிக்கப்பட்டது. இந்த அரசாணையைத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளில்

கல்வி, சுகாதாரம், பொதுப்பணி போன்ற முக்கிய பணிகளை அப்போது உள்ளாட்சி நிர்வாகங்களே கவனித்து வந்தன. அந்த நிறுவனங்களில் ஆதி திராவிடர் ஒருவரை அரசு நியமனம் மூலம் நிரப்பி அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்களித்தது நீதிக் கட்சியே சென்னை மாகணத்தில் உள்ளாட்சியில் ஆதி திராவிடர் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த விவரம்:

| நியமணம் பெற்றவை | மொத்த எண்ணிக்கை | ஆதி திராவிடர் |
|---|---|---|
| **1920-21** | | |
| மாவட்டக் கழகங்கள் (District Boards) | 25 | 17 |
| வட்டக் கழகங்கள் (Taluk Boards) | 125 | 66 |
| நகராட்சிகள் (Municipalities) | 79 | 46 |
| **1924-25** | | |
| மாவட்டக் கழகங்கள் | 24 | 20 |
| வட்டக் கழகங்கள் | 126 | 72 |
| நகராட்சிகள் | 80 | 61 |
| **1928-29** | | |
| மாவட்டக் கழகங்கள் | 25 | 25 |
| வட்டக் கழகங்கள் | 129 | 128 |
| நகராட்சிகள் | 81 | 81 |


Justice
(With which THE NEW TIMES is incorporated)
MADRAS, MONDAY, AUGUST 30, 1937
Regd. No. M.
HALF ANNA
ADVERTISE
The Perfect complexion soap
MYSORE

வெளியிட்டதோடு தண்டோரா மூலம் சென்னை மாகாணம் முழுவதும் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு இருந்த சமூகத்தடைகளை நீக்க வழிவகைச் செய்தது நீதிக் கட்சியே.

1927 முதலே சுயமரியாதை இயக்கத்தினரும், நீதிக் கட்சியினரும் பல்வேறு கோயில்களில் ஆதி திராவிடர்களை உள்ளே அழைத்துச் சென்று ஆதி திராவிடர்களின் உரிமைகளுக்காகப் போராடினர். (பார்க்க கோவில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடர் இயக்கங்களின் பங்களிப்பு வாலாசா வல்லவன்) அரசுப்பணிகளில் தாழ்த்தப்பட்டோருக்கு, மற்ற பார்ப்பனரல்லதார்களுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது நீதி கட்சி ஆட்சிதான்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அளித்து நிறைவேற்றப்பட்ட முதல் அரசாணை எண் 613 நாள் 16.09.1921இல் வெளியிடப்பட்டது. இரண்டாவது வகுப்புரிமை ஆணை எண் 652 நாள் 15.08.1922இல் பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணையின் படி வகுப்புரிமை அடிப்படையில் பணியிடம் நிரப்பப்படுவதை உறுதி செய்யும்படி துறைத் தலைவர்கள், உயர்மட்ட நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் ஆறுமாதத்திற்கு ஒருமுறை அரசுக்கு அளிக்கவேண்டும் என்று ஆணை இடப்பட்டது.

1921 – 22 இல் வகுப்புரிமை ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் பார்ப்பனர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து அதை நடைமுறைப்படுத்தா வண்ணம் இடையூறு செய்து வந்தனர். 1924 இல் அரசு பணிகளில் வேலைக்கு ஊழியர்களை அமர்த்துவதற்காக ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டது.

**'Staff Selection board'** என்று அதற்குப் பெயர். அது தான் இப்போது **T.N.P.S.C** ஆக மாறியுள்ளது. 1925 முதல் அரசாங்க ஆண்டறிக்கைகளில் வகுப்பு வாரியாக அரசு ஊழியர்கள் விவரம் வெளியிடப்பட்டு வந்தது. பனகல் அரசர் ஆட்சிக்காலத்தில் 1927–1926க்குள் ஆதி திராவிடர்கள் காவலர் பணியில் 382 பேரும், தலைமைக் காவலர் பணியில் 20 பேரும், துணை ஆய்வாளர் பணியில் ஒருவரும் அமர்த்தப்பட்டனர். 1935இல் துணைக் கண்காணிப்பாளர் வரை ஆதி திராவிடர் பதவி உயர்வு பெற்றனர். 1927 இல் தான் ஆதி திராவிடர் ஒருவர் இன்ஸ்பெக்டராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**('Staff Slection board'** அறிக்கை பக் 120.) அந்த காலக்கட்டத்தில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் ஆதி திராவிடர்களைக் காவல் துறையில் காவலர்களாக கூடச் சேர்த்துக் கொண்டதில்லை என்று எம்.சி ராசா 1928 இல் மத்திய அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் கூறியுள்ளார். (எம்.சி. ராசா வாழ்க்கை வரலாறும் எழுத்தும் பேச்சும் ஜெ. சிவசண்முகம் பிள்ளை பக் 42)

**'Staff Selection board'** இல் 7.2.1925 சி. நடேச முதலியார் கொண்டு வந்த சட்ட மன்றத் தீர்மானத்தின் படி கீழ்க்கண்டவாறு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் பார்ப்பனரல்லாதாரிலும், ஆதி திராவிடர்களிலும் அரசு வேலைக்குச் செல்ல முடிந்தது.

1. பார்ப்பனரல்லாத இந்துக்கள் – 40
2. பார்ப்பனர்கள் – 20
3. முகமதியர்கள் – 20
4. ஆங்கிலோ இந்தியர், இந்தியக் கிறித்துவர் – 10
5. ஆதி திராவிடர்கள் – 10

(ஆதாரம்: சென்னை சட்ட மன்ற விவாதக் குறிப்பு நாள் 27 – 8– 1927 பக்கம் 469)

1930 இல் இராமநாதபுரம் மாவட்ட கழகத் தலைவராக இருந்த ஊ.அ.பூ. சௌந்தரபாண்டியன் பேருந்து முதலாளிகளுக்கு ஒரு உத்தரவை அனுப்பினர். பேருந்துகளில் ஆதி திராவிடர்களை ஏற்ற மறுத்தால் பேருந்து உரிமங்கள் இரத்துச் செய்யப்படும் என்று உத்தரவிட்டார். அந்த மாவட்டத்தில் அக்காலத்தில் சுப்பிரமணியம் என்ற அய்யர் பேருந்தை நடத்தி வந்தார். அவர் பேருந்துப் பயணச் சீட்டுகளிலேயே ஆதி திராவிடர்கள் பேருந்தில் ஏற்றிக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று அச்சடித்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த டாக்டர் சுப்பராயன் 2.11.32 ஆதி திராவிடர்கள் கோயில் நுழைவு மசோதா ஒன்றைக் கொண்டு வந்தார். அந்த மசோதா சட்ட சபையில் தாக்கல் செய்வதற்கு முன்பே பெரியார்அதை ஆதரித்துக் குடி அரசில் ஒரு தலையங்கம் எழுதினார். அதில் நீதிகட்சியினரையும் அம்மசோதாவை ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

"ஜஸ்டிஸ் கட்சியினரோ, சமூகச் சீர்திருத்தத்தக் கொள்கையையே அடிப்படை நோக்கமாகக் கொண்டவர்கள். அவர்கள் பல ஆண்டுகளாக எல்லா வகுப்பினருக்கும் ஆலயங்களில் சம உரிமை இருக்க வேண்டும் என்னும் விஷயத்தை ஆதரித்து வருபவர்கள், ஆகையால் அவர்கள், தமது எதிர்கட்சித் தலைவர்களால், கொண்டு வரப்படும் மசோதா என்ற அற்பமான காரணத்தை மாத்திரம் கருதி, இந்த நல்ல மசோதாவை எதிர்க்கமாட்டார்கள் என்றே நாம் நிச்சயமாக நம்புகிறோம். ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சியினர் திரு சுப்பராயன் அவர்களுடைய கட்சிக்கும் தமது கட்சிக்குமுள்ள அரசியல் அபிப்பிராயங்களை முன்னிட்டும் எதிர்கட்சியினர் எந்த நல்ல மசோதாவைக்கொண்டு வந்தாலும் அதை எதிர்ப்பதே எமது கடமை" என்னும் அரசியல் வஞ்சம் தீர்க்கும் கொள்கையை முன்னிட்டும், இம்மசோதாவை ஆதரிக்காமல் நடுநிலைமை வகித்தாலும், அல்லது எதிர்த்தாலும், அது மிகவும் வெறுக்கத்தக்க செய்கையாகுமென்றே நாம் கூறி எச்சரிக்கிறோம்." (குடிஅரசு 30.10.1932)

நீதிக்கட்சியின் சார்பில் டாக்டர் நடேச முதலியார் ஆதரித்துப் பேசினார், இரட்டை மலை சீனிவாசன் என் சிவராஜ் ஆகியோர் பேசிய பின்பு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஆதரித்து 56 பேர் வாக்களித்தனர். 19 பேர் நடுநிலையாக இருந்தனர். எதிர்ப்பே இன்றித் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது. ஆனால் பார்ப்பனர்கள் ஆளுநரிடம் தங்களுக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி இம்மசோதாவைச் சட்டமாக்காமல் தடுத்து நிறுத்திவிட்டனர்.

– தொடரும்

# தீபாவளி

## கொண்டாட்டத்திற்கா? கொடும் நோய்களுக்கா?



இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் தீபாவளி நாட்களில் பட்டாசுகளால் 3 இலட்சம் டன் பட்டாசுப் புகை, அதாவது 300 கோடி கிலோ பட்டாசுப் புகை காற்றில் கலக்கிறது. இதனால் புகையாகப் போகும் தொகை எவ்வளவு தெரியுமா? ஏறத்தாழ 8000 கோடி ரூபாய். இந்தப் பணத்தைக் கொண்டு 60 கல்லூரிகள் கட்டலாம். 1200 பள்ளிக்கூடங்களைக் கட்டலாம்.

பட்டாசு விபத்துக்களால் ஒவ்வோர் ஆண்டு சராசரியாக 400 பேர் மரணமடை கின்றனர். 1,15,000 பேர் படுகாயமடைகின்றனர். தீபாவளிப் பட்டாசுகளில் வண்ணங்களை உருவாக்கவும், சத்தத்தை அதிகரிக்கவும் மிகவும் நச்சுத் தன்மை கொண்ட நைட்ரஜன் ஆக்சைடு, கார்பன் மோனாக்சைடு, கந்தக டை ஆக்சைடு, உலோக ஆக்சைடுகள் போன்ற வேதிப் பொருட்கள் கலக்கப்படுகின்றன. அவை பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன:

சுவாசப் பாதையில் எரிச்சல், ரத்தசோகை, சிறுநீரக பாதிப்பு, நரம்பு மண்டலப் பிரச்சினைகள், உலோகப் புகை காய்ச்சல், உளவியல் தொந்தரவு, பக்கவாதம், வலிப்பு, ஈரப்பதம் காற்றுடன் வினைபுரிந்து தோல் பாதிப்புகள், குமட்டல், வாந்தி, மூளை வளர்ச்சி பாதிப்பு, கோமா நிலை.

குழந்தைகளுக்கு நுரையீரல்நோய்கள், மூச்சிளைப்பு, ஆஸ்துமா, மூச்சுக்குழாய் கோளாறுகள், சுவாசக் கோளாறுகள். நோய் எதிர்ப்புத்திறன் குறைவு ஆகியவற்றை உண்டாக்கும். தீபாவளிக் காலங்களில் இவ்வித நோய்கள் 40% அதிகரிப்பதாக புள்ளி விபரங்கள் கூறகின்றன.

கடந்த ஒருசில ஆண்டுகளில் இவ்வகைக் காற்று மாசு பாட்டால் உண்டான நோய் களால் இந்தியாவில் 7 இலட்சம் பேர் மரணமடைந்துள்ளனர்.

மனிதனின் காதுகள் தாங்கக்கூடிய ஒலி அளவு 30 டெசிபல் மட்டுமே. ஆனால் தீபாவளி பட்டாசுகளில் மிக எளியதான குழந்தைகள் கையில் துப்பாக்கி மூலம் வெடிக்கும் கேப், பொட்டு வெடியே 70 டெசிபல் ஒலியை எழுப்பும் தன்மை கொண்டது.

ஆட்டம் பாம் 145 டெசிபல், சரவெடி 142 டெசிபல், தண்டர்போல்ட் 140 டெசிபல், கிங்பிஷர் ஷெல்141 டெசிபல், ஹைட்ரஜன் பாம் 122 டெசிபல். இந்தச் சத்தத்தால் காது கேட்கும் திறன் பாதிக்கப்படுவது மட்டுமின்றி, உயர்ரத்த அழுத்தமும் தூங்குவதில் பிரச்சினைகளும்கூட ஏற்படும்.

இந்த மானங்கெட்ட பண்டிகைக்காக இந்தியாவில் கடந்த 2014 தீபாவளி வாரத்தில் மட்டும் சுமார் 200 டன் தங்கம் விற்பனை ஆகியுள்ளதாக உலக தங்க கவுன்சில் கூறுகிறது. தீபாவளிக்கால விற்பனைக்கு இந்தியா இறக்குமதி செய்துள்ள தங்கத்தின் மதிப்பு சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாய்.

பன்னாட்டு நிறுவனங்களான Amazon, Flipkart, Snapdeal, Jabong போன்ற ஆன்லைன் வணிக நிறுவனங்கள் தீபாவளிக் கால விற்பனைக்காக விளம்பரங்களுக்கே 1300 கோடியைச் செலவு செய்துள்ளன. கடந்த சில ஆண்டுகளின் விற்பனைகளை அடிப்படையாக வைத்து இந்த நிறுவனங்கள் நிர்ணயித்துள்ள 2015 ம் ஆண்டு விற்பனை இலக்கு 3 இலட்சம் கோடி ரூபாய்களாகும்.

புத்தாடை உடுத்த வேண்டும் என்று பார்ப்பனர்கள் இட்டுக்கட்டிய ஆபாசக் கதையால் சூரத் நகர ஜவுளித்தொழில் வழியாக வடநாட்டு பட்டேல்கள் அடித்த கொள்ளை மட்டும் சுமார் 60 ஆயிரம் கோடி. பட்டாசுகளால் ஒவ்வொருஆண்டும் ஒரு வாரத்தில் விரயமாகும் தொகை சுமார் 8000 கோடி. அரசு ஊழியர்களுக்கு போன என்ற வகையில் விரயமாகும் மக்கள் வரிப் பணம் பல ஆயிரம் கோடி. தீபாவளி (2009) ஒரே நாளில் தமிழ் நாட்டில் மட்டும் டாஸ்மாக் சாராய விற்பனை ரூ 220 கோடி .தமிழ்நாடு முழுதும் கிளைபரப்பி இனிப்பு விற்பனையில் கொள்ளைஅடிக்கும் சென்னை தி க்ராண்ட் ஸ்வீட் , அடையாறு ஆனந்த பவன், கிருஷ்ணா ஸ்வீட் போன்ற பார்ப்பன நிறுவனங் களும் பார்ப்பன அடிவருடிகளான அகர்வால் ஸ்வீட் மார்வாடி களும் சுருட்டும் தொகை பலநூறுகோடி.




இப்படி சுற்றுச்சூழலைக் கெடுத்து, இலட்சக்கணக்கான மக்களின் உயிரையும் பறித்து, கோடிக்கணக்கான மக்களின் உடல்நலனைக்கெடுத்து. ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட, பிற்படுப்படுத்தப்பட்ட மக்களின் பொருளாதாரத் தையும் நாசப்படுத்தும் தீபாவளிப் பண்டிகையின் அடிப்படைக் கதையாவது அறிவுள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி இருக்கிறதா?

# தீபாவளி என்றால் என்ன?

1. ஒரு காலத்தில் ஒரு அசுரன் உலகத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு போய் கடலுக்குள் ஒளிந்து கொண்டான்.

2. தேவர்களின் முறையீட்டின் பேரில் மகாவிஷ்ணு பன்றி அவதாரம் (உரு) எடுத்துக் கடலுக்குள் புகுந்து அவனைக் கொன்று உலகத்தை மீட்டு வந்து மீண்டும் விரித்தார்.

3. விரித்த உலகம்(பூமி) அப்பன்றி யுடன் கலவி செய்ய ஆசைப்பட்டது

4. ஆசைக்கு இணங்கி பன்றி (விஷ்ணு) பூமியுடன் கலவிசெய்தது.

5. அதன் பயனாய் பூமி கர்ப்பமுற்று, நரகாசூரன் என்ற பிள்ளையைப் பெற்றது.

6. அந்தப்பிள்ளை தேவர்களை வருத்தினான்.

7. தேவர்களுக்காக விஷ்ணு, நரகா சூரனுடன் போர் துவங்கினார்.

8. விஷ்ணுவால் அவனை வெல்ல முடியவில்லை. விஷ்ணுவின் மனைவி நரகாசூரனுடன் போர் தொடுத்து அவனைக் கொன்றாள்.

9. இதனால் தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

10. இந்த மகிழ்ச்சியை (நரகாசூரன் இறந்ததற்காக) நரகாசூரனின் இனத் தாரான திராவிட மக்கள் கொண்டாட வேண்டும். இதுதானே தீபாவளிப் பண்டிகையின் தத்துவம்!

இந்த 10 விஷயங்கள்தான் தமிழனைத் தீபாவளி கொண்டாடும்படி செய்கிறதே அல்லாமல், வேறு என்ன என்று யாருக்குத் தெரியும்? யாராவது சொன்னார்களா? இதை ஆராய்வோம். இக்கதை எழுதிய ஆரியர்களுக்கு பூமி நூல் கூடத் தெரியவில்லை என்றுதானே கருத வேண்டியிருக்கிறது?

1. பூமி தட்டையா? உருண்டையா?

2. தட்டையாகவே இருந்த போதிலும் ஒருவனால் அதைப் பாயாகச் சுருட்ட முடியுமா?

3. எங்கு நின்று கொண்டு சுருட்டுவது?

4. சுருட்டினால் தூக்கிக் கட்கத்திலோ தலைமீதோ எடுத்து போக முடியுமா?

5. எங்கிருந்து தூக்குவது? கடலில் ஒளிந்து கொள்வதாயின் கடல் அப்போது எதன் மீது இருந்திருக்கும்?

6. விஷ்ணு மலம் தின்னும் பன்றி உருவம் எடுக்க வேண்டிய அவசியம் என்ன?

7. அரக்கனைக் கொன்று பூமியை விரித்ததால் பூமிக்குப் பன்றி மீது காதல் ஏற்படுவானேன்?

8. பூமி மனித உருவா? மிருக உருவமா?

9. மனித உருவுக்கும் மிருக உருவுக்கும் கலவியில் மனிதப்பிள்ளை உண்டாகுமா?

10. பிறகு சண்டை ஏன்? கொல்லுவது ஏன்? இதற்காக நாம் ஏன் மகிழ்ச்சி அடையவேண்டும்.

இவைகளைக் கொஞ்சமாவது தீபாவளி கொண்டாடும் தமிழ்ப்புலவர்கள் அறிஞர்கள் சிந்திக்க வேண்டாமா? இக்கொண்டாட்டமானது தமிழ் மக்களுடைய, இழிவையும் முட்டாள்தனத்தையும் காட்டுவது மாத்திரமல்ல, தமிழர்கள் (திராவிடர்கள்) ஆரிய இனத்தானுக்கு அடிமை, அவனது தலைமைக்கு அடிமை, மீட்சிபெற விருப்பமில்லாத மானங்கெட்ட ஈனப்பிறவி என்பதைக் காட்டிக் கொள்ளப் போட்டி போடுகிறார்கள் என்பதையே காட்டுகிறது.

நம் பள்ளிகளும் கல்லூரிகளும் பல்கலைக்கழகங் களும் நம் மக்களுக்கு இப்படிப்பட்ட மடமையை உணரும் அளவுக்குக்கூட அறிவைக் கொடுக்க வில்லை யென்றால், இக்கல்விக்கூடங்கள் மடமையையும் மானமற்ற தன்மையையும் பயிர் செய்யும் வளமுள்ள விளைநிலம் என்பதைத் தவிர, வேறு என்னவென்று சொல்ல முடியும்? இதில் பயிலும் மாணவர்களுக்கு எந்த விதத்தில்தான் மானமும் அறிவும் விளையமுடியும்?

– தோழர் பெரியார்

(‘இந்து மதப்பண்டிகைகள்’ நூலில் இருந்து)



நுகர்வு வெறியைத் திணிக்கும் –
சுற்றுச்சூழலைக் கெடுக்கும் –
அறிவுக்கும், மானத்திற்கும்,
உடலுக்கும். உயிருக்கும் எதிரான –
தீபாவளியைப் புறக்கணிப்போம்!
காதலர் நாள், மே நாள் – உழைக்கும்
மக்களுக்காக உழைத்த பெரியார்,
அம்பேத்கர் பிறந்த நாட்களைக்
கொண்டாடுவோம்!



# எது போதை?

## சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு 13

அரசூர் அ.ப.சிவா

காட்டாறு முதல் ஆண்டு நிறைவில் நாங்கள் அதிகம் சந்தித்த கேள்வி மது எதிர் மனு பற்றிய கட்டுரை பற்றியே .

"மது விலக்கு பைத்தியக்காரத்தனம்" என்ற கருத்தில் நான் வேறுபடுகிறேன். முற்றிலுமாய் மதுவை ஒழிக்க முடியாது என்பது உண்மையே. ஆயின் மதுவால் சிரழிந்து கிடக்கும் நம் செந்தமிழ் நாட்டு மக்களை ஓரளவேனும் நாம் காப்பாற்ற வேண்டாமா? என்ற கேள்வி வந்தது.

அர்த்த சாஸ்திரம் எழுதிய சாணக்கியன் அரசர்கள் நீடித்து அரசாள சில வழிமுறைகளைக் கூறியுள்ளான் அதில் மிக முதன்மையானது மதுக்கடைகளைத் தாராளமாக திறந்து விடும்படி கூறியுள்ளான். மது மூளையின் செயல் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறது. ஆட்சியாளர்கள் நிம்மதியாக ஆட்சி செய்ய வேண்டுமென்றால் மதுக்கடைகளைத் தாராளமாகத் திறந்து விட வேண்டும் என்று சாணக்கியன் கூறியதை நாமும் கூறுவது எப்படி சரி? பெரியார் சொன்னார் அம்பேத்கர் சொன்னார் என்பதற்காக அதை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டுமா? என்ற கேள்விகளும் வந்தன.

இன்னும் கட்டுரைகளாகவும், முகநூலிலும், பிற சமூக வலைதளங்கள் மூலமாகவும், தொலைபேசியிலும், நேரிலும் 'மது எதிர் மனு' கட்டுரை பற்றித் தங்களின் மாற்றுக் கருத்துகளை வைத்திருக்கிறார்கள் பலர். வெளியில் இருந்து வந்த மாற்றுக் கருத்துகளைவிட சில பெரியாரியல்வாதிகளின் கருத்துகள் தான் ஆச்சரியத்தைத் கொடுத்தது.

அப்போது தோழர் சுகுணா திவாகரின் "ஒட்டுமொத்த தமிழக அரசியலே மதுவிலக்குக் காய்ச்சலில் மூழ்கிக்கிடந்த போதும் காட்டாறு இதழ் சிறப்பான மாற்றுப் பார்வைகளை முன் வைத்தது. இன்னும் பெரியாரியத் தோழர்கள் பலருக்கு மதுவிலக்கு, ஒழுக்கவாதம், பாலியல் சுதந்திரம் போன்றவற்றில் போதிய தெளிவு இல்லாத போது பெரியாரிய அடிப்படையில் உறுதியான பார்வைகளை முன் வைத்தது காட்டாறு இதழின் முக்கிய பங்களிப்பு. முக்கியமாக மது விலக்கு எனும் வன்முறைக் கருத்தாக்கம் தனி மனித உரிமையை மறுப்பது எளிய மக்களின் இன்பத்தை மறுக்கும் ஆதிக்கப் போக்கு, மது வியாபாரமோ மதுவிலக்கோ இரண்டுக்கும் பின்னால் உள்ள கார்ப்பரேட் வணிக நோக்கம் மற்றும் அரசியல் நோக்கம் ஆகியவை குறித்து துணிச்சலுடன் எழுதிய இதழ் காட்டாறு மட்டுமே" என்ற கருத்து இளைய தலைமுறை காட்டாறின் நோக்கத்தைச் சரியாகப் புரிந்துள்ளதைக் காட்டியது

இதையெல்லாம் அசைபோட்டுக் கொண்டிருந்த நேரத்தில் வாட்ஸ் அப்பில் வந்த்து அந்தச் செய்தி நண்பன் காந்திதாசன் அனுப்பியது. தீபாவளி செய்தி தூங்காவனம் – 16 கோடி (கமல்டா), வேதாளம்– 20 கோடி (தலடா), டாஸ்மாக்– 346 கோடி ( அம்மாடா), படித்து முடித்தபோது அழைத்தான் காந்திதாசன்.. அவனிடம் இருடா வீட்டுக்கு வர்றேன் என சொல்லிவிட்டு அவன் வீட்டை நோக்கி கிளம்பினேன்.

வரவேற்பறையில் யாரும் இல்லை SUN MUSIC– ல் வசூல் ராஜா பாடிக் கொண்டிருந்தான்.

"உலகம் இன்பத்துக்கு ஏங்கி கிடக்கு, ஒழுக்கம் ஊருக்கு ஊர் மாறி கிடக்கு...."

பார்த்துக் கொண்டிருக்கும் போது வந்த காந்திதாசனை நான் கவனிக்கத் தவறியதால் தொலைக்காட்சியை நிறுத்தியபடி அம்மா இன்னொரு டீ சேர்த்து போடு என்றான்.

வாட்ஸ் அப் பார்த்தியா இந்த இலட்சணத்தில் மது விலக்கு பைத்தியக் காரத்தனம் என்று சொல்லுவதுதான் பைத்தியகாரத்தனம் என்றவனைப் பார்த்து – அது சரி, டீவியை ஏண்டா நிறுத்தின அதில் உனக்கான பதில் இருந்துச்சே என நான் சொல்லிக் கொண்டிருந்த போதே தட்டில் மூன்று டீயுடன் அம்மா வந்தார். நல்லா இருக்கியாப்பா என்றபடி நான் எடுக்க போன டீயை இல்லப்பா இது அப்பாவுக்கு இது இரண்டும் உங்களுக்கு என்றார்.

என்னம்மா அப்பாவுக்கு மட்டும் என்ன SPECIAL TEA என நான் கேட்க அட அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா, அதுல சக்கரையே இல்லை, அவருக்குத்தான் உடம்பு முழுக்க சக்கரை இருக்கே, என்றபடி புறக்கடையை நோக்கிச் சென்று விட்டார்.

அட நான் வந்த வேலையை வசூல் ராஜா அப்புறம் அம்மா இரண்டு பேருமே சுலபம் ஆக்கிட்டாங்க என்ற என்னைப் பார்த்து – டேய் குழப்பாம விசயத்தை சொல்லுடா என்றான் சூடாக,

தம்பி காந்திதாசா நீங்க இங்க குடிப்பவர்களைப் பார்த்து ஒழுங்கீனம் அப்படிங்கறீங்க நாங்க அதை தெளிவாச் சொல்லியிருக்கிறோம் என காட்டாறைப் பிரித்துக் கட்டுரையைப் படித்தேன் .

உடலுக்கு மதுவைவிட, மிக அதிகமாகத் தீங்குகளையும் நோய்களையும் ஏற்படுத்தும் பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள நாம் அவற்றைத் தவறு என்று தான் சொல்கிறோம். எப்போதும் ஒழுக்ககேடானது என்று சொல்வதில்லை. நினைப்பதுமில்லை. ஆனால் மதுவை மட்டும், குடியை மட்டும் ஒழுக்கக் கேடாகப் பார்ப்பது ஏன்?

இதற்கு நேரடியான பதில் சொல்லு என்றேன்? அது காலம் காலமா அப்படித்தான், அப்ப தண்னியடிக்கறது ஒழுக்கமான செயல் அப்படிங்கிறியா? என எதிர் கேள்வியை முன் வைத்தான்.

"ஒழுக்கம் என்பதாக ஒரு குறிப்பிட்ட குணமோ, செயலோ இல்லை என்றும், ஒழுக்கம் என்று சொல்லி வருவதெல்லாம் எளியோரையும் பாமர மக்களையும் அடிமைத்தனத்தில் இருத்திவரப் பயன்படுத்தக் கூடிய சூழ்ச்சி ஆயுதமே தவிர, மற்றபடி அது மக்கள் சமதர்மத்துக்கு பயன் படக்கூடியது அல்லவென்றும் சொல்லுவதற்காகவே எடுத்துக்காட்டுகிறோம்."

என்ற பெரியாரின் கூற்றை எடுத்து சொல்லி விட்டு சரி குடிபோதையில் உள்ளவனின் ஒழுக்கமற்ற செயல் எது என்றேன்?

அட போன வாரம் கூட பக்கத்து வீட்டுக்காரன் தண்ணியைப் போட்டுட்டு வேட்டி அவுந்து போயி நடு ரோட்டுல விழுந்து கிடந்தான்.அது ஒழுக்கமான செயலா? என்றவனைப் பார்த்துத் திருப்பி கேட்டேன். ஓ.. அதுக்குத்தான் மதுவைத் தடை பண்ணச்சொல்றீங்களா? ஆம் என்றான், போன

வாரம் வாட்ஸ் அப்பில் வந்த வட இந்தியா சாமியாரின் ஆடை இல்லாத படத்தைக் காட்டி, அது மது போதை, அப்ப இது மத போதையின்னு சொல்லி உங்க இந்து மதத்தை தடை பண்ணலாமா என்றேன், பதில் இல்லை அவனிடம்.

அப்புறம் அம்மா டீ குடுத்தாங்களே? சக்கரை உள்ள டீ நமக்கு தீங்கில்லை. ஆனால் அப்பாவுக்கு உடல் நலக்கேடு. அது போலத்தான் மதுவும், உடல் நலக்கேடு விளைவிக்கும் எந்தப் பொருளையும் நாம் தடை செய்யக் கேட்பதில்லை, நேத்து நாம ரெண்டு பேரும் புரோட்டா சாப்பிட்டமே அது உடல் நலத்துக்கு நல்லதா? மைதா தீங்கு என புரொட்டாவைத் தடை பண்னலாமா??

முழு மதுவிலக்கு என்பதை எதிர்வரும் தேர்தலை ஒட்டி பரப்புரை செய்து வரும் கட்சிகளின் சூழ்ச்சிக்கு, மக்கள் நலனுக்காக மதுவிலக்கு வேண்டும் என பிரச்சாரம் செய்து வரும் நீங்களும் பலி ஆகி விட்டீர்கள் என்பதே என் கருத்து என்கிறேன் .காட்டாறின் நிலையைத் தெளிவாகப் படிக்காமல், அதாவது அறிவுப்பூர்வமாக அணுகாமல் உணர்வுப்பூர்வமாக அணுகுவதால் வந்த குழப்பமே இது. முதலில் காட்டாறின் பரிந்துரையைப் பாருங்கள்

'குடி' உரிமை பாதுகாக்கப்படவேண்டும். தீங்கான மதுவுக்குத் தடையும் வேண்டும். அதற்கு உரிய வழி 'கள்'. கள் ஒரு ஆரோக்கியமான உணவுப்பொருள். குடி மக்களுக்கு மிதமான போதையையும் வழங்கக்கூடியது. ஆனால் எந்தப் பொருளும் வணிகம் என்று வந்துவிட்டாலே அதில் கலப்படமும், தரக்குறைவும் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே தான் தோழர் பெரியார்கூட "மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லும் நான் பழையபடி கள்ளுக்கடையை திறக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஆரம்பத்தில் சொன்னபடி தோப்பில் கள் விற்க வேண்டும். கள்ளை விஷமாக்கிவிடும் முறையை தடுத்துவிட வேண்டும். (மது ஆதரவாளர்களின் மாநாட்டில் – விடுதலை 1.2.1963)" என்று கூறினார்.

அரசே கள்ளுக்கடைகளை நடத்தினால் டாஸ்மாக்கில் நடந்தது போல தரமற்ற கள் விற்பனைதான் நடக்கும். அதற்காகத் தோப்புகளைத் தேடியும் அலையவும் முடியாது. தனியார் தோப்புகளிலும் கலப்படம் நடக்க வாய்ப்பு உள்ளது. குடி மக்களுக்கு நிரந்தரத் தீர்வு என்றால் வீட்டுக்கொரு தென்னை மரம் வளர்ப்போம்! மரத்திற்கொரு கள்ளுப்பானை வைப்போம்! வீடே இல்லாதவன் என்ன செய்வது என்ற கேள்வி வந்தால், மா, பலா, வாழைப்பழம், திராட்சை, நெல்லி போன்று அவ்வப்போது விலை குறைவாகக் கிடைக்கும் பழங்களைக் கொண்டு நாமே சொந்தமாக வீட்டிலேயே மது தயாரித்துப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதையே பதிலாகத் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

எனத் தெளிவாகக் கூறியுள்ளோம், ஆனால் உங்களைப் போன்ற மதுவிலக்கு பற்றிப் பேசும் சமூக ஆர்வலர்கள் நாளைக்கே மதுக்கடைகளை மூடவேண்டும், என சாத்தியம் இல்லாத அல்லது அப்படியொரு நிலை வந்தாலும் வெகு மக்களை பாதிக்கிற இலக்கு நோக்கி வேலை செய்கிறீர்கள். மது விலக்கு குறித்து பெரியாரின் கூற்றுக்களை பார்..

"பொதுவாக மது அருந்துவதையே குற்றமென்று சொல்லி விட முடியாது. கெடுதி உண்டாக்கும் படியானதும் பொருளாதாரத்திலும் அறிவியலிலும் கேடு விளைவிக்கும்படியானதுமான மதுபானமே இன்று விலக்கப்பட வேண்டியது ஆகும் அதைத் தான் நாம் மதுவிலக்கு என்பதே ஒழிய மதுவையே அடியோடு எப்போதும் யாரும் வெறுக்கவில்லை." (கு.அ. 3.10.1937)

"மதுவிலக்கை ஒழித்துவிட்டு மதுஆட்சி என்பதாக ஏற்பாடு செய்து மதுவினால் கேடில்லாமல் அதிக செலவில்லாமல் எவ்வளவு குடித்தாலும் அதனால் உடலுக்கும், புத்திக்கும், குடும்பத்திற்கும் கேடு வராமல் பாதுகாப்பளிக்கலாம். மது ஆட்சி என்பது கர்ப்ப ஆட்சி – பர்த் கன்ட்ரோல் என்பது போல் குடி ஆட்சி – டிரிங்க் கன்ட்ரோல் என்பதாக நடத்தலாம். இதனால் உடலுழைப்பாளிகள் நலம் பெறுவார்கள். பழைய கள், புளிச்ச கள் இருக்கவிடக்கூடாது. சுகாதார (நாணயமான) அதிகாரிகளை வைத்து மதுக்கடை மதுவை பரிட்சீத்து சோதனை செய்ய வேண்டும். சர்க்கார் அதில் அதிக வரும்படி எதிர்பார்க்கக்கூடாது என்பவைகளை கவனித்தால் மது மக்களுக்கு நன்மை பயப்ப தாகலாம்" (விடுதலை 29.11.62)

இன்று அரசு டாஸ்மாக்கில் விற்கிற மது வகைகள் குறித்த ஆய்வோ அதில் கலந்திருக்கும் போதை விளைவிக்கும் பொருட்களின் அளவுகளை குறைப்பது பற்றிய பரிந்துரையோ அல்லது அதில் உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்காத மாற்றுப் பொருட்கள் அதில் சேர்ப்பது பற்றிய பரிந்துரையோ எதுவும் உங்களிடம் இல்லை, ஆனால் மதுவிலக்கு அரசியல் பற்றிய ஆழமான தரவுகளோடு வந்திருக்கும் கட்டுரையை உணர்வு பூர்வமாக எதிர்க்கும் உங்களின் செயல் மரத்தை வெட்ட அதன் கிளை மேல் அமர்ந்து கிளையையே வெட்டும் செயலுக்கு ஒப்பானது.


பொதுவாப் பார்த்தா இங்கிருக்கிற யாரும் ஜாதி வேண்டுமென்று சொல்வதில்லை. ஆனால் ஜாதிக்கு அடிப்படையான மதமும் கடவுளும் வேண்டாமென்றால், அவர்களை எதிரிகளாகப் பார்க்கும் முரணுக்குள் வாழ்கிறார்கள் அது போலத்தான் மது விலக்கும்.

"100 ஆண்டு 75 ஆண்டுகளுக்கு முன்பு மது குற்றமற்ற ஒரு சாதனமாகத்தான் இருந்தது. அரசாங்கம் மதுவை அரசாங்க வியாபாரப் பொருளாக ஆக்கினதுடன் அரசாங்கமே மது வியாபாரம் செய்ய ஆரம்பித்த பிறகுதான், மது அருந்துவது (குடி) கெட்டது என்று சொல்லும்படி ஆகிவிட்டது. மது வியாபாரிகள் மதுவுக்குள் இயற்கை போதையைவிட அதிக போதை ஏற்படும் படியான பக்குவம் செய்ததால் மதுவால் கெடுதி என்று சொல்லும் படியான நிலை ஏற்பட்டுவிட்டது." (விடுதலை 9.11.68)

சரியாக 47 ஆண்டுகளுக்கு முன் பெரியார் சொன்னதைத் தான் நாம் இப்போதும் சொல்கிறோம், மது நுகர்வு என்பது கலாச்சாரம் அல்ல. அது ஒரு பழக்கமே, அவரவர் உரிமை அது என்பதை கருத்தில் கொள்வோம்..

சரிடா நீ சொல்வதெல்லாம் சரிதான், ஆனாலும் என ஆரம்பித்தவனிடம் சரி என்றால் இதையெல்லாம் , உன் அறிவையும் அனுபவத்தையும் கொண்டு அலசு, அப்புறம் சொல்லு அதை விட்டுட்டு ஆனாலும் அப்படின்னு வேதாளம் மறுபடியும் முருங்க மரம் ஏற வேண்டாம்,

எனக்கு தாங்காது, ஏன்னா ஏற்கனவே பார்த்த வேதாளமே கண்ணை கட்டுது என்றபடி நடையை கட்டினேன்.



# நிலவேம்புக்குடிநீரும், பப்பாளி இலைச்சாறும் டெங்குவிலிருந்து நம்மைக் காப்பாற்றாது!



மருத்துவர் ஜானகிராமன்

**‘டெங்கு’ காய்ச்சல் எதனால் ஏற்படுகின்றது?**

'டெங்கு காய்ச்சல்' என்று தமிழகத்தில் அனைவராலும் அறியப்படும் இந்த பிரபலமான நோய் டெங்கு வைரசினால் மனிதருக்கு ஏற்படுகின்றது, இந்த வைரசில் பல உட்பிரிவுகள் இருந்தாலும் அதன் நான்கு உட்பிரிவுகள் இந்தியாவில் பொதுவாக நோய்க்குக் காரணமாக உள்ளன.

உலக சுகாதார நிறுவன அறிக்கையின்படி ஒவ்வொரு ஆண்டும் தெற்கு ஆசிய பிராந்தியத்தில் மட்டும் அய்ந்து கோடிப் பேர் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர் இதில் அய்ந்து லட்சம் பேர் உயிருக்கு ஆபத்தான கட்டத்தை அடைந்து 12,000 பேர் உயிர் இழக்கின்றனர்.

**டெங்கு நோய் எவ்வாறு பரவுகின்றது?**

இந்த வைரசானது ‘ஏடிஸ்’ எனப்படும் ஒரு வகை கொசு கடிப்பதால் மனிதருக்குப் பரவுகின்றது. இந்த ஏடிஸ் இனக் கொசுக்களைக் கண்டறிவது மிகவும் எளிதாகும். இந்த வகைக் கொசுக்களின் உடலில் கருப்பு வெள்ளைக் கோடுகள் மாறி மாறி இருக்கும்.

இந்தக் கொசுக்கள் மற்ற கொசுக்களைவிட வித்தியாசமானவை ஆகும். இவை மனிதனைப் பெரும்பாலும் பகலில் மட்டுமே கடிக்கக் கூடியதாகும். இவை நீர்நிலைகளில் முட்டையிடாமல் செயற்கையாகத் தண்ணீர் தேங்கியுள்ள டயர்கள், தேங்காய் கொட்டைகள், உடைந்த பாட்டில்கள், மரங்களின் இலைகளில் நீர் தேங்கும் இடங்கள், பூந்தொட்டிகள், தீ அணைக்க தேக்கி வைக்கப்பட்டிருக்கும் வாளிகள் முதலியவற்றில் முட்டையிடும்.

இந்த முட்டையிலிருந்து வரும் ஏடிஸ் கொசுக்கள் ‘டெங்கு வைரசினால்’ தாக்கப்பட்டுள்ள ஒரு நபரைக் கடித்து அந்த வைரசை மற்ற மனிதருக்குப் பரப்புகிறது.

**அறிவியல் மருத்துவம் இந்த நோயை எப்படி அணுகுகின்றது?**

விஞ்ஞான மருத்துவ முறைகளில் இந்த நோய் அதன் தீவிரத் தன்மையைப் பொருத்து - டெங்கு காய்ச்சல், காய்ச்சலுடன் கூடிய ரத்தப் போக்கு, காய்ச்சல் மற்றும் இரத்தப் போக்குடன் கூடிய உடல் இரத்தச் சுழற்சி சீர்குலைவு ( shock ) என்று மூன்றாக வகைப்படுத்துகிறது.

ஏமாற்று மரபு மருத்துவர்களைப் போல் எங்களிடம் அனைத்துக்கும் மருந்து உள்ளது என்று கூறாமல், டெங்கு வைரசை அழிக்கும் மருந்தோ அல்லது தடுப்பூசிகளோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று மருத்துவ உலகம் பகிரங்கமாக அறிவித்துள்ளது, ஆனால் இந்த வைரசை உடல் சில வாரங்களில் தானே எதிர்கொள்கின்றது. அந்த சில வாரங்களில் ஒரு மனிதர் நோயிலிருந்து விடுபடலாம் அல்லது கடுமையாகத் தாக்கப்பட்டு இரத்தப்போக்கு ஏற்பட்டோ அல்லது உடல் ரத்த சுழற்சி சீர்பட்டோ உயிர் இழக்கலாம்.

விஞ்ஞான மருத்துவம் வைரசினால் உடலுக்கு என்ன என்ன பாதிப்புகள் வரலாமென ஆராய்ந்து வைத்துள்ளதால், அதனைக் கூர்ந்து கவனித்து அந்தப் பாதிப்புகளால் மரணம் ஏற்படாமல் அல்லது உடல் உறுப்புகள் பாதிப்பு ஏற்படாமல் காக்கின்றது.

எடுத்துக்காட்டாக மருத்துவ கவனிப்பில் உள்ள ஒருவருக்கு இரத்தப்போக்கு ஏற்படுமாயின் அவர் அதிக இரத்தப்போக்கினால் உயிர் இழக்காமல் அல்லது சிறுநீரகம் உள்ளிட்ட உடல் உறுப்புகள் பாதிப்படையாமல் காக்க முயற்சிக்க இயலும்.

**டெங்குவும் ஏமாற்று மெய்ஞ்ஞான மருத்துவமும்:**

விஞ்ஞான மருத்துவம் டெங்கு நோயை மேற்கண்டவாறு பகுத்தறிவுப் பூர்வமாக அணுகுகிறது. உலகம் முழுவதும் இவ்வாறே இந்த நோய் அணுகப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் பப்பாளி இலைச்சாறு, நில வேம்பு நீர் என்று சில மாற்றுமுறைகளை அரசே பரிந்துரைப்பதைக் காண முடிகின்றது. அரசு இதற்காக ஊடகங்களின் வழியே பல கோடி ரூபாய்களைச் செலவு செய்கிறது.

இந்தப் பப்பாளி இலைச்சாறு உள்ளிட்ட மருத்துவ முறைகள் டெங்கு நோயைக் குணப்படுத்திவிடும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

2011 ஆம் ஆண்டு விலங்குகளின் மேல் மட்டுமே நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் நிலவேம்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட எத்தனலிக் வேதிவினைப் (Ethanolic extract) பொருட்கள் சிக்குன் – குனியாவினால் ஏற்படும் காய்ச்சலின் அளவைச் சிறிது குறைப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும், காய்ச்சலைக் குறைக்க ஏற்கெனவே புழக்கத்தில் உள்ள மற்ற மருந்துகளைவிட இது சிறந்தது என்பதற்கான ஆதாரம் ஏதும் அந்த ஆய்வில் கிடைக்கப் பெறவில்லை.

மேலும், மனிதர்களுக்கு ஏற்படும் டெங்கு காய்ச்சலுக்கு இந்த எத்தனலிக் வேதிப் பொருட்களோ, பப்பாளி இலைச்சாறோ பயன்படும் என்பதற்கோ, அது எவ்வாறு வேலை செய்கின்றது ( Mechanism of action ) என்பதற் கான ஆதாரமோ, இந்த மருந்தின் திறனுக்கான ஆதாரமோ (Efficacy) இதுவரை ஏதும் நிரூபிக்கப்படவில்லை.

மற்றும் இதனை யார் கண்டுபிடித்தார்கள், எப்படிக் கண்டுபிடித்தார்கள் (Mode of study) என்ற கேள்விகளுக்கும் பதில் இல்லை. சுருக்கமாகக் கூறுவோமேயானால் இவை ஆதாரமற்ற 'மெய்ஞ்ஞான' நம்பிக்கைகளாகும். இவ்வாறு உலக நாடுகள் அனைத்தும் டெங்குவுக்கு மருந்து தேடிக்கொண்டு இருக்கும் போது தமிழ்நாட்டில் மட்டும் நில வேம்புக் குடிநீர் மக்களைக் குணப்படுத்தும் என்பது வேடிக்கையானதாகும்.

இது நம் நாட்டில் மட்டும் பிள்ளையார் பால் குடித்த கதையோடு ஒப்பிடத்தக்கது. மேலும் இந்த மருந்துகள் விளம்பரப்படுத்தப்பட்ட பிறகு நூற்றுக்கணக்கான டெங்கு மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்பதே இது ஓர் 'ஆறுதல் மருந்து' (Placebo) என்பதை உறுதிப்படுத்துகின்றது.

சரியாகச் சொல்வோமேயானால் இது 'தீராத நோய்களை'த் தீர்க்கும் மற்றொரு மாற்று மருத்துவ பார்முலா என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. மேலும் இந்த பப்பாளி இலைச்சாறு வகை மருந்துகள் மக்களை உண்மையான மருத்துவச் சிகிச்சைக்கு வராமல் திசை திருப்பி விட்டுவிடும் அபாயம் கொண்டவை.

அரசே சொல்லி விட்டதால் இரத்தப்போக்கு ஏற்பட்ட ஒரு டெங்கு நோயாளி அரசு மருத்துவமனைக்கு வராமல் பப்பாளி இலைச் சாறு அருந்திவிட்டு வீட்டிலே இருப்பாரேயானால் அது அவர் உயிருக்கு ஆபத்தாய் முடிந்துவிடலாம். மேலும் குழந்தைகள், முதியவர்கள், வேறு பல நோய்களால் தாக்கப்பட்டு எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள் போன்றவர்களை டெங்கு தாக்கினால் விளைவுகள் மோசமாக இருக்கக் கூடும்.

ஆகவே டெங்கு நோயைக் கட்டுபடுத்த மெய்ஞ்ஞான வழிமுறைகளை நம்பாமல் பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் மேற்கண்ட பல்வேறு விஞ்ஞானப்பூர்வ வழிமுறைகளைப் பயன்படுத்துவதே பகுத்தறிவாகும். அலோபதி பல்வேறு மருந்துகளைத் தாவரங்களிலிருந்து பிரித்துப் பயன்படுத்துகின்றது. விஞ்ஞான மருத்துவம் இது இங்கிருந்து வந்தது அங்கிருந்து வந்தது என்று பிரித்துப் பார்ப்பதில்லை.

விஞ்ஞானத்தின் ஒரே அடிப்படை அது நிரூபிக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். நிரூபிக்கப்பட்ட எந்த மருத்துவ முறையும் தானாகவே விஞ்ஞான மருத்துவத்தில் சேர்ந்து விடும். பப்பாளி இலை உள்ளிட்ட மருந்துகள் நிரூபிக்கப்படாத மெய்ஞ்ஞான முறைகள்தான் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரை சென்ற ஆண்டே உண்மை இதழில் வெளியானதாகும். கட்டுரையின் முக்கியத்துவம் கருதி காட்டாறிலும் வெளியிடப்பட்டுள்ளது. காட்டாறின் வாசகர்கள் தங்கள் பகுதிகளில் யாருக்கேனும் டெங்குகாய்ச்சல் என அறிந்தால் அவர்களை – நிலவேம்புநீர், பப்பாளி இலைகளை நம்பி உயிரை இழந்துவிடாமல் காப்பாற்றுங்கள். அறிவியலை நம்பும் மருத்துவர்கள் அருகாமையில் இருந்தால் அவர்களிடம் அழைத்துச் செல்லுங்கள்.


## தூங்காவனம்.....
## தாங்காவனம்....
## தாங்கவொணா வனம்



தன் மகளைக் கடத்திய பிரகாஷ்ராஜைப் பார்த்து கமல் கேட்கும் அந்தக் கேள்வி இன்னும் இடறிக்கொண்டே இருக்கிறது. "உனக்குக் கூட பதினாறு வயசுல ஒரு பொண்ணு இருக்காமே. இன்னும் வயசுக்கு வராம?" அதுவும் அந்த "வயசுக்கு வராம"– வாக்கியத்திற்கு கொடுக்கும் அழுத்தம்....படம் பார்த்த எத்தனை பேர் இதைக் கவனித்திருப்பார்கள் என்பது தெரியவில்லை. மகாநதி போன்ற படங்களைத் தந்த ஒருவரால் எப்படி இந்த வசனத்தைப் பேச முடிந்தது? இதன் மூலம் அவர் சொல்ல வருவது என்ன? ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றிருக்கும் என்னை விட ஒரு பெண்பிள்ளையைப் பெற்றிருக்கும் நீ ரொம்ப பாதிக்கப்பட்டவன், பாதிக்கப்படப் போகிறவன் என்பதா? ஒரு ஆண்பிள்ளையைக் கடத்துவதைவிட ஒரு பெண்பிள்ளையை – அதுவும் வயசுக்கு வராத ஒரு குழந்தையைக் கடத்துவதில் உள்ள உடலியல், மனவியல், சமூகவியல் விளைவுகள் – வக்கிரங்கள் பயங்கரமானவை என்பதா? உன் மகளை நான் கடத்தினால் என்ன ஆகும் என்கிற மிரட்டலா? அவருக்கே வெளிச்சம். அதுவும் இந்த வசனத்தைப் பேசும்போது கமல் முகத்தில் தெரிகிற குரூரம் தானாக வந்ததா? இல்லை வலியக் கொண்டு வந்தாரா தெரியவில்லை. போதாத குறைக்கு சில தினங்களுக்கு முன் பிரகாஷ்ராஜே "என் வீட்டு டென்ஷன்" என்று தனது மகளை அறிமுகப்படுத்தும் விளம்பரம் ஒன்றும் வந்திருக்கிறது என்பது ஒரு co incidence.

குருதிப்புனல் படத்திலும் அர்ஜுனின் வளரிளம் பருவத்து மகளை சுபலேக சுதாகர் வன்புணர்வு செய்ய முயல்வது போன்ற ஒரு காட்சி. நான் 19 வயது வளரிளம் பெண்ணாக இருந்தபோது வெளியான இந்தப் படத்தைப் பார்த்துவிட்டுச் சில நாட்கள் வரை பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட காட்சிகளையும் வசனங்களைகளையும் அதுவும் தன் சொந்த பேனர் படங்களில் வைப்பது என்ன மாதிரியான உளவியல்? மிகச்சிறந்த அப்பா என உங்கள் மகள் தன் பிறந்தநாள் பதிவில் போடுகிறாள். மேலும் இங்கே நிறைய பெண்குழந்தைகள் இருக்கிறார்கள். நல்லவனோ, கெட்டவனோ, கடத்தல்காரனோ, காவல்காரனோ யாராயிருந்தால் என்ன? அவர்களின் பெண் குழந்தைகள் உங்களை என்ன செய்தார்கள்? சொல்லுங்கள் கமலப்பா.

**ஸ்வாதி சா முகில்**






பிரமோத் ரஞ்சன்
ஃபார்வர்டு ப்ரஸ்,
புது தில்லி

# ஃபார்வர்டு பிரஸ்ஸும் காட்டாறும்

பெரியார் இயக்க குடும்பத்தினருக்கு வணக்கம்.

தோழர் பெரியார் அவர்கள் குடி அரசு, புரட்சி, பகுத்தறிவு, ரிவோல்ட் ஏடுகள் மூலம் தமிழ்நாட்டில் மிகப்பெரும் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்திய புரட்சியாளர். ஆரியர்களின் வேதகாலம் முதற்கொண்டு பூலே, அம்பேத்கர், பெரியார் காலம்வரை இந்தியாவில் பார்ப்பனர்களின் ஆதிக்கம் எந்த எதிர்ப்பும் இல்லாமல் தொடர்ந்து வந்தது. எந்தச் சார்பும் இல்லாமல், எதற்கும் – எவருக்கும் அஞ்சாமல், பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டு பெரியார் எழுதிய எழுத்துக்களும், பேசிய பேச்சுக்களும் பார்ப்பனர்களின் அ திவாரத்தை அசைத்தது. இந்து வேதங்கள், சா திரங்கள் ஆகியவை நமது அன்றாட வாழ்வில் திணித்துள்ள சடங்குகள், சம்பிரதாயங்கள், பழக்க வழங்கங்கள், பண்பாடு என அனைத்தையும் புரட்டிப் போட்டார் பெரியார். ஒரு மாற்றுப் பண்பாட்டை – ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பண்பாட்டை அறிமுகப்படுத்தி – செயல்படுத்தியும் சென்றார்.

இந்தியாவில் இந்து மதத்தில் ஒரு குழந்தை தன் தாயின் வயிற்றில் கருவுற்ற போதே அந்தக் குழந்தைக்கு ஜாதி திணிக்கப்பட்டுவிடுகிறது. அந்தக் குழந்தை பிறந்தவுடன் அதற்குப் பெயர் வைப்பதிலிருந்தே *மனுசாஸ்திரம்* நம் வாழ்வில் திணிக்கப்பட்டுவிடுகிறது.

பிராமணனுக்கு மங்கலத்தையும், சத்திரியனுக்கு பலத்தையும், வைசியனுக்கு பொருளையும், சூத்திரனுக்கு தாழ்வையும் அடையாளப்படுத்துகிற மாதிரியான பெயர்களை வைக்க வேண்டும். பிராமணனுக்கு ‘சர்மா’ என்பதையும் சத்ரியனுக்கு ‘வர்மா’ என்பதையும் வைசியனுக்கு ‘பூதி’ ‘குப்தா’ என்பதையும் சூத்திரனுக்கு ‘தாசன்’ என்பதையும் தொடர் பெயராக வைத்துக் கொள்ளலாம். என்று மனுசா திரத்தின் 2 வது அத்தியாயத்தில் 31 மற்றும் 32 ஆம் லோகங்கள் கூறுகின்றன. வடமாநிலங்களில் இன்றும்கூட இந்த முறை மாற்றமடையவில்லை. பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயரையும் போடும் பழக்கம் அங்கு இன்றும் உள்ளது. அந்த மனுதர்மப் பண்பாட்டை தமிழ்நாட்டில் மாற்றிக்காட்டியவர் பெரியார்.

செங்கல்பட்டில் 1929 ல் பிப்ரவரி 17, 18 தேதிகளில் நடந்த சுயமரியாதை மாநாட்டில், இனி மேல் யாரும் தமது பெயருக்குப் பின்னால் ஜாதிப்பெயர்களைப்போடக்கூடாது என தீர்மானம் நிறைவேற்றினார். தீர்மானம் போட்டது மட்டுமல்ல முதற்கட்டமாக அதைத் தன்னுடைய தோழர்களைச் செய்ய வைத்தார். தனது குடி அரசு ஏட்டில் ஜாதிப்பெயர்களைத் துறந்தவர்களின் பட்டியலை தொடர்ச்சியாக வெளியிட்டார்.

இப்படி பெயர் வைப்பதில் தொடங்கி, உண்ணும் உணவு, உடுத்தும் உடை, வசிக்கும் இருப்பிடம், குழந்தை வளர்ப்பு, திருமணம், நம்வீட்டு விழாக்கள், கிராமத்து விழாக்கள், பெரும் பண்டிகைகள் என அனைத்திலும் இந்து மத வேத சாஸ்திரங்கள் திட்டமிட்டவற்றைத்தான் நாம் கடைபிடித்து வருகிறோம்.

இவற்றுக்கு எதிராக பெரியார் தொடங்கி வைத்த பண்பாட்டுப் புரட்சிப் பணியை வடமாநிலங்களில் செயல்படுத்த நாங்கள் பாடுபடுகிறோம்.பகுஜன் பண்பாடு மற்றும் நாகரீகச் சின்னங்களை அடையாளம் காணவும், அவற்றுக்குப் புத்துயிர் அளிக்கவுமே முயற்சிக்கிறோம். அதனால் பல கடுமையான நெருக்கடிகளைச் சந்தித்தோம். கடந்த 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாத காட்டாறு இதழில் எங்களது பண்பாட்டுப் புரட்சிப் பணிகளைப் பற்றி விரிவான செய்திகள் வந்துள்ளன. எங்கள் ஃபார்வர் ப்ரஸ் ஏடு மீது நடந்த தாக்குதல் களுக்குக் கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக காட்டாறு குழுவினருக்கு ஃபார்வர்டு ப்ர சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் 'மன்றல்' என்ற பெயரில் ஜாதி மறுப்புத் திருமணங்கள் திட்டமிட்டு நடந்து வருகிறது. தமிழ்நாட்டு இந்துத் திருமணங்களில் பெண்களுக்கு அணிவிக்கப்படும் 'தாலி' என்ற பெண் அடிமைச் சின்னம் அந்தப் பெண்களாலேயே அகற்றப்படும் நிகழ்ச்சி நடந்துள்ளது. எங்கள் பகுதியில் தாலி கட்டும் வழக்கம் இல்லை என்றாலும் தமிழ்நாட்டில் நடந்துள்ள இந்தத் 'தாலி அகற்றும் நிகழ்ச்சி' இந்துத்துவாவின் மீது நடத்தப்பட்ட மிகப்பெரும் தாக்குதலாகும்.

திராவிடர் விடுதலைக் கழகத்தினர் கடந்த 2012 ல் மனுசாஸ்திரத்தை எரிக்கும் போராட்டத்தை நடத்தியுள்ளனர். வடமாநிலங்களில் நடக்கும் 'காஃப் பஞ்சாயத்துக்கள்' பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதேநிலை தமிழ்நாட்டிலும் இருப்பதை அறிந்தேன். அப்படிப்பட்ட ஜாதிவெறிபிடித்த கிராமங்களில்கூட 'அகமணம் அகற்றுவோம்' என்ற பெயரில் ஜாதி மறுப்புத் திருமணங்களைச் செய்ய வேண்டுமென்றுகூறி கிராமம் கிராமமாகப் பிரச்சாரங்கள் நடந்துள்ளன. தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் இந்த ஆண்டு ஜனவரியில் நாதுராம் கோட்சேயின் படத்தைக் கொளுத்தியுள்ளனர். நாடெங்கும் கோட்சேவுக்கு சிலை வைப்போம் என்று 'இந்து மகாசபா' என்ற அமைப்பு அறிவித்தவுடன் அதற்கு எதிர்வினையாக உடனடியாக அந்தக் கோட்சேயின் படம் எரிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பார்ப்பன எதிர்ப்பு நடவடிக்கைகள் - இந்துத்துவா எதிர்ப்பு நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் மட்டும் நடந்தால் போதாது. அகில இந்திய அளவில் நடைபெற வேண்டும். முதலில் வடமாநில மக்களுக்குத் தகவலாவது தெரிய வேண்டும்.

பகுஜன் ( பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் ) பண்பாட்டை அடையாளம் காணவும், நடைமுறைப்படுத்தவும் உழைக்கும் நாம் ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமலேயே இருக்கிறோம். தகவல் தொடர்பு சாதனங்கள் இல்லாத 1936 ல் 'சாதியை ஒழிக்கும் வழி' என்ற அம்பேத்கரின் சிறப்பான உரையை உடனடியாகப் பெரியார் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு இலட்சக்கணக்கான மக்களிடம் பரப்பியுள்ளார். ஆனால் தகவல் தொடர்புத் துறையில் பெரும்புரட்சியே நடந்துள்ள இந்த 2015 ஆம் ஆண்டிலும் கூட வடநாட்டில் நடக்கும் ஜாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் - பார்ப்பன எதிர்ப்பு நடவடிக்கைகள் தமிழ்நாட்டுக்குத் தெரிவதில்லை. தமிழ்நாட்டில் நடக்கும் இந்துப்பண்பாட்டுக்கு எதிரான நடவடிக்கைகள் வடமாநிலங்களுக்குத் தெரிவதில்லை.

இந்த இடைவெளியை முதலில் நாம் நிரப்பவேண்டும். ஜாதிவெறியைத் தூண்டி அதில் பிழைப்பவன் அகில இந்திய அளவில் தொடர்புகளை மேற்கொள்கிறான். மதவெறியை அடிப்படையாக வைத்து ஆட்சியையே பிடித்தவர்கள் அகில இந்திய அளவில் இயங்குகிறார்கள். ஆனால் ஜாதிக்கும், மதத்திற்கும் எதிராகப் போராடும் நாமோ, நமக்குள் எந்த உறவும் இல்லாமல் இருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு ஒருங்கிணைப்பை உருவாக்க வேண்டும் - ஜாதி, மத எதிர்ப்பு அமைப்புகளும், பகுஜன் ( தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள்) பண்பாட்டைச் செயல்படுத்த வேண்டும் என உழைக்கும் அமைப்புகளும் ஓரணியில் திரளவேண்டும். குறிப்பிட்ட சில செயல்பாடுகளில் மட்டுமாவது நாம் அகில இந்திய அளவில் இயங்க வேண்டும்.

இந்த நோக்கம் குறித்து கடந்த 2013 ஆம் ஆண்டு புதுடில்லி ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகத்தில் நானும், நண்பர் மணிவண்ணன், தோழர் தாமரைக்கண்ணன் ஆகிய மூவரும் சந்தித்து விரிவாக உரையாடினோம். நாங்கள் பேசிக்கொண்ட விசயத்துக்கு செயல்வடிவம் கொடுக்கும் முயற்சியாகவே இந்த நிகழ்ச்சியைப் பார்க்கிறேன். இந்த ஒருங்கிணைப்பு தொடர வேண்டும், வளரவேண்டும். தமிழ்நாட்டில் இருக்கும் இந்துத்துவா எதிர்ப்புத் தலைவர்கள் அய்யா வீரமணி, கொளத்தூர் மணி, கோவை இராமக்கிருட்டிணன், ஆனைமுத்து, சுப.வீரபாண்டியன் போன்ற அனைவருக்கும் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் பெரியார் எழுத்துக்கள் குறைந்தது ஒரு 100 பக்கங்களையாவது இந்தியில் மொழிபெயர்த்து வெளியிடுங்கள். அவற்றைப் பரப்பும் பணியை நாங்கள் செய்கிறோம். வடமாநிலங்களில் கிராமம் கிராமமாகப் பெரியாரைக் கொண்டு செல்கிறோம்.

இணையதளங்களில் தேடினால் ஆங்கிலத்தில்கூட பெரியாரின் எழுத்துக்கள் கிடைப்பதில்லை. அந்தக் குறையைப் போக்கும் விதமாக தற்போது 'காட்டாறு' தோழர்களால் periyarwritings.org என்ற இணையதளம் உருவாக்கப் பட்டுள்ளது. முதற்கட்டமாக பெரியாருடைய 30 கட்டுரைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. அவை நமக்கு இலவசமாகவே கிடைக்கின்றன. ஆங்கிலத்தில் பெரியாரின் கட்டுரைகளை வெளியிடும் பணி இனி தொடர்ச்சியாக நடைபெறும் என்றும் இந்தியிலும் மொழி பெயர்த்து வெளியிடும் பணியைத் தொடங்க உள்ளதாகவும் தெரிவித்தனர். அகில இந்திய அளவில் பெரியாரைக் கொண்டு செல்ல அடிப்படையான பணிகள் இவை.

பெரியாரின் ஆங்கிலக் கட்டுரைகள் அடங்கிய இந்த இணையதளத்தை அறிமுகப்படுத்தவும், பகுஜன் பண்பாட்டைப் பரப்பும் காட்டாறு ஏட்டின் இரண்டாம் ஆண்டுத் தொடக்க விழாவான இன்று - அந்த ஏடு இதுவரை வெளியிட்டுள்ள 12 இதழ்களைப் பற்றிய விமர்சனங்கள் அடங்கிய - திறனாய்வு மலரை வெளியிடவும் என்னை அழைத்த தோழர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்மை அடிமைப்படுத்திய ஜாதியும், மதமும் அகில இந்திய அளவில் பரந்துள்ளன. அகில இந்திய அளவில் வலைப்பின்னலாக ( All India Net work) இயங்குகின்றன. எனவே ஜாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்புப் பண்பாட்டுப் புரட்சியை கடமையாக ஏற்றுள்ள நாமும் அகில இந்திய அளவில் ஒருங்கிணைந்து இயங்க வேண்டும். அதற்கான முயற்சிகளை ஃபார்வர்டு ப்ரஸும் காட்டாறும் இணைந்து முன்னெடுக்க உள்ளன. திராவிடர் இயக்கத் தலைவர்களும் தோழர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Coimbatore, Tamilnadu
24.10.2015

**Pramod Ranjan**
Consulting editor, Forward Press
New Delhi.



அதி அசுரன்

# என் தங்கம்: என் இழிவு

“தங்கம் தொடர்பான ஆக்கபூர்வமான, புதுமையான திட்டங்களை நாம் தொடங்கி இருக்கிறோம். இது ஒரு மிகப்பெரிய தொடக்கம் ஆகும். இந்தியாவில் 20 ஆயிரம் டன் தங்கம் எந்தப் பயன்பாடும் இன்றி முடங்கிக் கிடக்கிறது. அதனால்தான் இந்தியா ஏழை நாடாக இருக்கிறது. சில சரியான நடவடிக்கைகளை எடுத்தால் இந்தியா ஏழை நாடாக இருக்க வேண்டிய நிலைமாறும்.”

இந்தியாவின் பிரதமர் மோடி கடந்த 06.11.15 அன்று மேற்கண்டவாறு அறிக்கை விடுத்துள்ளார். தங்க டெபாசிட் திட்டம், தங்க பத்திரங்கள் சேமிப்புத்திட்டம், தங்க நாணயங்கள் விற்பனை என மூன்று திட்டங்களையும் அறிவித்துள்ளார். இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழிற்துறையின் கேபினட் அமைச்சர் நிர்மலா சீதாராமன்,

“கடந்த சில ஆண்டுகளில் தொழிற்துறை மற்றும் வர்த்தகத்தில் பற்றாக்குறை நிலவுவதற்கு தங்க இறங்குமதி 30% காரணமாக உள்ளது”

என்று தெரிவித்துள்ளார். இந்தியாவில் பெட்ரோல், டீசலுக்கு அடுத்தபடியாக மிக அதிகமான அந்நியச்செலாவணி செலவாவது தங்க இறக்குமதிக்காகத்தான். அதாவது நம்நாட்டுப் பொருளாதாரம் வெளிநாட்டுக்குக் கொள்ளை போவதற்கு முக்கியமான காரணம் தங்க இறக்குமதி ஆகும்.

பா.ஜ.க. அரசாங்கம் மட்டுமல்ல கடந்தமுறை ஆட்சியில் இருந்த அரசும் இதையே கூறியது. காங்கிர ஆட்சியின் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கடந்த 16.07.2013 அன்று ஜெய்ப்பூரில் செய்தியாளர்களிடம்,

“இந்திய மக்கள் ஓராண்டுக்கு தங்கம் வாங்குவதை நிறுத்தினால் இந்திய ரூபாயின் மதிப்பு உயரும். 3 இலட்சம் கோடி ரூபாய் அன்னியச் செலாவணி கையிருப்பாகக் கிடைக்கும்”

என்றார். இப்படித் தொடர்ச்சியாக எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இந்தச் சிக்கலைப் பேசுகின்றன. ஆனால் சிக்கலைச் சரி செய்ய வேண்டுமானால், இந்து மதம் உருவாக்கி வைத்துள்ள வேதப்பண்பாட்டை எதிர்க்க வேண்டும். தகர்க்க வேண்டும். அந்தத் துணிவு எந்த அரசுகளிடம் என்றுமே வரப்போவதில்லை.

மக்களிடம் வீடுகளில் உள்ள தங்கத்தை ஆக்கப்பூர்வமான திட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அரசு எண்ணுவது பாராட்டுக்குரியதுதான். ஆனால் தங்கம் வீடுகளில் மட்டும் இல்லை. கோவில்களில் அதைவிட அதிகமாகக் குவிந்துள்ளது. மக்களிடம் உள்ள தங்கத்தைப் பயன்படுத்த மூன்று திட்டங்களை அறிவித்த பிரதமர் மோடி, கோவில்களில் உள்ள தங்கத்தை வெளிக்கொண்டுவர எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை.

## கோவில் தங்கத்தை நகைச்சந்தைக்குத் திருப்ப வேண்டும்

குருவாயூர் கிருஷ்ணன் ஆலயம், திருப்பதி வெங்கடேசுவரர் கோவில், பழனி முருகன் கோவில், சீரடி சாய்பாபா கோவில், மும்பை சித்திவிநாயகர் கோவில், காஷ்மீர் வைஷ்ணவி தேவி கோவில், அமர்நாத் கோவில், உத்ரகாண்ட் கேதார்நாத் கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சிதம்பரம் நடராஜர் கோவில், திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில், காசி விஸ்வநாதர் கோவில், பூரி ஜெகந்நாதர் கோவில், மதுரா கிருஷ்ணன் கோவில் போன்ற பெருங்கோடீசுவரக் கோவில்களே நாட்டில் நூற்றுக்கணக்கில் உள்ளன.

திருவிதாங்கூர் மன்னர் பரம்பரையின் பராமரிப்பில் இருந்த திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோவிலில் கடந்த ஆண்டு உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட் கணக்குத் தணிக்கை அதிகாரி வினோத்ராய் தலைமையிலான குழுவினர் ஆய்வு நடத்திபோது அக்கோவிலில் உள்ள இரகசியப்

பெட்டகங்களில் 1 இலட்சம் கோடிக்கும் அதிகமான தங்க, வைர நகைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

திருப்பதி கோவிலுக்குச் சொந்தமான 3 டன் தங்க நகைகள் கோவில் நிர்வாகத்தால் வங்கிகளில் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் நன்கொடையாகவும், உண்டியல் வழியாகவும் சுமார் 350 கிலோ தங்கம் திருப்பதி கோவிலுக்கு வந்துகொண்டே இருக்கிறது. பத்மநாபசாமி கோவில் போன்ற ஒரு கோவிலிலேயே 1 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்பிலுள்ள தங்க, வைரங்கள் இருக்குமானால், நூற்றுக்காணக்கான கோவில்களில் முடங்கியுள்ள தங்கங்களின் மதிப்பை நம்மால் கணக்குப் போட்டுக்கூடப் பார்க்கத் தெரியாது.

எனவே முதலில் கோவில்களில் வீணாக முடங்கியுள்ள தங்கத்தை மக்களின் பயன்பாட்டுக்குத் திருப்பவேண்டும். அணிகலன்களுக்காக தங்கத்தை இறக்குமதி செய்து இந்திய நாட்டின் பொருளாதாரத்தை வெளிநாட்டுக்குக் கொட்டிக் கொடுப்பதைவிட, கோவில்களில் கொட்டிக் கிடக்கும் தங்கத்தை வெளிக்கொணர்ந்து நகைச்சந்தையில் விற்பனைக்கு விடலாம்.

ஏதோ ஒரு துணிச்சலான - அறிவுள்ள அரசாங்கம், தொடர்ச்சியாக ஒரு 10 ஆண்டுகளுக்கு தங்கத்தை இறக்குமதி செய்யாமல் இந்தியாவில் உள்ள கோவில்களின் தங்கத்தை நகைச்சந்தைக்கு அனுப்புகிறது என்று வைத்துக்கொள்வோம். உறுதியாகப் பொருளாதார ரீதியாக இந்தியா மிகப்பெரும் முன்னேற்றத்தைக் காணும். நமது அந்நியச் செலாவணி கொள்ளை போகாமல் மக்கள்நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டால் ஒட்டுமொத்த இந்தியத்துணைக்கண்ட மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும். ரூபாயின் மதிப்பும் உயரும்.

## அரசியல் புரட்சிக்குத் தடையாக பண்பாடு - பழக்க வழக்கம்

அறிவும் துணிவும் மிக்க, சுயநலமற்ற ஒரு சர்வாதிகார ஆட்சியிலோ அல்லது ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியிலோ இதுபோன்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்படலாம் என்றுதான் பொதுவாக நாம் எண்ணுவோம். ஆனால் அரசியலில் எந்தப் புரட்சி வருவதாக இருந்தாலும் அதற்கேற்ற சமூகச்சூழல் அமைந்திருக்க வேண்டும். ‘கோவில்களில் உள்ள தங்கத்தைப் பயன்படுத்தலாம்’ என்று சொல்வதற்கு ஏற்ற சமூகச்சூழல் இங்கு இல்லை. அடித்தட்டு மக்களிடம் உள்ள ‘தங்கமோகம்’ மதத்தோடும், மதம் உருவாக்கிய பண்பாட்டு, பழக்க வழக்கங்களோடும் பிண்ணிப்பிணைந்துள்ளது.

இந்திய மக்களைப் பொறுத்தவரை தங்கம் என்பது ‘வார்ப்பதற்கு எளிமையான ஒரு உலோகம்’ என்று புரிந்துகொள்ளப்பட்டதைவிட ‘புனிதமானது’ என்றுதான் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அந்தப் புனிதமான தங்கத்தில் செய்யப்பட்ட அணிகலன்களை அணிவதுதான் அழகு. அதுதான் பெண்ணிற்கு இலக்கணம் என்பன போன்ற சிந்தனைகளை இந்து மதம் சராசரி மக்களிடம் திணித்துள்ளது. இந்தியப் பொருளாதாரம் சீரழிவதற்கு முக்கியக் காரணம் இந்தப் பண்பாடுதான். இப்படிப்பட்ட மதப்பண்பாடுகளை உயிர்மூச்சாகக் கொண்டு வாழும் மக்களிடமிருந்து உருவாகும் எந்த அரசாங்கத்தாலும் தங்கச் சிக்கலைத் தீர்க்க முடியாது.

## தங்க மோகத்தைத் தூண்டும் இந்துமதப் பண்பாடு: மனு சாஸ்திரம்

மனுசாஸ்திரத்தின் சில ஸ்லோகங்கள் பெண்கள் அணிகலன்கள் அணிவதைக் கட்டாயமாக்குகின்றன. மனுசாஸ்திரத்தின் மூன்றாவது அத்தியாயம், 56 வது ஸ்லோகம்:

“எந்த வீட்டில் மாதர்கள் பூஷண (நகை) முதலியவற்றால் சந்தோஷமடைந்திருக்கிறார்களோ, அந்த வீட்டில் எல்லா தெய்வங்களும் சந்தோஷத்துடன் வசிக்கின்றார்கள். எந்த வீட்டில் அவ்வாறு பூஜிக்கப்படவில்லையோ, அந்த வீட்டில்செய்கிற காரியங்களெல்லாம் பலனில்லாமல் போய்விடுகின்றன.”

“59 வது ஸ்லோகம்: ஷேமத்தைக் கோரும் மனிதர்கள் எப்போதும் தன் வீட்டில் நடக்கும் விரதங்கள், கலியாணங்கள் இவை முதலிய விஷேஷ காலங்களில், தன் உடன்பிறந்தாள், முதலான மாதர்களை பூஷணம்(நகை), வஸ்திரம்(ஆடை), சாப்பாடு இவற்றினால் சந்தோஷப்படுத்த வேண்டியது.”

“பெண்களுக்கு நகை போட்டு அழகு பார்க்காவிட்டால் அவர்கள் உடலுறவுக்கு வரமாட்டார்கள். அப்படி வராவிட்டால் வாரிசு உருவாகாது” என்று இதே 3 வது அத்தியாயத்தில் 61 வது ஸ்லோகம் சொல்கிறது.

இப்படி மதம் தங்க நகைகள் வாங்குவதையும், அதில் தான் அழகும், பெருமையும், மகிழ்ச்சியும், உயர்வும் இருக்கிறது என்பதையும் மனரீதியாக தலைமுறை தலைமுறையாக நம் மனதில் திணித்துவிட்டது. நகைகளை அணியாத பெண்கள் அழகற்றவர்களாக ‘மூளி’களாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். உலக நாடுகளில் எல்லா நாட்டுப் பெண்களும் தங்க நகையோ அல்லது எதாவது ஒரு அணிகலனோ அணிந்தால்தான் அழகு என்ற எண்ணத்தில் தான் இருக்கிறார்களா? இல்லையே. முன்னேறிய நாடுகள் என்று சொல்லப்படும் அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகளில் நகை அணியாத அழகுப் பெண்களே இல்லையா? ( பெண்கள் என்றால் அவசியம் அழகாகத் தான் இருக்கவேண்டுமா? பெண்கள் அழகுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணமே மிகப்பெரும் வன்முறை அல்லவா? )

இப்படிப்பட்ட சா திரங்களாலும், சம்பிரதாயங்களாலும் ‘தங்கம்’ இந்திய மக்களின் வாழ்வில் நீங்கா இடம்பெற்றுவிட்டது. குழந்தை பிறந்தால் காது குத்துவது, மூக்கு குத்துவது - பூப்புனித நீராட்டு விழாவில் கிட்டத்தட்ட திருமண அளவிற்கு நகை வாங்குவது - திருமணம் - மறுவீடு - தாலி பிரித்துக் கட்டுவது - ஆடிச்சீர் - பொங்கல் சீர் - தலைத் தீபாவளி என்ற வரிசை 60 ஆம் கல்யாணம், 80 ஆம் கல்யாணம் வரை நீண்டு நமது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் ‘தங்கம்’ இடம்பெறுகிறது. இவை அனைத்தும் மதம் சார்ந்த பண்பாட்டு விழாக்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

## அக்க்ஷய த்ருதியை

விழாக்காலங்களில் நகை வாங்குவது என்ற பண்பாட்டுப்போதை முற்றிப்போய் - தங்கம் வாங்குவதற்கென்றே ஒரு விழாவாகவும் உருவெடுத்துள்ளது. தங்க நுகர்வுவெறியைத் தூண்டி, நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க, இந்துமதத்தின் மற்றொரு பண்டிகை தங்க வணிகர்களால் வளர்தெடுக்கப் பட்டுள்ளது. அதுதான் அக்க்ஷய திருதியை. அந்த நாளில் தங்கம் வாங்கினால் செல்வம்

கொட்டோ கொட்டு என்று கொட்டும் என்று மக்களின் மூளையில் விதைக்கப்பட்ட மூடநம்பிக்கையின் விளைவாக இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் தங்கத்தின் அளவு ஆண்டுக்குச் சராசரியாக 1000 டன் என உயர்ந்துள்ளது.

### தோழர் பெரியாரும் தங்க நகையும்

இந்துமதப் பண்பாட்டுக்கு எதிராக அனைத்துத் தளங்களிலும் போராடிய பெரியார் தங்கநகைச் சிக்கலிலும் மிகத் தெளிவான கருத்துக்களை முன்வைத்துள்ளார். பெண்களின் சுயமரியாதைக்கும், முன்னேற்றத்திற்கும் நகை அணியும் பழக்கம் எதிராக உள்ளது எனக் கூறுகிறார்.

“இங்கு படித்த பெண், படியாத பெண் எல்லோரும் பொம்மைகளாகவே இருக்கிறார்கள். அவர்கள் பெற்றோர்களும், கணவன்மார்களும் அவர்களது (பெண்களை) அழகிய பொம்மைத் தன்மையைக் கொண்டே திருப்தி அடைகிறார்கள். பெருமை அடைகிறார்கள். பெண்களைத் திருப்தி செய்ய, அவர்களை நல்ல பெண்களாக ஆக்க, விலையுயர்ந்த நகையும், துணியும் கொடுத்து, அழகிய சிங்காரப் பதுமையாக்கி விட்டால் போதும் என்று நினைக்கிறார்கள்.

பெண்கள் பெருமை, வருணனை ஆகியவைகளில் பெண்கள் அங்கம், அவயவங்கள், சாயல் ஆகியவைகளைப் பற்றி அய்ம்பது வரி இருந்தால், அவர்களது அறிவு, அவர்களால் ஏற்படும் பயன், சக்தி, திறமைப்பற்றி ஒரு ஐந்து வரி கூட இருக்காது. பெண்களின் உருவை அலங்கரிப்பது, அழகை மெச்சுவது சாயலைப் புகழுவது ஆகியவை பெண்கள் சமுதாயத்திற்கு அவமானம், இழிவு, அடிமைத்தனம் என்பதை ஆயிரத்தில் ஒரு பெண்ணாவது உணர்ந்திருக்கிறது என்று சொல்ல முடியுமா என்று கேட்கிறேன்.

அலங்காரம் ஏன்? மக்கள் கவனத்தை ஈர்க்கும்படியான நகை, துணி, மணி, ஆபரணம் ஏன்? என்று எந்தப் பெண்ணாவது பெற்றோராவது ‘கட்டின’ வராவது சிந்திக்கிறார்களா? பெண்கள் அஃறிணைப் பொருள் என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? தன்னை அலங்கரித்துக் கொண்டு மற்ற மக்கள் கவனத்தைத் தன் மீது திருப்புவது இழிவு என்றும், அநாகரிகம் என்றும் யாருக்கும் தோன்றாததற்குக் காரணம் அவர்கள் போகப் பொருள் என்ற கருத்தேயாகும். இது பரிதாபமாகவே இருக்கிறது...

நகைக்கும், துணிக்கும் போடும் பணத்தை பாங்கில் போட்டு குறைந்த வட்டியாவது வாங்கிக் குழந்தைப் பிறந்த உடன் அதை எடுத்து அந்த வட்டியில் ஒரு ஆள் வைத்தாவது அதைப் பார்த்துக் கொள்ளச் செய்தால், அன்பு குறைந்துவிடுமா? ...

சர்.இராமசாமி முதலியார் தங்கை சர்.ஏ.லட்சுமணசாமி முதலியார் போல் ஆக வேண்டும். சர். சண்முகம் தங்கை ஆர்.கே.வேங்கடசலம் செட்டியார் போல ஆக வேண்டும். குமாரராஜா தங்கை இராமநாதன் செட்டியார் போல், சிதம்பரம் செட்டியார் போல் ஆக வேண்டும். பொம்மைகளாக, நகை மாட்டும் ஸ்டாண்டுகளாக ஆகக் கூடாது என்கிறேன். எல்லாத் தொண்டுகளையும் பெண்கள் பார்க்க செய்ய முடியும்; உறுதியாய் முடியும் என்பேன். ஆனால், நகைப் பைத்தியம், துணி அலங்காரப் பைத்தியம், அணிந்து கொண்டு சாயல் நடை நடக்கும் அடிமை, இழிவு, சுயமரியாதை அற்ற தன்மைப் பைத்தியம் ஒழிய வேண்டும்.

டீசென்சி – சுத்தம் கண்ணுக்கு வெறுப்பில்லாத ரம்மியம் வேண்டாம் என்று நான் சொல்லுவதாக யாரும் கருதக்கூடாது. அது அவசியம் வேண்டும். ஆனால், அது அதிகப் பணம் கொண்ட, மக்கள் கவனத்தை ஈர்க்கத்தக்க பேஷன், நகை, துணி, வெட்டு போன்ற அலங்காரத்தால் அல்ல என்றும் (ளுஐஅயீடந) சாதாரண குறைந்த தன்மையில் முடியும் என்றும் சொல்லுவேன்.

நம் நாட்டுப் பெண்கள், மேல்நாட்டுப் பெண்களைவிடச் சிறந்த அறிவு, வன்மை, ஊக்கம் உடையவர்கள் ஆவார்கள். நம் சீதோஷண நிலை அப்படிப்பட்டது. அப்படி இருக்க ஒரு ருக்குமணி, ஒரு விஜயலட்சுமி என்கின்ற பார்ப்பனப் பெண்கள்தானா பொது வாழ்வில் ஈடுபடத்தக்கவர்களாக ஆக வேண்டும்? ஏன் நம்மவர்கள் ஏராளமாக வெளியில் வரக் கூடாது. இவர்களைத் தடுப்பது சீலை, நகைதுணி, அலங்கார வேஷம் அல்லாமல் வேறு என்ன?”

தோழர் பெரியார் – குடிஅரசு – 21.09.1946

“அரசாங்கத்திற்கு இன்னும் துணிவு வரவில்லை. துணிவு வந்தால் ஒரு பெண் மீது இத்தனை கிராம் தங்கத்திற்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்று தடை செய்யவேண்டும்.”

தோழர் பெரியார் – விடுதலை – 28.9.1971

### கோவில் தங்கத்தை ரிசர்வு வங்கிக்கு அனுப்புவோம்

இந்து மத சா திரங்கள் திணித்துள்ள தங்கமோகத்துக்கு நேர்எதிரான பெரியாரின் கருத்துக்களை, பெண்கள் இனம் ஏற்றுக்கொண்டால், கோவிலில் இருக்கும் தங்கமோ – வெளிநாட்டு இறக்குமதித் தங்கமோ எதுவும் நமக்குத் தேவைப்படாது. இக்கட்டுரையில் ஏற்கனவே கூறியிருப்பதைப் போல கோவில் தங்கத்தை நகைச்சந்தைக்கு அனுப்ப வேண்டியதில்லை. நேரடியாக ரிசர்வ் வங்கிக்கே அனுப்பிவிடலாம். ரிசர்வ் வங்கியில் உள்ள தங்கத்தின் இருப்பு அளவை அடிப்படையாக வைத்துத்தான் நாட்டின் பொருளாதார பலத்தை அளவிடுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எந்தப் புரட்சிகர அரசாங்கமும் அப்படி ஒரு நிலை எடுக்க வேண்டுமானால், அதற்கு முதலில் சமூகத்திலே மக்களிடையே ‘அழகு – தங்கம்’ ஆகிய இரண்டைப் பற்றியும் இந்து மதம் திணித்துள்ள மூடநம்பிக்கைகள் ஒழியவேண்டும். பெண்ணுக்கு நகை போட்டால் போதும், ஆனால் ஆணுக்கு பரம்பரைச் சொத்து போய்ச்சேரவேண்டும் என்ற மனுச்சிந்தனை ஒழிய வேண்டும்.

அழகு மட்டுமே நமது அடையாளம் என்று ஒவ்வொரு பெண்ணின் மனதிலும், அழகானவள் மட்டுமே பெண் என்று ஒவ்வொரு ஆணின் மனதிலும், மரபணுவிலும் ஏற்றிவைத்து, அப்படியே சிந்திக்க வைத்து, செயல்படவும் வைத்துக்கொண்டிருக்கும் இந்து மதத்தின் அடையாளமான நகை அணியும் பழக்கம் ஒழிக்கப்பட வேண்டும்.

நமது குழந்தைகளுக்கு நகை ஆசைகளை உருவாக்காதீர்கள். நகை போட்டுப் பழக்காதீர்கள். விழாக்களில் நகைகள் அணிந்து வருவதைத் தவிர்க்கத் தொடங்குங்கள். நாம் அணியும் நகைகளை வைத்து நம்மை மதிப்பவர்களின் மரியாதை நமக்கு வேண்டாம். சேமிப்புக்காக வேண்டுமென்றால் அவ்வளவு வசதி வாய்ப்பு உள்ளவர்கள் நிலத்தில் முதலீடு செய்து கொள்ளுங்கள். உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்க கூட்டுவிவசாயப் பண்ணைகளை உருவாக்குங்கள். கூட்டுத் தொழிற்சாலைகளை உருவாக்குங்கள்.




# உலகில் நடைபெறும் யுத்தங்களும் அதன் பின்னால் உள்ள அரசியலும்

விக்னேஷ் பிரபாகரன்
தமிழ் இளைஞர்கள் மாணவர்கள் கூட்டமைப்பு
கோவை

உலகில் பெரும்பாலான யுத்தங்கள் ஒடுக்கும் சமூகத்திற்கும் அவர்களால் ஒடுக்கப்படும் சமூகத்திற்கும் இடையேயான ஒடுக்கப்படும் மக்களின் விடுதலை சார்ந்த உரிமைக்கான போராட்டங்களாகவே இருக்கும். இதில் ஒடுக்கும் சமூகம் என்பவர்கள் உலகப் பெருமுதலாளிகள், மதவாதிகள், இனவாதிகள். இதில் மதவாதிகளுக்கும், இனவாதிகளுக்கும் பின்புலமாகச் செயல்படுவது உள்நாட்டு பன்னாட்டுப் பெருமுதலாளிகளே. உண்மையான பயங்கரவாதிகள் ஒடுக்கும் சமூகத்தைச் சார்ந்தவனே.

இதைத் தமிழீழ விடுதலை இந்திய சிறுபான்மை தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் மற்றும் உலகின் பிறபகுதிகளில் நடக்கும் யுத்தங்களுடன் ஆராய்ந்து பார்த்தால் புரியும். ஒடுக்கும் சமூகத்திடம் அதிலும் முக்கியமாக உலகப்பெரு முதலாளித்துவத்திடம் சமரசம் செய்து கொண்டு தங்கள் சொந்த நாட்டின் வளங்களை உலகமயமாக்கல் கொள்கையில் பன்னாட்டுப் பெருமுதலாளித்துவத்திற்குக் காவு கொடுத்து, சுய உரிமையைப் பெற்ற நாடுகளும் இருக்கின்றன இவை நிச்சயம் ஒடுக்கும் சமூகத்தின் அதிகபட்ச ஒடுக்கு முறைகள் மற்றும் சதிகளால் நிகழ்ந்தவையாகவே இருக்கும்.


இருப்பினும் சமரசமில்லாமல் தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் போராடும் விடுதலைப் போராட்டக் குழுக்களும் இருக்கின்றன. அப்படிச் சமரசமின்றிப் போராடிய ஒரு இனக்குழுவின் விடுதலை போராட்டக் குழுவே தமிழீழ விடுதலைப் புலிகள்.

உலகத்தின் ஒடுக்கும் சமூகத்திற்குச் சமமான பலத்துடன் எதிர்த்து நின்ற விடுதலைப்புலிகளை உலக ஒடுக்கும் வர்க்கம் ஒன்று சேர்ந்து அழித்தொழித்தது. அப்படி அழித்தொழித்தது மட்டுமில்லாமல் ஒடுக்கும் சமூகத்தின் நலனுக்காக இன்று வரை தமிழீழ மக்களுக்கு ஒரு நீதி கிடைக்க விடாமல் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது, இந்த அயோக்கிய ஒடுக்கும் சமூகம்.

உலகின் பெருமுதலாளித்துவம் தங்கள் நலனுக்காக எந்த எல்லைக்கும் சென்று வேலை செய்யும் என்பது உலகிற்கு அப்பட்டமாகத் தெரிகிறது. இதில் ஒடுக்கும் சமூகம் ஓரணியில் திரண்டு செயல்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் உள்ள பெரும்பாலானோர் சுயநலவாதிகளாக சுகபோகமாக பொதுநலமற்ற - அரசியல் விழிப்புணர்வற்ற - தமிழக வாழ்வுரிமைப் பிரச்சினைகள் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணிகள் மற்றும் அந்தப் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கான அடிப்படைச் சமூக அரசியல் விழிப்புணர்வு அற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டுள்ளனர்.

நிச்சயம் தமிகத்தில் உள்ள பெரும்பான்மையானோர் சமூக அரசியல் விழிப்புணர்வு பெற்ற பொதுநலவாதிகளாக மாற்றப்படும் போது மக்களுக்குள் உள்ள பிரிவினைகள் மறக்கப்பட்டு தமிழகத்திலும் மக்கள் விடுதலைக்கான உரிமைகோரும் புரட்சி வெடிக்கும். அது ஓர் அரசியல் புரட்சியாகவும் இருக்கலாம் அல்லது மாற்று வழியிலான புரட்சியாகவும் இருக்கலாம்.


கற்பி
ஒன்றுசேர்
புரட்சிசெய்
நவம்பர்
17
அருந்ததியர்
எழுச்சிநாள்
தலித் விடுதலைக் கட்சி
நடத்தும்
தியாகி செகுடந்தாளி
முருகேசன்
16-ம் ஆண்டு நினைவு நாளில்
சாதிய வன்கொடுமை
படுகொலைக்கு எதிராக...
வீர வணக்க அணிவகுப்பு
பேரணி பொதுக்கூட்டம்
நாள் : 17-11-2015, காலை 10.00 மணிக்கு
பேரணி துவங்கும் இடம் : கருமத்தம்பட்டி நால்ரோடு, பொதுக்கூட்டம் : முருகேசன் நினைவகம்


செகுடந்தாளி முருகேசா...
வருஷம் 16 ஆனாலும்
வழக்கில் நியாயம் கிடைத்தாலும்
இறந்தவர் மீண்டும் வருவாரா
இழப்பு மீண்டும் கிடைத்திடுமா
இனியும்
இக்கொடுமை நடவாமல்
அணிவகுப்போம்
அடிமை விலங்குடைக்க...
எழுச்சி உரை :
சமூக விடுதலைப் போராளி
டாக்டர். M.P.செங்கோட்டையன் B.E., DSS., அவர்கள்
மாநில பொதுச் செயலாளர்
விழுந்த பலிகளை கணக்கெடுப்போம்,
விடுதலைப்போரில் கடனடைப்போம்...
DLP
இவண்
தலித் விடுதலைக் கட்சி
தொடர்புக்கு : 9442077101, 9095498567, 9487925081, 7502626216, 9659550336, 9842573315, 9715107943, 9965970514

விழாவுக்கு அடுத்த தலைமுறைக் களப்போராளிகளை அழைப்பது என முடிவு செய்தோம். அதன்படி புதுடில்லியில் இந்துமதவாதச் சக்திகளுக்குப் பெரும் சவாலாகவும் – வடஇந்தியாவில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினரின் ஒருங்கிணைப்பில் உண்மையாகவே அக்கறைகொண்டு பணியாற்றி வரும் ஃபார்வர்டு ப்ரஸ் என்ற ஏட்டின் பொறுப்பாளர்களை வரவழைக்கலாம். தமிழ் ஈழ விடுதலை, தமிழ்நாட்டு உரிமைகள், ஜாதி ஒழிப்பு, பெண் விடுதலை ஆகிய முக்கியத் தளங்களில் சமரசமின்றிப் போராடும் தமிழ் இளைஞர்கள் மாணவர்கள் கூட்டமைப்பு மாணவர்களை வரவழைக்கலாம் என எண்ணினோம். இரண்டு தரப்பிலும் நமக்கு ஏற்கனவே தொடர்புகள் இருந்ததால் நமது எண்ணம் நிறைவேறியது.

முதல் நிகழ்வாக www.periyarwritings.org இணையதளம் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தத் தளத்தின் வடிவமைப்புப் பணிகளை, மிகவும் நெருக்கடியான பணிச்சுமைகளுக்கிடையே உரிய நேரத்தில் தமது சொந்தப் பணிபோலக் கருதி முடித்துக்கொடுத்தவர் தோழர் கீற்று இரமேஷ் ஆவார். எனவே அவர்தான் அந்தத் தளத்தை வெளியிடவும் உரிமை பெற்றவர் என்பதால் அவரே தளத்தைத் தொடங்கி வைத்தார்.

அடுத்த சில நிமிடங்களில், காட்டாறு திறனாய்வு மலர் வெளியிடப்பட்டது. புதுடில்லி ஃபார்வர்டு ப்ரஸ் ஏட்டின் பொறுப்பாசிரியர் தோழர் ப்ரமோத் ரஞ்சன் மலரை வெளியிட, தமிழ் இளைஞாக்ள மாணவர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் வீ.பிரபாகரன் பெற்றுக்கொண்டார்.

தோழர் பிரமோத் ரஞ்சன் நிகழ்ச்சியில் பேசும் உரையை முன்கூட்டியே நமக்கு அனுப்பியிருந்தார். புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் ஆய்வு மாணவரும் நமது தோழருமான மணிவண்ணன் இந்தியில் இருந்த தோழர் பிரமோத் ரஞ்சனின் உரையைத் தமிழில் மொழிபெயர்த்து நமக்கு அனுப்பியிருந்தார். அந்த உரையை முழுமையாக தோழர் பொள்ளாச்சி விஜயராகவன் படித்துக் காட்டினார். அந்த உரையின் சுருக்கத்தை மட்டும் ஆங்கிலத்தில் தோழர் பிரமோத் ரஞ்சன் நிகழ்வில் பேசினார்.

தோழர் பிரமோத் ரஞ்சன் பேசுகையில், தமிழ்நாட்டில் உள்ள பெரியார் இயக்கங்கள் அனைத்தும் செய்து வரும் பல முக்கியப் பணிகளைப் பட்டியலிட்டுப் பாராட்டினார். குறிப்பாக, “அய்யா வீரமணி, தோழர்கள் கொளத்தூர் மணி, கோவை இராமக்கிருட்டிணன், ஆனைமுத்து, சுபவீ ஆகியோருக்கு ஒரு வேண்டுகோள். நீங்கள் பெரியாரின் எழுத்துக்களை ஆண்டுக்கு ஒரு 100 பக்கங்களையாவது இந்தியில் மொழிபெயர்த்துக் கொடுங்கள். அவற்றை வடமாநிலங்கள் முழுவதும் கிராமம் கிராமாகக் கொண்டு செல்லும் பொறுப்பை ஃபார்வர்டு ப்ரஸ் செய்து முடிக்கும்” என்ற வேண்டுகோளை முன்வைத்தார்.

தோழர் பிரபாகரன் பேசுகையில், “இன்னார்தான் எழுதவேண்டும், இன்னாரெல்லாம் எழுதக்கூடாது – இப்படித்தான் எழுத வேண்டும், இப்படியெல்லாம் எழுதக்கூடாது என்பது போன்ற விதிகளை உடைத்து – அனைவரையும் எழுத வைத்தது காட்டாறு. பல புதிய மாணவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கிறது காட்டாறு” என கருத்துரை ஆற்றினார். அமெரிக்காவிலிருந்து காட்டாறு ஆசிரியர் குழுவின் தோழர் பிரபாகரன் ஸ்கைப்பில் திறனாய்வு உரையை நிகழ்த்தினார்.

தோழர்கள் புரட்சிக்கொடி, பெரியார்செல்வி, வேணி ஆகியோர் நிகழ்ச்சியை ஆங்கிலத்திலும், தமிழிலும் தொகுத்து வழங்கினர். சிறப்பு விருந்தினர்களுக்கு சிறப்பு செய்யும் நிகழ்வில், தோழர் பிரமோத் ரஞ்சன் அவர்களுக்கு பொள்ளாச்சி தோழர் தனலட்சுமி அவர்களும், தோழர் வீ.பிரபாகரன் அவர்களுக்கு தோழர் புரட்சிக்கொடி அவர்களும், தோழர் கீற்று இரமேஷ் அவர்களுக்கு தோழர் கௌரி அவர்களும் நினைவுப் பரிசை வழங்கிச் சிறப்பித்தனர். மேற்கண்ட நிகழ்வுகள் அனைத்தும் 1 மணி நேரத்திற்குள் முடிவடைந்தது.

12 மணி அளவில் தேநீர் இடைவேளைக்காக அனைவரும் கலைந்து சென்று 15 நிமிடம் கழித்து மீண்டும் அரங்கில் கூடினர். இந்நிகழ்வு முற்றிலும் விவாத அரங்கமாக நடந்தது. காட்டாறு ஏட்டில் மிக அதிகமான எதிர்வினைகளைப் பெற்ற தோழர் தமிழ்வாணனின் கட்டுரைகள் முதலில் விவாதிக்கப்பட்டன. பெரியாரியப் பெண்ணிய விடுதலை இயக்கம் என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் தமிழ்வாணன் வாசகர்களின் அனைத்துக் கேள்விகளுக்கும் பொறுமையாகவும், விளக்கமாகவும் பதில் அளித்தார். ஆசிரியர்கள், விவசாயக்கூலி, ஆலைத் தொழிலாளர்களாக உழைப்பவர்கள், மாணவர்கள் என பலதரப்புப் பெண்களும் தமிழ்வாணனின் கட்டுரைகளைப் பாராட்டிப் பேசினர். சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

சுற்றுச்சூழல் குறித்த கட்டுரைகளை எழுதிவரும் சுற்றுச்சூழல் ஆய்வு மாணவர் தோழர் கிருபா நந்தினியின் கட்டுரைகள் குறித்த கேள்வி பதிலும் மற்றும் காட்டாற்றில் வெளியான அனைத்துக் கட்டுரைகள் குறித்தும் விவாதிக்கப் பட்டன. திறனாய்வு மலரில் கட்டுரை எழுத மறந்தவர்கள் பலர் நேரில் இந்த விவாத அரங்கில் பங்கேற்று அய்யங்களை எழுப்பி, விளக்கங்களைப் பெற்றனர். பாராட்டுக்கள், எதிர்ப்புக்கள், ஆலோசனைகள் என அனைத்துமே கிடைத்தன. திட்டமிட்டபடியே இந்த நிகழ்வு ஒருவர் மட்டுமே பேசி பார்வையாளர்கள் அனைவரையும் தூங்கவைக்கும் நிகழ்வாக இல்லாமல் – பார்வையாளர்கள் அனைவரையும் உற்சாகத்துடன் நிகழ்வில் பங்கேற்க வைக்கும் நிகழ்வாக அமைந்தது.

காட்டாறு எந்த ஒரு தனிநபரையும் முன்னிலைப் படுத்தாது. தனிநபர் தலைமை என்ற முறையின் மீதே நம்பிக்கை அற்றது. கூட்டுப்பொறுப்பு, கூட்டுப்பணியாளர்கள் என்ற முறையில் இயங்கும். நாம் இதுவரை செய்து வந்த பணிகள் எவையும் தனிப்பட்ட எந்த ஒருவராலும் நடந்தவை அல்ல. அனைத்துமே கூட்டு உழைப்பின் விளைச்சல்தான். இது ஒரு தனி அமைப்பாக இயங்கும் திட்டமும் இல்லை. காட்டாறில் இணைந்துள்ளவர்கள் யாரும் ஜாதி, மத அமைப்புகளைத் தவிர வேறு எந்த ஒரு அமைப்பிலும் இணைந்து பணியாற்றலாம். திராவிடர் இயக்கங்களின் தலைமைகள், தலைவர்கள், தோழர்கள் அனைவருமே காட்டாற்றுக்கு உற்ற தோழமைச் சக்திகள் தான். தனிநபர் தலைமை என்ற முறையின் மீது நமக்கு மாற்றுக் கருத்து உண்டு. ஆனால் நமது அணுகுமுறைதான் சரியானது என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. இது ஒரு பரிசோதனை முயற்சி என்று அறிவிக்கப்பட்டது.

காட்டாற்றின் அடுத்த இலக்காக ‘குடிஅரசுப் பள்ளிகள்’ அறிவிக்கப்பட்டது. பெரியாரின் எழுத்துக்கள், பேச்சுக்களை முழுமையாகப் படிப்பது – பிறரையும் படிக்க வைப்பது என்ற பணியை குடி அரசுப் பள்ளிகள் என்ற பெயரில் செயல்படுத்தலாம் என முடிவு செய்யப்பட்டது. காட்டாறு குழுவைத் தவிர வேறு யார் வேண்டுமானாலும் இந்தப் பெயரைப் பயன்படுத்தி பெரியாரியலைப் பரப்பலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

பொள்ளாச்சி விஜயராகவன், டாக்டர் பெரியார் செல்வி, பொறியாளர் அ.ப.சிவா, சேவூர் செந்தில்குமார், திருப்பூர் வேணி, சண்முகம், பாலு, மணிகண்டன், ஜீவாநகர் குமார், நகுலன், பிரசாத், பல்லடம் விஜயன், நாராயணமூர்த்தி, சுக்கம்பாளையம் வடிவேல், மணிகண்டன், அரசூர் சற்குணம், கோபி இரவி, மடத்துக்குளம் மோகன், ஆசிரியர் ஜோதி, கடத்தூர் காந்தி, உடுமலை மலரினியன், பெதப்பம்பட்டி குணா, செம்பட்டி தேவகி, ஆத்தூர் விஜயலட்சுமி, பெரியகுளம் குமரேசன், தாராபுரம் பூங்கொடி, ஒட்டன்சத்திரம் பெரியார்நம்பி, வழக்கறிஞர் தாராபுரம் குமார், சி.இராவணன் ஆகிய தோழர்கள் நிகழ்வுகள் சிறக்கப் பல்வேறு பிரிவுகளில் கடமையாற்றினார்கள்.

இரண்டு மணி நேரத்திற்குள் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. இறுதியாக சுவையான சத்தான மாட்டிறைச்சி விருந்து




24
2015
கோவை
காட்டாறு
திறனாய்வு விழா

